janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்


# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 நவம்பர் 14 - நவம்பர் 20 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 32





உத்வேகமூட்டும்
**ரஷ்யப் புரட்சி**
மனித சமுதாயத்தைப் பற்றிய நமது புரிதலை ரஷ்யப் புரட்சி அளவிற்கு மாற்றியமைத்த வரலாற்று >>>
ப 08



விவசாயிகளின் தோழமை
**டாக்டர் வே.துரைமாணிக்கம்**
எளிமையின் அர்த்தம் என்ன என்பதை சிலரது மரணம் நமக்கு புரிய வைத்து விடுகிறது. தோழர் வே.துரைமாணிக்கம் >>>
ப 03



திரைவிமர்சனம்
**ஜெய்பீம்**
ஜெய்பீம் என்பது அன்பு, ஜெய்பீம் என்பது மாற்றம், ஜெய்பீம் என்பது உண்மை, ஜெய்பீம் என்பது வெற்றி, ஜெய்பீம் என்பது வெளிச்சம் >>>
ப 15



## வடகிழக்கு பருவமழை தீவிரம்: சென்னை முழுவதும்

# மழை வெள்ளம்



## தமிழக முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு உடனடி நடவடிக்கை

**தமிழகத்தில் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், பல மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்து வருகிறது.**

சென்னையிலும், தமிழகத்தின் பலமாவட்டங்களிலும்நவ.6நள்ளிரவு முதல் தொடங்கிய மழை பல நாட்கள் தொடர்ந்து விட்டு விட்டு பெய்தது. இதன் காரணமாக, சென்னை உள்பட பல மாவட்டங்களில் எங்கு திரும்பினாலும் வெள்ளகாடாக காட்சியளித்தன. தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மேலும், சென்னையின் முக்கிய சுரங்கப்பாதைகள் வெள்ளத்தில் மூழ்கின. பல பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் மழைநீர் புகுந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குளாகியது.

மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் களத்தில் இறங்கி ஆய்வு செய்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரண உதவிளையும்செய்து, மீட்பு பணிகளை முடுக்கி விட்டார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் மீட்பு படையினர் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று தங்க வைக்கப்பட்டனர்.

மாநில அமைச்சர்களும் பல மாவட்டங்களில் மழை பாதித்த இடங்களை பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுத்தனர்.

மாநிலம் முழுவதும் மழை பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப் படுத்த தமிழக அரசு, மாவட்ட வாரியாக குழுக்களை அமைத்துள்ளது.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் 20ம் தேதி தொடங்க வேண்டிய வடகிழக்கு பருவமழை, சற்று தாமதமாக தொடங்கியது. இருப்பினும் எதிர்பாராத அளவுக்கு கொட்டித் தீர்த்த மழையால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்கள் மழை நீரால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பல ஊர்கள் துண்டிக்கப்பட்டுள்ளது. சென்னையை சுற்றியுள்ள அனைத்து ஏரிகளும் நிரம்பி வழிகின்றன. அதனால், பாதுகாப்பு கருதி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், அடையாறு ஆறு உள்ளிட்ட பல ஆறுகளில் தண்ணீர் ததும்பி செல்லுகின்றன.

மேலும், வட கிழக்கு பருவ மழைக் காலம் 2022 ஜனவரி வரை உள்ளதால் அடுத்தடுத்த காற்றழுத்த தாழ்வுகள் அல்லது புயல்கள் உருவாக வாய்ப்புள்ளதால் பொது மக்கள் விழிப்போடு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த ஆண்டு தமிழகத்துக்கு அதிக அளவில் மழை பெய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் அக்டோபர் முதல் தேதியில் இருந்து நவ.8 வரை பெய்த வடகிழக்கு பருவமழையில் தமிழகம் முழுவதும் சராசரியாக 43 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது. சென்னையில் 40 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது.

சென்னை உள்பட பெரும்பாலான மாவட்டங்களில் பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டன.

# வெள்ள நிவாரணப் பணிகளில் முனைப்புக் காட்டுக!

## கட்சி உறுப்பினர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரமாகி, தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. சென்னை பெருநகரத்தை சுற்றிலும் உள்ள நீர் தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன. செம்பரம்பாக்கம், புழல், சோழவரம், பூண்டி ஏரிகளுக்கு வரும் உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் சென்னை பெருநகரின் தெருக்களிலும், சாலைகளிலும் தண்ணீர் தேங்கியுள்ளது. இத னால் மக்கள் இயப்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிவாரணம் வழங்குவதிலும், சாலைகளில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றுவதிலும் தமிழ்நாடு அரசு முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. முதலமைச்சரும், அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் களப்பணியாற்றி வருகிறார்கள்.

காவிரிடெல்டாமாவட்டங்களிலும், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும் பெய்து வரும் கன மழையால் குடிசை வீடுகள், சாதாரண சுவர்கள் உட்பட அரசால் கட்டப்பட்ட பழைய தொகுப்பு வீடுகளும் இடிந்து விழுந்து வருகின்றன. குறுவை சாகுபடி விளைந்து அறுவடை பணிகள் தொடங்கிய நிலையில் பெய்து வரும் கனமழை இயல்பான அளவை விட மிகக் கூடுதலான அளவில் தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், அறுவடைக்கு காத்திருந்த நெற்பயிர்களும் மழை நீரில் மூழ்கியுள்ளது.

குறுவை அறுவடை முடிந்த பகுதிகளில் தாளடி சம்பா பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. நடவு செய்து 15 நாட்கள் தாண்டாத நிலையில் தாளடி சம்பா பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

இயற்கை பேரிடர் காரணமாக பொதுமக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் என அனைத்துத் தரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். இந்தத் துயரம் மிகுந்த, பேரிடர் காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைகளும், உறுப்பினர்களும் நிவாரணப் பணிகளை தீவிரமாக்க வேண்டும். மழை வெள்ளப் பாதிப்புகள் குறித்து கள விசாரணை நடத்தி, உரிய அரசு அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு சென்று, நிவாரணம் பெற்றுத் தருவதில் அரசுடன் ஒத்துழைத்துச் செயல்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அப்டேட்ஸ் 10 - 16



**நவ.21** எஸ்.வி.காட்டே நினைவு நாள்



**நவ.21** ஜி.அதிகாரி நினைவு நாள்



**நவ.23** எஸ்.எஸ். தியாகராஜன் நினைவு நாள்



**நவ.24** பிடெல் காஸ்ட்ரோ நினைவு நாள்

**ஜனசக்தி**

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ.500/-
2 ஆண்டுச் சந்தா ரூ.1000/-
ஆயுள் சந்தா ரூ.5000/-

Janasakthi Trust
A/c no 108302000009999
IFSC no: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai 600004

ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
142/16 ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேடடை, சென்னை - 600014
✆: 9444331138

## எதிரும் புதிரும்

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்
- அண்ணாமலை



தமிழகத்திறகு மோடி செய்த துரோகத்திற்கு ஆயிரம் முறை மன்னிப்பு கேட்க வேண்டும்

## இடைத் தேர்தலுக்குப் பின் பெட்ரோல் - டீசல் விலை குறைப்பு



ஜி.எஸ்.டி.க்குள் சென்றால்தான் விலை குறையணுமுன்னு அவசியமில்லை. டெபாசிட் போனாலும் விலை தானாக குறையும்.




# பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும்! – 8

**பேரன்புமிக்க தோழர்களே!**

**இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட வெள்ளையர் ஆட்சிக்கும், இன்று நம்மை கடந்த ஏழு ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் மோடி தலைமையிலான ஆட்சிக்கும் வேறுபாடுகள் உண்டா?**

வெள்ளையர்கள் மதக் கலவரங்களை தூண்டி இந்து – முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி தங்களின் சுயநல அரசியலை மேற்கொண்டார்கள். நமது நாட்டின் செல்வங்களை கொள்ளை கொண்டு சென்றனர். கொடும் வரி விதித்து மக்களை சுரண்டி கொழுத்தார்கள்.

அத்தகைய கொடிய ஆட்சிக்கு எதிராக அப்போது என்ன நடைபெற்றது?

இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த கர்சன் பிரபு தம்முடைய ஒடுக்குமுறைக் கொள்கையின் ஓர் அங்கமாக வங்காளத்தை இந்து – முஸ்லீம் பகுதிகள் என்று இரண்டாகப் பிரித்தார்.

இது வங்காளதேசம் என்ற உயிரோடு கூடிய உடலை வாளினால் வெட்டியதைப் போல் இருந்தது.

நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டன. அப்போது பிரிட்டனில் ஆட்சிக்கு வந்திருந்த லிபரல் கட்சியினர் இந்த சம்பவங்களை கண்டு பயமடைந்து, அந்தக் காலனியில் சீர்திருத்தங்கள் செய்யப்போவதாக பேசினார்கள். வைசிராய் பதவியில் கர்சன் பிரபுவிற்குப் பிறகு வந்த மின்டோ பிரபுவும், இந்தியாவிற்கு பொறுப்பு வகித்த அமைச்சரான மார்லி பிரபுவும், இந்தியாவில் சட்ட மன்றங்களுக்குப் புதிய தேர்தல் முறையை ஏற்படுத் தினார்கள்.

இந்துக்களுக்கும் – முஸ்லிம்களுக்கும் இடையே பகைமையைத் தூண்டிவிட்டு மக்கள் இயக்கத்தின் ஒற்றுமையைப் பலவீனப்படுத்துகின்ற, திசை திருப்புகின்ற நோக்கத்தைப் பின்பற்றினார்கள்.

ஆனால், இந்திய தேச பக்தர்கள் அவர்களுடைய உள் நோக்கத்தை புரிந்து கொண்டார்கள்.

நம்மை ஆட்சி புரிவது யார்? என்ற தலைப்புடன் சிறு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அப்பிரசுரம் கீழ்க்கண்டவாறு இருந்தது.

“நம்முடைய கைத்தொழில்களை நசுக்கிய இந்த திருடர்கள், நம் நெசவாளர்களும், கொல்லர்களும் செய்துவந்த தொழிலை பறித்தவர்கள்.

தங்கள் சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு ஏராளமான பொருள்களை இங்கே இறக்குமதி செய்து நம்முடைய கடைகளில் நம்முடைய ஆட்கள் மூலமாகவே விற்பனை செய்பவர்கள். அதன் மூலம் நம்முடைய செல் வத்தை திருடி நம்முடைய உயிரைப் பறிப்பவர்கள். உண்மையாகவே நம்மை ஆட்சி செய்பவர்களாக இருக்க முடியுமா?

நம்முடைய வயல்களில் விளைந்த தானியத்தைக் கொள்ளையடித்துப் பசிக்கும், நோய்க்கும் விஷ ஜுரத்துக்கும் நம்மை ஆளாக்கி அழிக்கின்றவர்கள் உண்மையாகவே நம்மை ஆட்சி செய்பவர்களாக இருக்க முடியுமா?

நம்மீது புதிது புதிதாக வரிகளைச் சுமத்துகின்ற அன்னியர்கள் உண்மையாகவே நம்மை ஆட்சி செய்பவர்களாக இருக்க முடியுமா?

சகோதரர்களே! நீங்கள் எவ்வளவு பொறுமையோடு இருக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக இந்த வஞ்சகர்கள் உங்களை ஒதுக்குவார்கள்.

நாம் சொந்தக் கால்களில் நிற்போம். விடுதலை அடைந்திட என்ன வழிகள் என்னவென்று சிந்திப்போம்.

சகோதரர்களே பூமியில் நாம் தான் எல்லாமே!

அவர்கள் உழைத்து பாடுபடாமலேயே நமது பணத்தால் உண்டு கொழுக்கிறார்கள்.

அவர்கள் நம் இரத்தத்தைக் குடிக்கின்றார்கள். நாம் அதை சகித்துக் கொண்டிருப்பது ஏன்?

சகோதர இந்துக்களே! காளி, துர்க்கை, மகாதேவர், கண்ணன் மீது சபதம் செய்யுங்கள்.

சகோதர முஸ்லிம்களே அல்லாவின் மீது சபதம் செய்யுங்கள்! ஒவ்வொரு கிராமத்திலும் இந்துவும் – முஸ்லிமும் ஒன்றாகத் தாய் நாட்டுக்கு சேவை செய்வோம் என்று பிரகடனம் செய்யுங்கள்.

சகோதரர்களே எழுக, அன்னை இந்தியாவின் தகுதி மிக்க புத்திரர்களாக தாய் நாட்டுக்காக வீரத்தோடு போர் புரிந்து நம் உயிர்களை அர்பணிக்கக் கூடியவர்களாக விளங்குவோம்.

(ஜவர்கலால் நேரு, பக்கம்: 47, 48, 49)

> **கொடிய சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றி வருவது வெள்ளையர் ஆட்சியைக் காட்டிலும் வேறுபட்டதா?**
>
> **பெட்ரோல் – டீசல் – சமையல் எரிவாயு மூலம் பகி ரங்கமான முறையில் மக்களை கொள்ளையடிப்பது தொடருகின்றனவே!**

தோழர்களே, வெள்ளையர் ஆட்சி காலத்தில் தேசபக்தர்களால் வெளியிடப்பட்ட பிரசுரம், வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக வெளியிடப்பட்ட பிரசுரம் இன்று நாடு விடுதலை பெற்று 75 ஆம் ஆண்டைக் கொண்டாடி முடித்து விட்ட நிலையில், இன்று சுதந்திர நாட்டில் நம்மை ஆண்டு வரும் மோடியின் சர்வாதிகார கொடுங்கோல் ஆட்சிக்கு பொருந்தாதா?

அன்று ஆட்சியை எதிர்த்தவர்கள் மீது தேசத் துரோக குற்றம் சாட்டப்பட்டது. இன்றும் அது தானே நடந்து வருகின்றது.

அன்று கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது – இன்று பறிப் பது மட்டுமல்ல; கொல்லப் படுகி றார்கள்.

கோவிந்த் பன்சாரே (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர்), கல்புர்கி, நரேந்திர தபோல்கர், கௌரி லங்கேஷ் (முற்போக்கு பெண் பத்திரிகையாளர்) என்று ஒரு வர் பின் ஒருவராக நால்வரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆண் டுகள் பல கடந்தும் இன்று வரை குற்றவாளிகள் கைது செய்யப்படாத மர்மம் என்ன?

கொடிய சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றி வருவது வெள்ளையர் ஆட்சியைக் காட்டிலும் வேறுபட்டதா?

பெட்ரோல் – டீசல் – சமையல் எரிவாயு மூலம் பகிரங்கமான முறையில் மக்களை கொள்ளையடிப்பது தொடருகின்றனவே!

கொடிய கொரோனாவிற்குப் பின்னர் இன்று அனைத்து ரயில்களும் இயக்கப்படுகின்றன. ஆனால், அவைகளுக்குப் பெயர் சிறப்பு ரயில்கள் என்று பட்டம் சூட்டி, கட்டணத்தை உயர்த்தி வசூலிப்பதை கொள்ளை என்று கூறாமல் வேறு என்னவென்று கூறுவது?

மூத்தோருக்கு வழங்கப்பட்ட சலுகை கட்டணம் மறுக்கப்பட்டது ஏன்? முன்பதிவு இல்லாத ரயில் பெட்டிகளை ரத்து செய்தது ஏன்?

நடைமேடை கட்டணத்தை ரூபாய் ஐந்திலிருந்து ஐம்பது என்று அநியாயமாக உயர்த்தி வசூலிப்பதற்கு பகிரங்க கொள்ளை என்று கூறாமல் வேறு என்னவென்று கூறுவது?

நாட்டின் பிரதமர் நாடாளுமன்றத்தை அவமதிப்பதற்கு பெயர் தான் ஜனநாயகமா?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பலாம் – இவைகள் மூலம் வெள்ளையர் ஆட்சிக்கும், இன்றைய மோடி தலைமையிலான ஆட்சிக்கும் வேறுபாடுகள் இல்லை என்பது திரும்பத் திரும்ப நிரூபணமாகி வருகின்றது.

வெள்ளையர்கள் நம்நாட்டு மக்களை அடக்கி அடிமைப்படுத்தி ஆண்டு வந்தார்கள்.

நரேந்திர மோடி தனக்கு கிடைத்திட்ட அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டு மக்களை அடக்கி, அடிமைப்படுத்தி ஆட்சி நடத்துகின்றார்.

வெள்ளையரை நாட்டை விட்டு வெளியேறு என்ற முழக்கம் நாடு முழுவதும் எதிரொலித்தது.

மோடியே ஆட்சியை விட்டு வெளியேறு என்ற முழக்கம் எப்போது ஒலிக்கப் போகின்றது?

அன்றைய தேசபக்தர்கள் துர்க்கை, மகாதேவர், கண்ணன் மீது சபதம் செய்யுங்கள், அல்லாவின் மீது சபதம் செய்யுங்கள்,

அனைவரும் ஒன்றுபட்டு தாய் நாட்டுக்கு சேவை செய்வோம் என்று பிரகடனம் செய்யுங்கள் என்று கூறினர்.

நமது மதிப்புமிக்க தலைவர்கள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், தியாகி பி.சீனிவாசராவ், இலக்கிய பேராசான் ஜீவா இன்னும் எண்ணற்ற தலைவர்கள் பெயரால் எப்போது நாம் சபதம் ஏற்க போகிறோம்?

நாட்டு மக்களின் ஒட்டுமொத்த மக்கள் விரோத ஆட்சியை அகற்றிட இனியும் நாம் காலம் தாழ்த்திட வேண்டுமா?

காலம் செல்ல, செல்ல மோடியின் அரசு நாட்டு மக்களை மேலும், மேலும் வஞ்சிக்கும்.

ஒன்றிய ஆட்சியாளர்களின் வஞ்சகத்திற்கு முடிவு கட்ட வேண்டும்.

அத்தகைய முடிவை நாம் மட்டுமே செய்திட முடியாது என்பதல்ல, அதற்கான முன் முயற்சிகளை நாம்தான் மேற்கொள்ள வேண்டும்.

எப்படி மேற்கொள்ள போகின்றோம்? எப்படி திட்டமிடப் போகின்றோம்? எவ்வாறு செயல்படுத்திட போகின்றோம்? என்பன குறித்து முடிவுகள் மேற்கொள்ள நமது செஞ்சேனைப் படைகள் பாசறை நோக்கித் திரும்பட்டும்.

ஆம், உடனடியாக திரும்பட்டும். அடுத்து என்ன செய்ய வேண்டும்?

**அடுத்த வாரம் சந்திப்போம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



சி.மகேந்திரன்

# விவசாயிகளின் தோழமை டாக்டர் வே.துரைமாணிக்கம்

**எளிமையின் அர்த்தம் என்ன என்பதை சிலரது மரணம் நமக்கு புரிய வைத்து விடுகிறது. தோழர் வே.துரைமாணிக்கம் அவர்களின் வாழ்க்கை 76 ஆம் வயதில் சென்னை காவேரி மருத்துமனையில் நிறைவு பெற்றது.**

சிறு வயதிலேயே இயக்கத்திற்கு வந்து விட்டார். கிட்டதட்ட 60 ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் இருந்திருக்கிறார். அவரது மரணம் அவர் புதிதாக வீடு எதையும் கட்டவுமில்லை; வாங்கவும் இல்லை என்பதை நமக்கு அறிவிக்கிறது.

இவ்வாறான கம்யூனிஸ்டு ஊழியர்களின் வாழ்க்கையை நினைத்து மனம் பெருமிதம் கொள்கிறது. இதற்குரிய காரணங்களை ஆராயும் போது மனம் ஆம்பலாப்பட்டு என்ற புகழ் மிக்க கிராமத்திற்குள் விரைந்து செல்கிறது.

டாக்டர் வே.துரைமாணிக்கம் பிறந்தது, ஆம்பலாப்பட்டுக் கிராமத்தில். இந்த ஊர் ஆம்பல் மலரைப் போல சிவப்பு நிறம் கொண்டது. இதன் போராட்ட வரலாறு மிகவும் வித்தியாசமானது.

சுதந்திரத்திற்கு முந்தைய ஆண்டுகளில் இது மதுக்கூர் ஜமீனுக்கு சொந்தமாக இருந்தது. அந்த ஜமீனை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி, அதில் வெற்றிப் பெற்றவர்கள் இந்த சிவப்பு கிராமத்து மக்கள்.

ஆம்பலாப்பட்டை ஒட்டிய ஒரு சிறு கிராமம் செம்பாளூர். இதை ஒட்டி நடந்த வழக்கு மிகவும் முக்கியமானது. ஆம்பலாப்பட்டு கிராமமே தொடர்ந்து பல ஆண்டுகள் இந்த வழக்கை சந்தித்தது. எஸ்.ஏ.முருகையன், த. அய்யாவு, சி.சுப்பையன், சு.அருணாசலம், தி. சிதம்பரம், அல்லாடி அண்ணாமலை, வெ.அ.சுப்பையன், டி.காசிநாதன் ஆகியோர் தலைமறைவராகவும், சிறைச்சாலையிலும் பெரும் துயரங்களை சந்தித்தவர்கள். ஆம்பலாப்பட்டில் பண்ணையாருக்கு எதிராக நடைபெற்றப் போராட்டத்தில் வாட்டாக்குடி இரணியன் முழுமையாக பங்கேற்றுள்ளார். இவர் காவல் துறையால் கைது செய்யப்பட்ட போது, ஆம்பலாப்பட்டைச் சேர்ந்த ஆறுமுகமும் சுட்டுக் கொல்லப்பட்டார். டாக்டரின் அரசியல் நேர்மைக்கு இந்த பின்னணி முக்கிய காரணமாகும்.

அனைத்திந்திந்திய இளைஞர் பெருமன்றம் இவரை அரசியல் தலைவராக உயர்த்திக் காட்டுகிறது. அப்பொழுது நான் மன்னார்குடி அரசு கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பு நிறைவு செய்து விடுமுறை நாட்களில் இருந்தேன். அப்பொழுது டாக்டர் இளைஞர் பெருமன்றத்தின் தஞ்சை மாவட்டத் தலைவர். ஜி.கிருஷ்ணன் தஞ்சை மாவட்ட இளைஞர் மன்றத்தின் செயலாளர். ஒரத்தநாடு வட்டத்தின் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது. இந்த காலத்தில் தான் வே.துரைமாணிக்கம் அவர்களுக்கும் – எனக்கும் நெருக்கம் ஏற்பட்டது. அன்றைய உறவுகள் இனிமையானவை; மறக்க முடியாதவை.

டாக்டர் வே.துரைமாணிக்கம் அவர்களிடம் அமைந்த சுயக்கட்டுப்பாடு சுற்றியிருப்பவர்களிடம் ஆச்சரியத்தை உருவாக்கிவிடும். கிராமத்து பண்புகளில் ஊறிய சுயக்கட்டுப்பாடுகள் அவை யாரையும் எதிர்பார்க்காமல் தன் பணிகளை தானே செய்து கொள்ளும் இயல்பு கொண்டவர்.

கம்யூனிஸ்டுகளின் வாழ்க்கை முறை வித்தியாசமானது. ‘ஏறுனா ரயில் இறங்கினா ஜெயில்’ என்பது இவர்களுக்கென்றே உருவான பழமொழி. கம்யூனிஸ்டுகள் வாழ்க்கையில் பயணத்திற்கான பெட்டிகள் முக்கியமானவை. அவரிடம் ஒரு பை இருக்கும். சிறிது காலம் அது பையாகவும், பின்னர் சூட்கேசாகவும் அதுமாறியது. எங்கு சென்றாலும் எந்தப் பொருளையும் பிறரிடம் வாங்கித்தரச் சொல்ல மாட்டார். அவருக்கு தேவையான அனைத்தும் அந்தப் பையில் இருக்கும்.

அவரே துவைத்து அணியும் வெண்ணிற ஆடையும், சிவப்பு துண்டும். பளிச்சென்ற வெண்ணிற பற்களும் இவருக்கு சொந்தமானவை. இந்த அடையாளங்களுடன் எப்பொழுதும் கம்பீரமாக தோற்றம் தருவார். எல்லாவற்றிலும் மிகுந்த கவனத்துடன் செயல்படக் கூடியவர். எந்தப் பொருளையும் எளிதில் தொலைத்து விட மாட்டார். எந்த ஒரு பொருளையும் நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியவர்.



ஆடம்பரம் இல்லாது எளிமையுடன் இறுதி வரை வாழ்ந்து காட்டிய டாக்டர் வே.துரைமாணிக்கம் அவர்களின் வாழ்க்கை அனைவருக்கும் முன்னுதாரணமாகும்.

அவருடைய பழக்க வழக்கங்கள் அன்றைய விவசாயிகளின் வாழ்க்கையை ஒட்டி அமைந்திருக்கும். பல்துலக்கும் பிரஸ், பேஸ்ட் ஆகியவை அந்த காலத்தில் அவருக்கு சம்மந்தம் இல்லாதவை. அவர் பல் துலக்குவதைப் பலரும் வேடிக்கையாகப் பார்ப்பார்கள். அன்றைய பாலன் இல்லத்தின் அகற்ற நிலப்பரப்பில் ஒரு கிராமத்து விவசாயியின் மன நிலையோடு பல் துலக்கிக் கொண்டே நடப்பார். அன்று அவர் பல்துலக்கப் பயன்படுத்தியவை நாயுருவி குச்சி, வேப்பங்குச்சி.

அன்றாடக் கடமையை திட்டமிட்டு செயல்படுத்த கூடியவர். உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறைக் கொண்டவர். பொதுவாக கம்யூனிஸ்ட் தலைவர்களில் பலர் அப்படி இருப்பதில்லை. யோகாசனம், உடற் பயிற்சி ஆகியவற்றில் அதிக கவனம் கொண்டிருந்தார். அவரது கட்டுக் கோப்பான வாழ்க்கையை அந்த நேரத்தில் நிகழ்ந்த ‘விபத்து‘ ஒன்று மாற்றி அமைத்து விட்டது.

அந்த விபத்தை சதாரணமானவர்களால் கற்பனை செய்து கூட பார்க்க இயலாது. 13 ஆண்டுகளுக்கு முன் ஒரு மோட்டார் சைக்கிளில் செல்லும்போது சுவரில் மோதி, கீழே விழுந்து விட்டார். மண்டை ஓடு பாதிக்கப்பட்டு, மேற்பகுதி கழன்று விட்டதாகப் பின்னர் கூறினார்கள். உணர்வை இழந்து விடாமல் மண்டை ஓடும் கழன்று விடாமல் அதை அழுத்திக் கொண்டே, தஞ்சை தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு வந்து சேர்ந்தார்.

இதில் உயிர் பிழைத்தது அரிதினும் அரிது. இதில் இவரது தைரியத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும். யாரிடமும் இல்லாத தைரியம் இவரிடம் இருந்ததை இந்த நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.

வலிமை மிக்க நிலமீட்சி போராட்டம் எழுபதுகளில் தீவிரமடைந்தது. இன்றைய தலைவர்களில் பலர் அந்தப் போராட்டத்தில்தான் செயல்பட்டு தீவிரத்தைப் பெற்றார்கள். அது அவர்களுக்கு விரிந்த பயிற்சிக் களம். தஞ்சை மாவட்டத்தில் இந்த போராட்டத்தில் கொடிய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அதில்தான் விவசாய தலைமைத்துவப் பண்பை வே.துரைமாணிக்கம் வளர்த்துக் கொண்டார்.

காவிரி வயல் வெளிகளில் பிறந்து, அதன் நீர் பருகி வளர்ந்தவர். இதனால் காவிர் நீர் உரிமைப் பற்றி மிகவும் நன்றாக அறிந்தவர். நாகை நாடாளுமன்ற உறுப்பினர், தஞ்சை மாவட்டக் கட்சியை உருவாக்கியதில் அடிப்படையான பங்கைக் கொண்டிருந்த காத்தமுத்து முதன் முதலில் காவிரி நீர் உரிமையை நாடாளுமன்றத்தில் எழுப்பியவர்.

**தலைமுறை தலைமுறையாகப் போராடி வரும் இந்த போராட்டத்தில் விவசாய சங்கத்தின் செயலாளராக இருந்து இந்த கடமையை தீர்க்கமுடன் செய்தவர் டாக்டர் அவர்கள். இதில் மனிதச் சங்கலி முக்கியமானது. காவிரி நதி நீர் உரிமையில் நடுவர் மன்றம் அமைக்க இது முதல் படியாக அமைந்தது. ‘தென்னக நதிகளை இணைப்போம்‘ என்ற மிக முக்கியமான இயக்கம் நடத்தப்பட்டதில் டாக்டர் வே.துரைமாணிக்கத்திற்கு முக்கியமான பங்கு உண்டு.**

இவர் கல்லூரிக்கு செல்லாதவர். தனது சுய முயற்சியால் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டவர். ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள அவர் எடுக்கும் முயற்சிகள் பலவற்றை நான் அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். விவசாயம் சார்ந்த எந்த விபரங்களையும் தெரிந்து கொள்வதற்கு தயக்கமின்றி யாரிடமும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்.

இவ்வாறான பயிற்சிகளை இவர் விவசாய இயக்கத்தின் தியாகத் தலைவர் தோழர்கள் எம்.ஆதிமூலம், இரா. நல்லகண்ணு ஆகியோர்களிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியை மட்டுமே பெற்றிருந்த ஆதிமூலம் அவர்கள், ஆங்கிலத்தில் எந்த சட்டங்களையும் படித்துப் புரிந்து கொள்ளும் தகுதியை வளர்த்துக் கொண்டிருந்தார்.

ஜனசக்தியில் விவசாயப் பிரச்சனைகள் பற்றி கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஆயிரக்கணக்கில் கட்டுரைகளை எழுதியர் டாக்டர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு கட்டுரைக்கும் அவர் திரட்டும் தரவுகள், எடுத்து கொள்ளும் முயற்சி நம்மை பிரமிப்படைய வைத்துவிடும். இவ்வாறான கடின உழைப்பை இன்றைய தலைமுறை பழகிக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

ஒரு காலத்தில் மேடைப் பேச்சு மட்டுமே கம்யூனிஸ்டுகளுக்கு முக்கிய தகவல் தொடர்பு சாதனமாக இருந்தது. தங்கள் கருத்துகளை மக்களிடம் கொண்ட செல்ல பொதுக் கூட்ட மேடைகளை ஒரு முக்கியமான ஆயுதமாக கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

டாக்டர் மேடைச் பேச்சில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவரது தலைமுறை தோழர்கள் கே.பாலதண் டாயுதம், தா.பாண்டியன் ஆகியோரின் மேடைப் பேச்சில் ஈர்ப்புக் கொண்ட தலைமுறை. டாக்டர் தோழர் தா.பா. பாணியை பின்பற்றத் தொடங்கினார்.

டாக்டருக்கு கிடைத்த வாழ்க்கையின் வரம் என்று அவரது குடும்பத்தைச் சொல்லாம். டாக்டரின் அரசியல் வாழ்க்கைக்கு இறுதிவரை அவரது குடும்பம் துணையாக நின்றது. அவரது துணைவியார் ராஜேஸ்வரி கட்சி உறுப்பினர். விருந்தோம்பல் பண்பில் உயர்ந்து நிற்பவர். எந்த மாறுபாடும் இல்லாமல் கட்சி வாழ்க்கையில் டாக்டருக்கு இறுதி வரை உறுதுணையாக இருந்தவர்.

இந்த தம்பதியினருக்கு இரண்டு பெண்மக்கள். பெயர் வாலண்டிணா, சசிகலா, இவர்களின் கணவர்மார் பெயர் செல்லதுரை, முருகேசன். மிகவும் உயர்வான மனித நேயம் கொண்டவர்கள்.

இன்றைய நுகர்வு கலாச்சாரத்தின் எந்த ஆடம்பர மயக்கத்திலும் சிக்கிக் கொள்ளாதவர். வாழ்நாளில் பெரும் பகுதியை விவசாயிகளுக்காக அர்ப்பணித்துக் கொண்ட விவசாயிகளின் தோழமை. இறுதி மூச்சு வரை மக்கள் ஊழியனாக செயல்பட்டு வந்த தோழர் டாக்டர் வே.துரைமாணிக்கம் அவர்களுக்கும், அவரை பெற்றெடுத்து, நாட்டுக் வழங்கிய ஆம்பல் மண்ணுக்கும் நமது வீர வணக்கம்.

தொடர்புக்கு: **94441 16087**

## தேவதானம் சிபிஐ கிளை மாநாடு: இரா. முத்தரசன் பங்கேற்பு


விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மேற்கு ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேவதானம் கிளை மாநாடு நடைபெற்றது. க.தங்கமாரியம்மாள், க.பூங்கொடி, கா.முருகேசன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

அஞ்சலி தீர்மானத்தை ஐ.பால்ராஜ் வாசித்தார். ஒன்றிய துணை செயலாளர் கணேசமூர்த்தி வரவேற்று பேசினார. ஒன்றிய செயலாளர் வீராச்சாமி கொடியை ஏற்றி வைத்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார்.

மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசுகையில், அரசியல் அமைப்பு சட்டம், இந்திய மக்கள் அனைவரின் வாழ்க்கையும் மதிக்கக் கூடியதாகஇருக்க வேண்டும் என கூறுகிறது. நம் கட்சி அதை நிறைவேற்றுவதற்காகத்தான் பாடுபடுகிறது. கிராமப்புற மக்கள் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவே நம் கட்சி தலைவர் ஏ.பி. பரதன் அவர்கள் ,எங்களுக்கு மந்திரி பதவி வேண்டாம் ,கிராமப்புற மக்களுக்கு 100நாள் வேலை வேண்டும் என அமுலாக்கிய கட்சி நம் கட்சிதான். நம் உறுப்பினர்களின் கல்வி, அரசியல் , தத்துவ பயிற்சிக்கு கோபிசெட்டிபாளையத்தில் சிஎஸ் பள்ளி கட்டப்பட்டு வருகிறது. மற்ற பத்திரிக்கைகள் எல்லாம் நாட்டு நடப்பு செய்திகளை மட்டுமே வெளியிடுகிறது. நம் ஜனசக்தி நீட் தேர்வு உள்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வையும் , எது மக்களுக்கு நல்லது கெட்டது என்பதையும் வெளியிடுகிறது.

எனவே படிக்க தெரிந்த அனைவரும் ஜனசக்தி வாங்கி படிக்க வேண்டும். வெகுஜன அமைப்புகளை உருவாக்க வேண்டும். என்று பேசினார் . மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி அமைப்பு செயலாளர் வி.இரவி,ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

வடக்கு தேவதான செயலாளராக மாரிமுத்து, துணை செயலாளராக முருகேசன், தெற்கு தேவதான செயலாளராக கணபதி, துணை செயலாளராக தங்கமலை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.வெகுஜன அமைப்புகளுக்கும், ஜனசக்திக்தி,



தாமரைக்கும் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநில செயலாளிடம் 10 ஜனசக்தி வருட சந்தா வழங்கப்பட்டது. தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், தவிச அய்யணன், ஒன்றிய துணை செயலாளர் ஜெயராம் ஆகியோர்களும் கலந்தது கொண்டனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 32

# சென்னை பெருவெள்ளம் சொல்லும் சேதி!

பொதுவாக அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை வடகிழக்கு பருவமழை காலமாகும். சென்னையில் இந்த பருவமழையோடு இணைந்து காற்றழுத்த தாழியும் உண்டாகி கன மழை கொட்டி வருகிறது.

கடந்த 2015ல் சென்னை பெரு வெள்ளத்தின்போது, மிக அதிகப்பட்சமாக ஒரே நாளில் 29 செ.மீ மழை பெய்து அதிர்ச்சி அளித்தது. இப்போது 23 செ.மீ. மழை பெய்துள்ளது.

சமீப காலமாகவே அதிகரித்து வரும் பருவநிலை மாறுபாட்டாலும், வெப்பநிலை மாறுதலாலும் வழக்கத்துக்கு மாறான பெரும் மழைகளை பெரும் நகரங்கள் சந்தித்து வருகிறது.

2004 மற்றும் 2015ம் ஆண்டுகளில் சென்னை மாநகரம் பெருமழையைச் சந்தித்தது. ஹைதராபாத், டெல்லி, மும்பை, கொல்கத்தா, ஜெய்ப்பூர், ஜாம்ஷெட்பூர், குவகாத்தி, உத்தரகாண்ட், கேரள மாநிலங்களும் இந்த பெரும் மழையையும், வெள்ளத்தையும் எதிர்கொண்டன.

பொதுவாக மழைநீர் என்பது குடிநீரோடு சம்மந்தப்பட்டது. சென்னை பாரம்பரிய நீர்மேலாண்மை மிக்க மாநகரம் ஆகும். இதில் கொசஸ்தலை, அடையாறு, கூவம் ஆகிய மூன்று ஆறுகளும், ஆற்றை ஒத்த பக்கிங்காம் கால்வாயும் உள்ளன. இவற்றிற்கு நீர் அள்ளித் தரும் பல கிலோ மீட்டர் நீளம் உள்ள 16 வரத்துக் கால்வாய்களும் உள்ளன.

இவற்றிலிருந்து வரும் நீரை தேக்கி பயன்படுத்தும் விதத்தில் செம்பரம்பாக்கம், புழல், சோழவரம், பூண்டி என்ற நான்கு நீர்த் தேக்கங்களும் உள்ளன. இவற்றின் மொத்த கொள்ளளவு 11 டி.எம்.சி. (1 டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடி நீராகும்) அத்துடன் 4100 ஏரிகளும், குளங்களும் சென்னையையும், அதை சுற்றியும் அமைந்துள்ளன. இவற்றின் கொள்ளளவு 150 டி.எம்.சி. நீராகும். சென்னை நகரின் ஒரு மாத குடிநீர் தேவை ஒரு டி.எம்.சி. என்ற நிலையில் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் முக்கியத்துவத்தை நாம் உணர முடியும்.

இட நெருக்கடி உள்ள ஹாங்காங்கில் மழை நீரை சேமிக்க தை ஹாங் என்ற இடத்தில் மூன்று கால்பந்தாட்ட அளவில் ஒரு பாதாள கிடங்கை உருவாக்கி பெருமழை நீரை சேமிக்கின்றனர்.

2017ல் ஹேப்பி வேலி என்ற இடத்தில் குதிரை பந்தைய மைதானத்தின் அடியில் மற்றும் ஒரு பாதாள கிடங்கையும் உருவாக்கியிருக்கிறது. ஜப்பான் டோக்கியோவில் 2006ல் இதைப் போன்று நான்கு மடங்கு பெரிய நீர் பிடிப்பு பாதாள கிடங்கை உருவாக்கியுள்ளது.

சிங்கப்பூர் மழைநீர் சேகரிப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டு. அனேகமாக சீனாவில் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில சாலைகளிலும் கூட மழைநீர் சேகரிப்பு முறை சிறப்பாக உள்ளது. ஆனால், சென்னையில் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் அறிவிக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்த தகவல்களை சேகரித்தால் பூஜ்யம்தான் கிடைக்கும். எனவே, ஆறுகளில் லாரிகள் ஓடுவதும், லாரிகளில் நீர் கொண்டு சென்னையின் தாகத்தை தணிப்பதும் தொடர்கின்றன.

ஒன்றிய அரசின் சுமார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் தி.நகர் எடுக்கப்பட்டது. பல ஆயிரம் கோடி செலவில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலம் மழைநீர் வடிகிறதா என்றால் இல்லை. மாறாக நீர் மட்டம் பார்க்காது வடிகால் வசதிகள் உருவாக்கப்பட்டதால் இப்போது நீரில் மிதக்கிறது தி.நகர்.

தி.நகரில் தேங்கும் மழைநீரை முழுவதுமாக கால்வாய் வழியாக அடையாற்றில் கலக்காது மாம்பலம் கால்வாயை அகலப் படுத்தி அதை நிறைவேற்றி இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாக தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் கமிஷனே கதி என்று செயல்பட்ட கடந்த கால அதிமுக ஆட்சி அப்படி செய்யாததால்தான் இவ்வளவு பெரிய சேதத்தை சென்னை எதிர் கொண்டு வருகிறது.

மராமத்து நாயகன் எடப்பாடி ஆட்சியில் கட்டப்பட்ட தடுப் பணைகள் சிறு மழையைக் கூட தாங்காமல் உடைந்து போயின. மழை நீரை அறுவடை செய்தார்களோ இல்லையோ, நல்ல பண மழையை அவர்கள் அறுவடை செய்திருக்கிறார்கள் என்பது தெளிவாகி இருக்கிறது.

இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் கொடுக்கப் பட்டுள்ள இந்தச் சூழலில் அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கி சேவை யாற்றுகின்றன.

பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை இவற்றில் படகு சவாரி செய்து விளம்பரப் படம் போல நடித்து அதனை எப்படி எடுக்க வேண்டும் என்று கட்டளையிடுகிற காட்சிகளும் வெளிவந்துள்ளன.

அதிமுக ஆட்சி காலத்தில் நடந்த அனைத்து முறைகேடுகளுமே சென்னை வெள்ளம் சூழ்வதற்கான காரணமாக மாறியுள்ள நிலையில் அவற்றை நீதிக்கு முன்னால் நிறுத்தி குற்றாவாளிகளுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் தக்க தண்டனை வாங்கித் தருவதே ஒரே தீர்வு!

NEWAGE
Central Organ of the Communist Party of India
WEEKLY

தலையங்கம்
(நவ. 07 - நவ. 13)

# சொல் வேறு, செயல் வேறா?

வனம், கடல் சட்டங்களில் பிரதமர் திருத்தம் செய்வாரா?

இன்று மனிதகுலம் சந்திக்கும் மிகப் பெரிய சவால் புவி வெப்பமடைதல். அதன் மோசமான விளைவு மற்றும் தாக்கத்தை எந்த நாடும் தேசிய அல்லது சர்வ தேசிய மட்டங்களில் புறக்கணித்துவிட முடியாது.

1997ல் 84 நாடுகள் ஜப்பானின் கியோட்டோ நகரில் கூடி 'ஐநாவுக்கான பருவநிலை மாற்றம்: செயல்பாட்டு முன்னெடுப்பு' பற்றி ஒன்றிணைந்து எடுத்த முடிவுதான் போற்றத்தக்க கியோட்டோ உடன்பாடு. அதன்படி அந் நாடுகள் புவி வெப்பமடைதல் ஆபத்திற்குத் தீர்வு காண ஒப்புக் கொண்டன. கியோட்டோ உடன்பாட்டுப் பின்னணியில்தான் பருவநிலை மாற்றப் பிரச்சனை குறித்து உலகம் அக்கறையோடு விவாதிக்கத் தொடங்கியது. அந்த உடன்பாடு மனிதகுல எதிர்காலத்தின் மீது தொங்கும் கொலைவாள் குறித்து எச்சரித்தது.

தொழிற்புரட்சி தொடங்கியதிலிருந்து இந்த 100 ஆண்டுகளின் நாம் வசிக்கும் இந்தப் பூமியின் வெப்பம் 1.3 டிகிரி செல்சியஸ் அளவு அதிகரித்துள்ளதாக உலக நாடுகளைக் கியோட்டோ உடன்பாடு எச்சரித்தது.

இக்கட்டத்தில்தான் ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் புவி வெப்படைதலைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கின. நமது செயல்பாடுகளின் அணுகுமுறைப் பாதையில் திருத்தங்கள் செய்யாவிட்டால் உலகின் வெப்பநிலை மனிதகுலம் தாக்குப் பிடிக்க முடியாத அளவு மேலும் 6 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் எனக் கியோட்டோ உடன்பாடு எச்சரிக்கிறது.

இந்த எச்சரிக்கை அறிவுறுத்தலின் பின்னணியில் 2015 பாரீஸ் உடன்பாடு ஏற்பட்டது. பாரீஸ் நகரில் கூடிய 192 நாடுகள் பாரீஸ் பிரகடனத்திற்கு ஒப்புதல் அளித்தன. தொழிற்புரட்சி சகாப்தத்தின் தொடக்கத்தில் இருந்த




உலகின் வெப்பநிலைவிட இரண்டு டிகிரி செல்சியஸ் அளவுக்கு மிகாமல் கட்டுப்படுத்துவோம் என்பது பாரீஸில் ஏற்பட்ட புனிதமான உறுதிமொழி.

எந்த நிலையிலும் உலகின் உஷ்ணம் 3 டிகிரி வரையறையைத் தாண்ட அனுமதிக்கக் கூடாது என் பதே அதன் அணுகுமுறையில் மிக அழுத்தமாக வலிறுத்தப் பட்டது. இரசாயன வேதியல் கார்பன்கள் வெளியீட்டின் அளவைக் கட்டுப்படுத்துவதே உடன்பாட்டின் முக்கிய மான அழுத்தம்.

காடுகள், கடல்கள் மற்றும் பனிப் பாறைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் அடிக்கோடிட்டு வலியுறுத்தப்பட்டது. அத்தகைய நடவடிக்கைகளின் தேவை மற்றும் பொருத்தப்பாடு குறித்து எந்த நாட்டிற்கும் அல்லது அரசிற்கும் கேள்வி கேட்கும் துணிச்சல் இல்லை; காரணம், உலகம் எதிர்கொள்ளும் அபாயம் அத்தகையது.

உலகின் இன்றைய புவிசார் அரசியல் எதார்த்தத்தில் ஒன்றைச் சொல்லிய பின், அந்த ஒன்றையே செயல் படுத்துவது என்பது மிகப்பெரிய சவால். புவி வெப்பமயமாகும் பிரச்சனையின் பின்னே உள்ள பொருளாதாரம் மற்றும் அரசியல் தொடர்பாக மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்கா மற்றும் வளர்ந்த நாடுகள் எனக் கூறப்படும் நாடுகள் உலகின் மிக முக்கிய பிரச்சனையில் எடுத்துள்ள நிலைபாடு அவர்களின் நேர்மையின்மையை விளக்குகிறது. டோனால்ட் டிரம்ப் அதிபராக இருந்தபோது பாரீஸ் உடன்பாட்டு இலக்கை அடையும் பிரச்சனையில் அமெரிக்க நிர்வாகம் எப்போதும் ஊசலாட்டத்துடனேயே இருந்தது.

ஒரு கட்டத்தில் அவர்கள் பாரீஸ் உடன்பாட்டைப் புறக்கணிப்போம் என்றுகூட அச்சுறுத்தினார்கள். ஜோ பிடன் அமெரிக்க அதிபரான பிறகு சமீபத்தில்தான் இது சரிசெய்யப்பட்டது. அவர்களின் இந்த நிலைபாடு உலகமயம் மற்றும் உலக வெப்பமயமாதல் பிரச்சனை இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பை நன்கு விளக்கும். இந்தப்பிரச்சனைகளில் என்ன செய்ய வேண்டும், செய்யக் கூடாது என்ற நிபந்தனைகளை வெள்ளை மாளிகைக்குப் பல தருணங்களில் பன்னாட்டு கார்ப்பரேஷன்கள்தான் விதிக்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் பருவநிலை மாற்றம் தொடர்பான உலகத் தலைவர்களின் 26வது உச்சி மாநாடு ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடை பெறுகிறது.

சென்ற வாரம் ஸ்காட்லாந்தில் அரசுகளின் தலைவர்கள் டாம்பீகமான சொற்களைத் திரும்பத் திரும்ப உரத்து உச்சரித்தனர். அவற்றில் முக்கியமான ஒன்று, "2070ம் ஆண்டிற்குள் நிகர பூஜ்யம்" என்ற இலக்கை அடைவோம் என்று எடுக்கப்பட்ட உறுதிமொழி ஆகும்.

அதற்கு முன்னுரையே "2030க்குள் தூய்மை மற்றும் பசுமை" இலக்கை அடைவது என்ற கிளாஸ்கோ உறுதிப்பாடு. செயலில் கொண்டுவந்து அமல்படுத்துமா என்பதே கேள்வி.

இதற்காக இந்தியா திறந்து வைத்த ஐந்து அம்ச வழிமுறை பாதை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி கிளாஸ்கோ ஆலோசனை கூட்டத்தை அசைக்க முடியாத 'உறுதிப்பாடு மற்றும் பற்றுணர்வு' (commitment and sentiments) என்று உச்சத்தில் வைத்துப் பிரகடனப்படுத்தினார். அதற்குத் தேவை சமரசமில்லாத அரசியல் மனவுறுதி.

இதற்குமுன் இதே போன்றதொரு கூட்டத்தில் ஸ்காண்டிநேவியப் பகுதியைச் சார்ந்த ஸ்வீடன் நாட்டின் பதின்வயது பெண் கிரேட்டா துன்பர்க் உலகத் தலைவர்களைப் பார்த்து, 'உங்களுக்கு எத்தனை நெஞ்சழுத்தம் இருந்தால் எந்த உறுதிப்பாடும் இல்லாமல் இத்தகைய அறிக்கைகளை வெளியிடுவீர்கள்' என்று கேட்டார். உலகத் தலைவர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முன்பு சொன்னதில் எதுவும் செய்யவில்லை என்ற கோபம் அந்த இளம் சுற்றுச்சூழல் போராளியின் உணர்ச்சிமிக்க உரையில் வெளிப்பட்டது.

இதே உச்சிமாநாட்டில் பேசும்போது பிரிட்டிஷ் பிரதமர் போரீஸ் ஜான்சன், செயல் உறுதிப்பாடு இல்லாமல் சொல்லப்படும் உரத்த வார்த்தைகள் வெறும் 'பிளா, பிளா, பிளா' என அர்த்தமற்ற பிதற்றல்கள் ஆகிவிடும் என்று கூறினார்.

இம்மாநாட்டில் பிரதமர் நரேந்திரமோடியின் உறுதிப்பாடுகளும் அதேபோல 'பிளா, பிளா, பிளா' பிதற்றல்கள்தானா? இந்தச் சந்தேகத்திற்குக் காரணம் உள்ளது.


இந்தியாவில் வனப்பாதுகாப்புச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மற்றும் நீலப் பொருளாதாரம் எனப் புகழப்படும் கடல்சார் வணிகத்தின் பொருளாதாரக் கோட்பாடு இரண்டும் நம்நாட்டின் காடுகளையும் கடல்களையும் அழித்துவிடுவதற்கே பாதை அமைக்கும் முன்மொழிவுகளாகும்.

பருவநிலை மாற்ற கிளாஸ்கோ மாநாட்டில் பிரதமர் அளித்த 'உறுதிமொழிகள் மற்றும் பற்றுணர்வு'களின் பின்புலத்தில், வனப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கடல்சார் கோட்பாடுகளில் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் தேவையான மாறுதல்களைப் பிரதமர் மேற்கொள்வாரா?

இல்லை, கிளாஸ்கோவில் கூறியது காற்றோடு போகவா?

தமிழில்: நீலகண்டன்

தத்துவார்த்தம் 4



எஸ். தோதாத்ரி

# மார்க்சியத்திற்கு பின் உள்ள சிந்தனைச் சூழல்

**மார்ச்சியம் தோன்றுவதற்கான காலச்சூழல் பற்றி முன்னர் கூறினோம். இப்பொழுது அது தோன்றுவதற்கான சிந்தனை சூழலை காண்போம்.**

மார்க்சின் காலத்திற்கு சற்று முன்னர் ஐரோப்பிய அரங்கில் தோன்றிய இயக்கம் 'மறுமலர்ச்சி' என்பது. இது தொழில் புரட்சியோடு நெருங்கிய தொடர்புடையது. இது ஒரு புதிய இயக்கத்தைத் தோற்றுவித்தது. இது அறிவொளி இயக்கம் எனப்படுகிறது.

எதனையும் விஞ்ஞானரீதியான முறையில் அணுக வேண்டும் என்பது இதில் மையமாக இருந்தது. தொழிற்புரட்சி, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆகியன மனித அறிவை விசாலப்படுத்தின.

இதன் விளைவாக தத்துவ சிந்தனை விரைவாக வளர்ந்தது. பழைய மதம் சார்ந்த கருத்துக்களுக்கு மாற்றாக, உலகம் சார்ந்த கருத்துக்கள் அதிகம் வெளிவந்தன. இந்த இயக் கம் பிரபுத்துவ சிந்தனைகள் அனைத்தையும் கேள்விக்குள் நீளாக்கியது.

இதன் விளைவு தத்துவத்தில் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் விரைவாக வளர்ந்தது. குறிப்பாக இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடு களில் பல பொருள்முதல்வாத தத்துவவாதிகள் தோன்றினர். இதில் பிரான்ஸ் முதலிடம் வகித்தது. இந்த இயக்கம் இங்கிலாந்திற்கும் பரவியது. இதனால் பொருள் முதல் வாதம் மிக வேகமாக வளர்ந்தது. இது மார்க்சியத்தின் ஒரு பகுதியாக (இயங் கியல் பொருள் முதல் வாதமாக) மாறி யது.

மற்றொரு சிந்தனை அமைப்பு மார்க் சியத்திற்கு முன்னோடியாக இருந்தது. அது ஜெர்மானிய செவ்வியல் தத்துவம். இதில் கொடிகட்டி பறந்தவர் ஹெகல். இவர் கருத்து முதல் வாதி. நமது ஆதிசங் கரரைப் போன்றவர்.

முழுமுதற் கருத்து என்பதை வைத்துக் கொண்டு உலகை இவர் விளக்கினார். இந்த உலகமே இக் கருத்தின் வெளிப்பாடு என்பது இவரது சித்தாந்தம். சங்கரர் பேசும் பரமாத்மா போன் றது இது.

ஹெகல் இதில் மற்றொரு வேலையும் செய்தார். இக்கருத்து தன்னை முழுமைப்படுத்தி கொள்ள மாறிக்கொண்டே இருக்கிறது என்று அவர் கூறினார். இந்த மாறுதல் முரண்பாடுகளின் விளைவு என்று அவர் கூறினார். இது இயங்கியல் ஆகும்.

இதனைத்தான் மார்க்ஸ் எடுத்துக்கொண்டு பொருளுக்குப் பயன்படுத்தி இயங்கியல் பொருள் முதல்வாதத்தை உருவாக்கினார்.

மார்க்ஸ் மீது ஆதிக்கம் செலுத்திய மற்றொரு தத்துவவாதி பூயர்பா என்பவர். இவர் பொருள்முதல்வாதி. இவர் கிருத்துவ மதத்தை விமர்சனம் செய்தார். இவரது "கிருத்துவ மதத்தின் சாரம்" என்ற நூல் அக்காலத்தில் கடும் கண்டனத்திற்கு உள்ளாயிற்று.

**இவர் ஒரு மனிதநேயவாதி. இவரது தத்துவம் பற்றித்தான் மார்க்ஸ் தனது "பூர்பயா ஆய்வுரைகள்" என்பதில் குறிப்பிடுகிறார். இவரது பொருள்முதல்வாதம் ஹெகலின் இயங்கியல் ஆகியன இணைந்துதான் மார்க்சின் இயங்கியல் பொருள்முதல் வாதம் ஆகும்.**

மார்க்சின் மீது ஆதிக்கம் செலுத்திய மற்றொரு கருத்தமைப்பு அரசியல் பொருளாதாரம். தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக இங்கிலாந்தில் அபரிமிதமான செல்வம் குவிந்தது. அதே சமயத்தில் ஆலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பன்னிரெண்டு வயது சிறுவர்கள் கூட வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் முதலாளிகளைப் பாதுகாப்பதாக இருந்தது. இந்த நிலையில் பல அறிஞர்கள் செல்வம் பற்றி சிந்திக்கத் தொடங்கினர். ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ இந்தத் துறையில் பயணித்தனர். ரிக்கார்டோ உழைப்புதான் செல்வத்தை உருவாக்கியது. இது செவ்வியல் பொருளாதாரம் என்ற கோட்பாடு என்பதால் இவற்றையும் விமர்சனம் செய்தார். இவர்கள் பூர்சுவா அறிஞர்கள். மார்க்ஸ் வேறு பக்கம் நோக்கி தனது கவனத்தைத் திருப்பினார். அவருக்கு சற்று முன்பேயே ஏங்கல்ஸ் "இங்கிலாந்தில் உழைப்பாளிகளின் நிலை" என்பதிலும், "அரசியல் பொருளாதாரத்திற்கு ஒரு வரைவு" என்பதிலும் இது பற்றி கூறியிருந்தார்.

இவர்கள் எந்த கருவியும் இல்லாத கூலி உழைப்பாளிகளாவர். இவர்கள்தான் பாட்டாளிகள் எனப்படுவர். இவர்கள் சார்பாக மார்க்ஸ் தனது ஆய்வு முழுவதையும் நடத்தினார். அதன் விளைவு தான் 'மூலதனம்' என்ற நூல்.

மார்க்சியத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய மற்றொரு சிந்தனை அமைப்பு "பிரெஞ்சு சோசலிசம்." பிரெஞ்சுப் புரட்சியின் காலத்தில் பல அறிஞர்கள் சோசலிசம் பற்றியும், தனிச்சொத்தின் கொடுமை பற்றியும் எழுதினார் பூரியர், புருதான் போன்றவர்கள் இத்தகையவர்கள். இங்கிலாந்தின் தாமஸ் முர் என்பவர் 'கற்பனை உலகு' என்ற நூலில் சமதர்மம் பற்றிப் பேசினார். இவற்றை எல்லாம் மார்க்ஸ் உள்வாங்கி விமர்சனம் செய்து, அவரது 'விஞ்ஞான சோசலிசம்' என்பதை உருவாக்கினார். இவ்வாறு உருவான மார்க்சியம் பின்வரும் கூறுகளைக் கொண்டுள்ளது.

1. இயக்கவியல் பொருள்முதல்வாதம்
2. வரலாற்று பொருள்முதல் வாதம்
3. அரசியல் பொருளாதாரம்

இது முதலாளித்துவ பொருளாதாரம், சோசலிசப் பொருளாதாரம் என்ற பிரிவாக உள்ளது.

தொடர்புக்கு: **98947 83657**

# பாஜக தலைவர்கள் உண்மை பேச வேண்டும்

## விவசாயத் தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நா.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பாஜக ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு பல மாதங்களாக பணம் அனுப்பவில்லை. இதனால் திட்டப் பணியில் வேலை செய்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நான்கு, ஐந்து மாதங்களாக வேலை செய்த நாட்களுக்கான ஊதியப் பாக்கியை பெறுவதற்காக போராடி வருகின்றனர்.

இதற்கிடையில் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் , வேலை உறுதியளிப்புத் திட்டத் தொழிலாளர்களின் வருகைப்பதிவேடு மற்றும் ஊதியப் பட்டியல் ஆகியவற்றை பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மற்றும் இதரப் பிரிவினர் எனத் தனித்தனியாக பிரிந்து மூன்றாக வகைப்படுத்த வேண்டும் என மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.

இதன் மூலம் "எங்களுக்கு வேலை கொடு, ஊதியம் கொடு" என்று ஒன்றுபட்டு கேட்டு வந்த தொழிலாளர்களுக்கு இடையில், அவர்களுக்கு வேலை, ஊதியம் கிடைக்கிறது. எங்களுக்கு எங்கே வேலை, ஊதியம் என கேட்கும் நிலையை உருவாக்கி, மோதல் போக்கை ஏற்படுத்தி, பகை வளர்க்கும் மலிவான செயலில் ஈடுபட முனைந்தது.

தொழிலாளர்களை பிளவுபடுத்தும் ஒன்றிய அரசின் சதி அரசியலை பாஜகவினர் மூடி மறைத்து வருகிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராடியதாலும், மாநில அரசும், முதலமைச்சரும் உடனடியாக தலையிட்டதாலும் ஒன்றிய அரசின் சமூக நீதி அமைச்சகம் தொழிலாளர்களை சாதிகளாக பிளவுபடுத்தும் உத்தரவை திரும்பப் பெறுமாறு ஊரக வளர்ச்சித் துறையை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக 11.10.2021ஆம் தேதி தான் சமூகநீதி அமைச்சகம், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சக அதிகாரிகள், நிதித்துறை அமைச்சக அதிகாரிகளுடன் பேசியுள்ளனர். இது தொடர்பாக ஒன்றிய அரசு இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடவில்லை என்பதை அறிந்திருந்தும் எல்.முருகன் ஏதுமறியாது இருப்பது போல் நடிப்பது எதற்காக?

முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அஇஅதிமுக சுய ஆதாயம் தேடும் கும்பலாக மாறிப்போனதுடன் பாஜகவின் தமிழ்நாட்டு முகமையாக செயல்பட்டு வந்தது. அப்போதுதான் அஇஅதிமுக ஆட்சியில் தான் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ரூ.246 கோடி ஊழல் நடந்த முறைகேடு வெளியானது. இதனை எல்.முருகனும் பாஜகவினரும் மூடிமறைப்பது யாருக்காக? அஇஅதிமுகவுடன் கூட்டணி வைத்து வெட்கமின்றி பவனி வந்ததை தமிழ்நாட்டு மக்கள் எளிதில் மறந்து விடமாட்டார்கள் என்பதை முருகனும், அண்ணாமலையாரும் அறிந்து கொள்ள வேண்டும். பகுத்தறியும் தனித்துவப் பண்பு கொண்ட தமிழ்நாட்டில் பாஜகவின் பொய் மூட்டை வியாபாரம் செல்லுபடியாகாது.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் முறையீட்டைத் தொடர்ந்து, முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கையால். ஒன்றிய அரசு கொடுக்காமல் நிறுத்தி, வைத்திருந்த கூலிப் பாக்கிக்காகத் தான் ரு.1331 கோடி நிதி விடுவித்துள்ளது. இத் திட்டக் கணக்கில் ஒன்றிய அரசு மேலும் பல நூறு கோடி தமிழ்நாட்டுக்கு தர வேண்டும் என்பதை ஒன்றிய இணை அமைச்சர் எல். முருகன் அறிந்து பேச வேண்டும் .

முதலமைச்சர் தலையீட்டால் நூறுநாள் வேலைத் திட்டத் தொழிலாளர்களின் ஊதியப் (கூலி) பாக்கி, அவர்களது வங்கிக் கணக்கிற்கு வந்து கொண்டிருக்கிறது.

இந்த உண்மைகளை மறைத்து, பொய்களை மூட்டி கட்டி வியாபாரம் செய்யும் பாஜகவினர் உடனடியாக அவர்களது மலிவான செயலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் எச்சரிக்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# தோழர் என். நன்மாறன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி அஞ்சலி!


மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மேடை கலைவாணர் என பெயர் பெற்ற தோழர் என்.நன்மாறன் அவர்கள் மதுரையில் காலமானார். அன்னாரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில குழுவின் சார்பில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூ., கட்சியின் மாநில குழுவின் சார்பில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், புறநகர் மாவட்ட செயலாளர் ப.காளிதாஸ், ராஜலெட்சுமி, மதுரை ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங், ஆர்.ஜெயராமன், ஜனசக்தி என்.ஜீவா, திருப்பரங்குன்றம் முத்துவேல், ஆர்.முருகன் சி.தாமஸ், லோகநாதன், மணிமேகலை ஏஐடியூசி பஞ்சாலை சங்கத்தின் விளங்குடி கே.எஸ்.மணி உட்பட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

# திருச்சி மாநகர் 60வது வார்டு கிளை மாநாடு


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் 60வது வார்டு கிளை மாநாடு மாவட்ட குழு உறுப்பினர் சத்யா தலைமையில் நடைபெற்றது.

மாநகர செயலாளர் திராவிடமணி கட்சி கொடி ஏற்றினார். ப.மாணிக்கம் நூறு ஆண்டுகள் பிறந்த நிறைவையொட்டி அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்து அரசியல் உரையாற்றினார் முன்னாள் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் செல்வராஜ். செயலாளராக சரண்சிங், துணை செயலாளராக, நாகராஜ், பொருளாளராக ஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்வு பெற்றனர்.

60வது வார்டு பகுதியில் மழைநீர் வடிகால்களை புதிதாக கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க கொசு தொல்லையை கட்டுப்படுத்த அனைத்து வார்டுகளிலும் கொசு மருந்து அடிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



ந.சேகரன்




# பேரிழப்புகளுக்கு இடையே பித்தலாட்ட அரசியலா ?

**2021 அக்டோபர் 22 அன்று கொரனோ தடுப்பூசி 100 கோடியை எட்டிவிட்டது என்ற செய்தியோடு பிரதமர் மோடியால் தான் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது என்றும், அவரால் மட்டுமே இது சாத்தியமானது என்றும் மோடி கட்சியினர் கொண்டாடி கொண்டனர்.**

100 கோடி டோஸ் தடுப்பூசி எய்திய நிகழ்வு கொண்டாடத் தகுந்ததா? என்ற பிரபல ஊடகவியலாளர் கரண் தர்பார் கேள்விக்கு பதிலளிக்கிறார் ஹைராபாத் டாடா இன்ஸ்டியூட் வளர்ச்சியியல் பேராசிரியர் ஆர். ராம்குமார். அவர் கூறும் பதில் என்ன தெரியுமா?

“கொண்டாட்டத்திற்குரிய தருணமல்ல இது. அப்படி கொண்டாடுவது விவேகமற்றது. பொறுப்பற்றதும் ஆகும். தடுப்பூசி பணியில் ஏற்கனவே பின் தங்கிய நிலையில் உள்ள நாம், இன்னும் கடக்க வேண்டிய தூரம் அதிகம். அதற்கான பணியிலிருந்து தடம் மாறவே இந்த கொண்டாட்டம் உதவும்'' என்கிறார். (ஆதாரம் The Quint – இணைய இதழ்)

ஆனால், 100 கோடி தடுப்பூசி என்ற செய்தி, மத்தியில் ஆளும் மோடி அரசால் எவ்வாறு மக்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது ?

ஏதோ உலக நாடுகளிலேயே முதன்முதலாக 100 கோடி தடுப்பூசி போட்ட நாடு இந்தியா மட்டுமே என்பது போன்றும், தடுப்பூசியில், மோடியால் உலக சரித்திர சாதனை படைத்து விட்டது போலவும், உலகமே இந்தியாவை வியப்போடு உற்று நோக்கிறது என்பது போலவும், 100 கோடி டோஸ் என்பதை 100 கோடி மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது போன்றதொரு பிரமையையும் ஒரு மாய – கானல்நீர் பிம்பம் மோடி அரசால், விலைபோன அச்சு மற்றும் மின் ஊடக உதவியோடு, உருவாக்கப்பட்டு வருகிறது.

**எதற்காக இந்த மாய வலை பிம்பம்?**

வாக்கு வங்கியை குறிவைத்துத்தான் இந்த ஹீரோ என்ற மாயபிம்பம் பிரதமர் மோடி என்ற தனிநபர் சுற்றி திட்டமிட்டே பின்னப்படுகிறது. நாட்டின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்குக் கூட தடுப்பூசி முழுமையாகப் போடப் படாத நிலையில் இதை உலக சாதனை என பறை சாற்றுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலுவது கீழ்மதி யல்லாமல் வேறென்ன?

உலக மக்கட் தொகையில் முழுமையாக இரண்டு டோஸ் போட்டுக் கொண்டோரின் தர சதவீதம் 39 %.

உலக அளவில் அதிக தடுப்பூசி டோஸ் போட்டுள்ள நாடாக சீனா உள்ளது. அக்.28 நிலவரப்படி சீனா நாடு, தன் மக்கள் தொகையில் 223 கோடி டோஸ் தடுப்பூசி போட்டுள்ளது. மேலும் அந்த நாடு முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டோரது மக்கள் தொகையின் சதம் 76 சதவீதம். இந்தியாவின் சதவீதமோ 23% ( அக்.28 நிலவரப்படி). ஒப்பீட்டு அளவிலும் சீனாவை விட இந்தியா மிக மிக பின்தங்கியுள்ளது.

**உலக தடுப்பூசி தர வரிசையில் இந்தியா எங்கு உள்ளது?**

தடுப்பூசி போடும் பணியில் உலக நாடுகளின் முன்னேற்றத் தர வரிசையில் அக்.28 தேதிய நிலவரப்படி, முதல் நான்கு இடங்களை ஐக்கிய அரபு எமிரேடஸ், போர்ச்சுகல், கியூபா, சிலி ஆகிய நாடுகள் இடம் பிடித்துள்ளன.

நமது இந்தியாவோ, முழுமையான தடுப்பூசி தர வரிசையில் (23 %) 127 இடத்திலும் பகுதி தடுப்பூசி மற்றும் முழுமை தடுப்பூசி இரண்டும் கணக்கிற் கொண்டால் (50%) 79 ஆவது இடத்திலும் உள்ளது.

**தடுப்பூசி போடும் பணியில் உலக நாடுகளின் தர வரிசையில் இந்தியாவின் இடம் 79 ஆவது இடத்தில் அதாவது மிக பின்தங்கிய நிலையில் உள்ளது. அதாவது முழுமையான தடுப்பூசியில் 23% சதமும், பகுதி மற்றும் முழுமை தடுப்பூசி 50% சதத்துடன் 79 ஆவது இடத்தில் உள்ளது.**

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவில் முழுமையான தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களது சதவீதம் 23 % ஆம். இது இந்திய மக்கட் தொகையில் 3 இல் 1 பங்குக்குக் கீழானது (ஆதாரம் : Our World in Data- Oxford University )

“கேழ்வரகில் நெய் வடிகிறது. கேளுங்கள்'' என்ற கதையாகிறது மோடியாரின் இந்த கூற்று.

**அதோடு விட்டாரா மோடி?**

100 கோடி டோஸ் தடுப்பூசி எட்டியதை ஒட்டி, அக்டோபர் 22ந் தேதி பிரதமர் திருவாய் மலர்ந்து கூறிய இன்னொரு கூற்று

“100 கோடி தடுப்பூசி டோஸ், எந்தவிதப் பணம் பெறாமல் இலவசமாக மக்களுக்குப் போடப் பட்டுள்ளது''

இந்த கூற்று எந்த அளவு உண்மைக்குப் புறம்பானது என்பதைப் பார்ப்போம்.

கொரோனோ தடுப்பூசி குறித்து தீர்க்கமான பார்வை ஒன்றிய அரசுக்கு இருக்கவில்லை என்பதை ஏப்ரல் மாதமும் அதனைத் தொடர்ந்த மாதங்களில் மத்திய சுகாதார குடும்ப நலத்துறை வெளியிட்ட தடுப்பூசி குறித்த கொள்கை அறிக்கை களே சான்று.

முதலில் வெளியிடப்பட்ட கொள்கை அறிக்கையில், தடுப்பூசி மருந்துகளை 100 சதம் ஒன்றிய அரசே கொள்முதல் செய்து அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது..

அடுத்த வந்த அறிக்கையில் , 100% பதிலாக 50% சதம் தான் ஒன்றிய அரசு தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்யும் என்றும், எஞ்சிய 50% மருந்துகளை அந்தந்த மாநில அரசுகளும், தனியார் மருத்துவமனைகளும் உற்பத்தியாளர்களிடமிருந்து அவர்களே நேரடியாக கொள்முதல் செய்யலாம் என்றனர்.

கடைசியாக வந்த ஒன்றிய அரசின் தடுப்பூசி கொள்கை அறிக்கை படி, 75% சதம் ஒன்றிய அரசே தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்யும் என்றும் எஞ்சிய 25% சதத்தை தனியார் மருத்துவமனைகள் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று சொன்னது. இந்த கொள்கை அறிக்கை 21 ஜூன் 2021 முதல் அமுலில் இருந்து வருகிறது. இந்த கொள்கை 21 ஜூன் 21 அமுலுக்கு வருவதற்கு முன்ன தாக, அதாவது மார்ச் முதல் ஜூன் 20 வரையிலான காலத் தில் தனியார் மருத்துவமனைகள் கொரோனோ தடுப்பூசி சிகிக்கைக் காகவும் தடுப்பூசி செலுத்தவும் கடுமையான முறையில் கட்டணம் வசூலித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தனியார் மருத்துவமனைகளின் கட்டணக் கொள்ளையை கட்டுப்படுத்த அனைத்து எதிர்க்கட்சிகளும் பொதுநல நுகர்வோர் அமைப்புகளும் வலியுறுத்தி வந்த நிலையில், பிரதமர் மோடி, ஜூன்,7 தேதியன்று கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயித்து அறிவிப்பு செய்தார். அதன்படி, தனியார் மருத்துவமனைகள் தாங்கள் கொள்முதல் செய்யும் தடுப்பூசி மருந்துகளுக்கு, ஒரு டோஸுக்கு சர்வீஸ் கட்டணம் ரூ.150/ எனவும், கோவிஷில்டு தடுப்பூசி டோஸ் ஒன்றுக்கு ரூ.780/ எனவும், கோவேக்சினுக்கு ரூ.1410 எனவும், ஸ்புட்னிக் டோஸ் ஒன்றிற்கு ரூ.1145 எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனைகளில் மேற்கண்ட கட்டணம் செலுத்தி தான் இந்திய குடிமக்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டனர் என்பதும் சில நிகழ்வுகளில் தனியார் மருத்துவமனைகள் , அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக கட்டணம் வசூலித்து தான் தடுப்பூசி செலுத்தி வந்தனர் என்பதும் நிதர்சனமான உண்மை..

குறிப்பாக முதலில் வந்த ஒன்றிய அரசின் கொள்கை முடிவுப்படி 18–45 வயது உட்பட்டோர் இப்படி கட்டணம் செலுத்தித்தான் தடுப்பூசி போட்டுக் கொண்டனர். இவ்வாறு கட்டணம் செலுத்தி தடுப்பூசி போட்டுக் கொண் டோரது எண்ணிக்கை 7 % சதம் என்று சுகாதாரச் செயலாளர் ராஜேஷ் பூஷன் செய்தியாளர்களுக்கான பேட்டியின் போது தெரிவித்தார். அதையே உறுதி செய்து கடந்த ஜூலை 16 அன்று ராஜ்ய சபையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் சுகாதாரத்துறை அமைச்சகத்தால் தெரிவிக்கப்பட்டது.

தடுப்பூசி போடும் மையங்களாக நாடு முழுவதும் அரசு தரப்பில் 88,936 மையங்களும், தனியார் தரப்பில் 2674 மையங்களும் செயல்பட்டு வருகின்றன( அக்.22 நிலவரப்படி) ((ஆதாரம் :ஒன்றிய அரசின் Cowin Dashboard )

ஆக தனியார் மருத்துவ மையங்களில் கோடிக்கணக்கான மக்கள் கட்டணம் செலுத்தித்தான் தடுப்பூசி போட்டுள்ளனர் என்பது வெள்ளிடைமலை.. உண்மை இப்படி இருக்க, தடுப்பூசி அனைத்து மக்களுக்கும் இலவசமாகப் போடப்பட்டுள்ளது என்ற பிரதமர் மோடியாரின் கூற்று உண்மைக்குப் புறம்பானது.

அதுமட்டுமல்ல, உள்நாட்டு மக்களுக்குத் தடுப்பூசிக்குக் கடுமையான தேவையிருந்த நேரத்தில் , கோவிட் தடுப்பூசி (கோவிஷிலட்)2021 ஜனவரி 21 முதல் ஏப்ரல் 16 வரை உற் பத்தி செய்யப்பட்டதில் ஏறத்தாழ 6.63 கோடி தடுப்பூசிகள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது ஒன்றியஅரசு. இதிலிருந்து உள்நாட்டு மக்களின் உயிர்களை எந்த அளவு துச்சமாக ஒன்றிய அரசு மதித்துள்ளது என தெளிவாகிறது.

தேசிய நிவாரணப்பணிகளுக்காக ஏற்கனவே பல பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வந்த பிரதமரின் தேசிய நிவாரண நிதியம் என்ற அமைப்பை புறந் தள்ளிவிட்டு புதியதாக பி.எம் கேர்ஸ் என்ற பெயரில் பிரதமர் உள்ளிட்டு நான்கு முக்கிய துறை அமைச்சர்கள் நிர்வகிக்கும் வகையில் அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட்டது. அந்த பிஎம் கேர்ஸ் இன் நோக்கமே கோவிட் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காகத்தான் என்று சொல்லப்பட்டது.

ஆனால் அந்த பிஎம் கேர்ஸ் அறக்கட்டளைக்கு வரப் பெற்ற பணம் என்ன? செலவழிக்கப்பட்ட தொகை என்ன? என்னென்ன காரியங்களுக்குச் செலவழிக்கப்பட்டது என்பது இன்று வரை ரகசியமாகவே இருந்து வருகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அறக்கட்டளை வராது என்று பிரதமர் அலுவலகத்தால் சொல்லப்படுவதிலிருந்து இந்த அறக்கட்டளையின் வெளிப் படைத் தன்மை இல்லாமல் ஒரு மர்ம அறக்கட்டளையாகத் தொடர்கிறது.

** பெட்ரோல் விலை உச்சம் தொடுவதைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாத அக்கறை கொள்ளாத இந்தியாவெங்கும் உள்ள பெட்ரோல் பங்க்களில், மோடியார் தனது படத்தை பெரிய சைசில் “பிரதமரின் மாபெரும் இலவச தடுப்பூசி இயக்கம்'' என விளம்பரம் படுத்திக் கொள்வதை மக்களால் மறக்க இயலாது.

** உலகிலே, வேறு எந்த நாட்டு பிரதமரும் தங்களது நாட்டு தடுப்பூசிச் சான்றிதழில் நம் பிரதமர் மோடி போல தங்கள் படத் தைப் போட்டு விளம்பரம் படுத்திக்கொண்டதில்லை. தடுப்பூசி சான்றிதழில் தனது படத்தை போட்டு விளம்பரப்படுத்திக் கொண்ட ஒரே பிரதமர் திருவாளர் மோடி ஒருவர் மட்டுமே.

கொரோனோ 1 ஆம் 2 ஆம் அலைகள் போது இந்திய மக்கள் அனுபவித்த துன்பங்கள் துயரங்கள் சொல்லிலடங்கா.

உலகத்தில் கோவிட் பாதிப்பை எதிர்கொள்ளும் திறன் ஒன்றியஅரசுக்கு இல்லாத காரணத்தினாலும், இந்தியாவின் பொது சுகாதார அமைப்பானது உரிய கட்டமைப்பு புனரமைக்கப்படாத காரணத்தினாலும் ஏறத்தாழ இந்தியாவில் கோவிட் கொடிய நோயால் பாதிக்கப்பட்டரோது எண்ணிக்கை 3 கோடியே 42 லட்சம். இது அரசின் கணக்கு. உண்மையான எண்ணிக்கை நிச்சயம் கூடுதலாகவே இருக்கும் என்பது யதார்த்த உண்மை.

கோவிட் தொற்றால் இந்தியாவில் மரணமடைந்தோரது எண்ணிக்கை மட்டும் 4 லட்சத்து 57 ஆயிரம். அரசின் பதிவேடுகளில் ஏறாத எண்ணிக்கையும் சேர்த்தால் உண்மையான எண்ணிக்கை இன்னும் கூடுதலாகத் தான் இருக்கும்.

உலகத்திலேயே கொரோனோ தொற்றால் லட்சக்கணக்கான உயிர்களை பறிகொடுத்த நாடுகளில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது இந்தியா. இந்த கசப்பான கொடூரமான உண்மையை மறைக்கத்தான் முடியுமா? மறக்கத்தான் முடியுமா?.

கடந்த பல மாதங்களில், கோவிட் நோயாளிகளுக்கு ஆக்சிஸன் வெண்டிலேட்டர் படுக்கை இல்லாத காரணத்தினால் ஆயிரக்கணக்கில் மாண்ட கொடுமை நடந்ததை மறக்கமுடியுமா?

கொரோனாவால் கடந்த 2 ஆண்டுகளாய் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தங்களது தொழில்களை கைவிட நேர்ந்து நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான கி.மீட்டர் தூரங்களை பசியும் பட்டினியுமாய் நடையாய் நடந்துசென்ற கொடுமையும், போகும் வழியிலேயே மாண்டோரது கொடுங் துயரங்களைத்தான் மறக்க முடியுமா?

கோவிட் தொற்றால் மாண்டோர்களது உடல்கள் கங்கை ஆற்றில் மிதந்து சென்ற துயரக் கொடுமையை மறைக்கத்தான்முடியுமா அல்லது மறுக்கத்தான் முடியுமா?

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட புலம் பெயர் தொழிலாளர்களுக்குக் கருணைத் தொகை வழங்க கோரியமைக்கும் அதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட போது'' புலம்பெயர் தொழிலாளர்களுக்குக் கருணைத் தொகை வழங்க ஒன்றிய அரசிடம் பணம் இல்லை'' என்று சொன்ன கையாகலாத மோடியார் அரசை மறக்கமுடியுமா?

சென்ட்ரல் விஸ்டா என்ற நாடாளுமன்ற கட்டிடம் கட்ட 12500 கோடி ரூபாய் செலவழிக்கும் மோடி அரசு, தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை வழங்க மனமில்லா மோடியாரது அரசைத் தான் மறக்கமுடியுமா?.

தனது தோல்விகளை கையாகாலாதனத்தை மக்களிடமிருந்து மறைக்க, 100 கோடி தடுப்பூசி கடமையை ''சாதனை'' என பித்தலாட்ட அரசியல் செய்வதும் மோடியாருக்கு விளம்பரம் தேடுவதும் வெட்கக் கேடானது அவமானகரமானது

தொடர்புக்கு: 9443120051Z

## ஒன்றிய அரசின் கலால் வரிக் குறைப்பு ஏமாற்று நாடகம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

பாஜக ஒன்றிய அரசு கடந்த 04.11.2021 ஆம் தேதி பெட்ரோல் லிட்டருக்கு ரூ.5ம், டீசல் லிட்டருக்கு ரூ.10ம் கலால் வரிக் குறைப்பு அறிவித்துள்ளது. இதனையொட்டி பாஜகவும், அதன் ஆதரவாளர்களும் பெட்ரோல், டீசல் விலைகள் ஏகமாக சரிந்து விட்டதாக முழங்கி வருகின்றனர்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன? கடந்த 36 மாதங்களில் பாஜக ஒன்றிய அரசு கலால் வரியை ரூ.36 உயர்த்தியுள்ளது. ஒன்றிய அரசின் சுங்கவரி, கலால் வரி உயர்வு காரணமாகவே பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ.114 ஐ தாண்டி செல்கிறது. டீசல் விலையும் லிட்டர் ரூ.100க்கு உயர்ந்துவிட்டது. தொடர்ந்து உயர்த்தப்படும் எரிபொருள் எண்ணெய் விலை உயர்வின் தாக்கம் நுகர்பொருள் சந்தையில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக காய்கறி, பால் பொருட்கள், உணவு தானியங்கள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன. சேவைக் கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் வாழ்க்கைத்தரம் சரிந்து வருவதை ஆய்வு நிறுவனங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இது பற்றி பாஜக ஒன்றிய அரசு சிறிதும் கவலைப்படவில்லை.

சர்வதேச கச்சா எண்ணெய் விலை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு பெட்ரோல் லிட்டர் ரூ.50 க்கும், டீசல் ரூ.40 க்கும் விற்க முடியும் என சந்தைப் பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து பாஜக சிந்திக்கவும் முன்வரவில்லை. நாட்டில் முதன் முறையாக தமிழ்நாடு அரசு தனது மதிப்புக் கூட்டு வரியைக் குறைத்து, மக்களுக்கு உதவியது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக தற்போது சில மாநிலங்கள் மதிப்புக் கூட்டு வரியினை குறைத்துள்ளன. இந்த நிலையில் பாஜக ஒன்றிய அரசின் வரிக் குறைப்பு, மக்களை ஏமாற்றும் வேலையில் ஈடுபட்டு வருவதால் பாதிக்கப்பட்ட மக்களின் கோபத்தில் இருந்து தப்பி விட முடியாது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாஜக ஒன்றிய அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




# பாவம்!

## கபாலீஸ்வரர் மூலப்பத்திரம் தேடுகிறார்!

**மயிலை (சென்னை) கபாலீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை வாடகையோ,குத்தகையோ கொடுக்காமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் “இந்து விரோதிகள்” பட்டியலை அக்கோவிலின் நிர்வாக அதிகாரியான பரஞ்சோதி வெளியிட்டிருக்கிறார்.**

மொத்தம் 473 பேரில் இரண்டு பேர் மட்டுமே முஸ்லிம்கள். இந்துக்கள் 471 பேரில் சில முதலியார்கள் நாடார்கள் தவிர பெரும்பான்மையோர் அய்யர், அய்யங்கார் களாகவே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கபாலி கோவில் சொத்துக்களை கொள்ளையடிப் பவர்களின் பட்டியல் பெரியது.

**வாடகை கொடுக்காத இந்து விரோத பிராடுகளின் பட்டியலில் முக்கியமானது பாரதிய வித்யா பவன். ஆர்எஸ்எஸ் பினாமி நிறுவனம் கபாலீஸ்வரருக்கு வைத்திருக்கும்**

## வாடகை பாக்கி மட்டும் ரூ.32 லட்சம்.

அடுத்து மயிலாப்பூர் கிளப். கிரிக்கெட், டென்னிஸ் விளையாட்டு மேட்டுக்குடி குலக்கொழுந்துகளைத் தயார்படுத்தும் பயிற்சித்திடல், உறுப்பினர்களுக்கு சீட்டாட்டம், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், ஜிம், வட இந்திய, தென்னிந்திய உணவு விடுதிகள் மற்றும் 24 மணிநேர பார் போன்ற வசதிகள், சாஸ்திரி ஹால் என, பல கிரவுண்ட் கோவில் நிலத்தை குத்தகைக்கு வளைத்துப் போட்டிருக்கும் இந்த ஆன்மீக மெய்யன்பர்கள் கபாலிக்கு வைத்திருக்கும் குத்தகை பாக்கி 3.57 கோடி ரூபாய்.

பராமரிப்பு மிக்க மிக பெரிய மனிதர்களின் கிளப்பு என்று கூறப்படும் மயிலாப்பூர் கிளப்பின் வாசலில், “இது கபாலீஸ்வரர் கோயில் சொத்து” என்று போர்டு எழுதி வைத்திருக்கிறது இந்து அறநிலையத்துறை. அய்யர், அய்யங்கார் இதையெல்லாம் பார்த்துக் கூச்சப்பட்டு கபாலீஸ்வரர் சொத்தை திருப்பி கொடுத்து விடுவார்களா என்ன? எச்.ராஜா கேள்வி கேட்பாரா என்ன?

“தேசிய தலைவர்” என “பெத்த பேரு” வாங்கிய பிராமணர் நாகேஸ்வரராவினால் ஆரம்பிக்கப்பட்டு, ஊருக்கெல்லாம் தலைவலி தைலம் தரும் அமிர்தாஞ்சன் நிறுவனம் கபாலீஸ்வரர் வைத்திருக்கும் குத்தகை பாக்கி

### 6 கோடியே 45 லட்சம்.

கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பெயர் போனதாக பெருமையாக கொள்ளப்படும் பி.எஸ். ஹைஸ்கூல் என்று அழைக்கப்படும் பெண்ணாத்தூர் சுப்பிரமணிய ஐயர் மேல்நிலைப்பள்ளி, கோவிலுக்கு சொந்தமாக 76 கிரவுண்ட் நிலத்தை 1928ல் குத்தகை எடுத்து, பின்னர் குத்தகை ஒப்பந்தம் 1979இல் புதுப்பிக்க பட்டிருக்கிறது. ஒரு கிரவுண்ட் நிலத்தின் இன்றைய சந்தை விலை ரூ 5 கோடிக்கு மேலாகும்.பல பிரபல உயர் அதிகாரிகளை உருவாக்கியதாக பீற்றிக்கொள்ளும் இந்த பள்ளி, 76 கிரவுண்டுகளுக்கு ஆண்டு குத்தகையாகரூ .1250 ஐ மட்டும் ஒரே ஒரு முறை தந்துவிட்டு, கபாலீசுவரரைக் கோர்ட்டுக்கு இழுத்து வாய்தாவுக்கு விட்டுக் கொண்டிருக்கிறது.

காமதேனு திரையரங்குக்கு எதிரே கபாலீஸ்வரருக்கு சொந்தமான 25 கிரவுண்ட் நிலத்தை ஆக்கிரமித்து இருப்பவர் பார்த்தசாரதி அய்யங்கார்.

இன்று அந்த நிலத்தின் மதிப்பு 100 கோடிக்கு மேல். 1901இல் 99 வருட குத்தகை எடுத்து ஐயங்கார் , இதனை உள் குத்தகைக்கு விட்டு, அது பல கை மாறி இன்று வணிக வளாகங்கள் உட்பட கட்டிடங்கள் எழுப்பப்பட்டு, 35 பேர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இப்படி போகிற பட்டியல் முதலை வாயில் சிக்கிய இந்த சொத்துக்களை ஒவ்வொன்றாக மீட்பதற்கு நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள்.

அற்ப வாடகை பாக்கிய கூட கொடுக்காமல், அறநிலையத் துறையை இவர்கள் கோர்ட்டுக்கு இழுப் பதன் நோக்கமே கோயில் சொத்தை விழுங்குவது தான்.

### இப்போது புரிகிறதா?

“இந்து கோயில்களை இந்துக்கள் வசம் ஒப்படைக்க வேண்டும்“ என்று சங்பரிவார் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறது என்று எதற்காக என்று!!!

**மனோகரன் பரசுராமன், பாபு தாஸ்**




## நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் -

# 100 நாள் வேலைத் திட்டமா?

**தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என் நேரு, கடந்த 24. 08. 2021 ஆம் தேதி தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேசினார்.**

ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் போல், ‘இனி வரும் நாட்களில் நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் அமலாக்கப்படும் என்றும், இதற்காக ரூ 100 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்தார்.

இத்திட்டம் நகர்புற மக்களின் வேலை வாய்ப்புக்கு உதவும் என்பதால். அனைத்துத் தரப்பினரின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இத்திட்டம் முதல் கட்டமாக சென்னை பெருநகரத்தில் 2 மண்டலங்களிலும் மற்ற 14 மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலத்திலும், நகராட்சி நிர்வாகத்தில் ஏழு மண்டலங்களில் தலா ஒரு நகராட்சி என்ற முறையில் செங்கல்பட்டு மண்ட லத்தில் நெல்லிக்குப்பம் நகராட்சி, வேலூர் மண்டலத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சி, சேலம் மண்டலத்தில் குளித்தலை, திருப்பூர் மண்டலத்தில் வெள்ளகோவில் நகராட்சி, தஞ்சாவூர் மண்டலத்தில் திருத்துறைப்பூண்டி நகராட்சி, மதுரை மண்ட லத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி, திருநெல்வேலி மண்டலத் தில் புளியங்குடி நகராட்சி என ஏழு நகராட்சிகள் நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக உள்ள 37 மாவட்டங்களிலும் தலா ஒரு பேருராட்சி வீதம் 37 பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன.

இத்திட்டத்தில் 50 சதவீத வேலைகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர கலைஞர் நகர்புற வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்றும் ரூ 1000 /= கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நீர்நிலைகளையும், நீர் வழிப்பாதைகளையும் தூர்வாரி மேம் படுத்துவது, பொதுப் பூங்காங்கள் மற்றும் பொது இடங்களை பராமரித்து வருவது இத்திட்டத்தின் முக்கிய பணிகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கலைஞர் நகர்புற வளர்ச்சித் திட்டம் ஆகிய இரண்டும் தி மு கழக அரசின் சிறப்பு வாய்த்த முன்னோடி திட்டங்களாக அமையம் என்பதில் சந்தே கம் இல்லை..

ஆனால், நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை சரிவரப் புரிந்து கொள்ளாமல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நகர்புறங்களுக்கு விரிவுபடுத்தி, நகர்புற வேலைவாய்ப்புத் திட்டமாக அறிவித்திருப்பதாக சிலர் தப்பிதமாக புரிந்து கொண்டுள்ளனர . இது பற்றி கூர்ந்து ஆய்ந்து தெளிவு பெற வேண்டியது அவசியமாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் 2005 ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒன்றிய அரசு, நாடாளு மன்றத்தில் நிறைவேற்றிய சட்டமாகும். இச்சட்டத்தின் கீழ் “உடல் உழைப்பு” மட்டும்தான் வாழ்வாதாரம் என்று வாழ்ந்து வரும் கிராமப்புற கூலித் தொழிலாளர் குடும்பங்கள், ஆண்டுக்கு நூறு நாட்கள் வேலை பெறுவது சட்டப்பூர்வ உரிமையாக ஏற்கப்பட் டுள்ளது.

ஊரக ஊராட்சிகளில் “நூறு நாள் வேலை”, ஏரி வேலை, ரோட்டு வேலை, மண் வேலை என பல பெயர்களில் அழைக்கப் படும் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை கேட்கும் (வாய் மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ) உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை அட்டை கொடுக்க வேண்டும். அதிலிருந்து 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டியது அரசின் கடமைப் பொறுப்பாகும் என சட்டம் உறுதியளித்துள்ளது.

வேலை கேட்டுக்கும் தொழிலாளி ஒருவருக்கு குறிப்பிட்ட காலவரம்புக்குள் வேலை கொடுக்கத் தவறினால், அதற்கு பொறுப்பான அரசு அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் வேலை செய்த தொழிலாளர்களுக்கு, அவர்கள் வேலை முடித்த 15 நாட்களுக்குள் ஊதியம் (கூலி) வழங்க வேண்டும், அப்படி 15 நாட்களுக்குள் ஊதியம் (கூலி) கொடுக்கப்படவில்லை எனில், 16 வது நாளில் இருந்து தொழிலாளியின் கணக்கில் தேங்கியுள்ள நிலுவைத் தொகைக்கு, நாள் ஒன்றுக்கு 0.05 சதவீதம் அபாராதத் தொகையும் சேர்த்து வழங்க வேண்டும். இது வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் நிலையாகும்.

இவையெல்லாம் முறையாக, நேர்மையாக, வெளிப்படையாக நடைபெறுகிறதா? என்று கேட்பீர்களானால் அதற்கு திருப்திகர மான பதில் கிடையாது.. ஆனால் தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாக திரண்டும், விழிப்புணர்வுடன் பணிபுரிந்து வரும் பகுதி களில் திட்டம் ஓரளவு நல்ல பலன்களை கொடுத்து வருகிறது என்பதை மறுக்க முடியாது.

நூறு நாள் வேலைத்திட்டம் தற்போது தனியார் விவசாய நிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

கிணற்றுப் பாசனத்தை ஊக்கப்படுத்த, விவசாயக் கிணறு களில் பயன்படுத்தப்படும் மின்மோட்டார்களுக்கு 1989–90 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் முற்றிலும் இலவசமாக மின்சாரம் வழங்கியது. அது இன்றும் தொடர்கிறது. விவசாயிகள் செலுத்த வேண்டிய மின்கட்டணத்திற்கு தமிழ்நாடு அரசு பொறுப்பேற்று, மின் வாரியத்துக்கு (டான்செட்கோ) மானியம் வழங்கி வருகிறது.

விவசாய வேலைகளுக்கு நூறு நாள் திட்டத் அனுப்பப்பட்டால், அது விவசாயிகளின் உற்பத்திச் செலவுக்கு அமைந்து, உணவு தானிய உற்பத்தி அதிகரிக்க வழிவகுக்கும்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் என்பது ஒன்றிய அரசின் முன்னோடி திட்டமாகும். இதில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டும் என்றால் அது ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் அமைச்சகம் மூலம். அதுவும் நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் செய்வதன் மூலம்தான் செய்ய இயலும். இத்திட்டத்தை செயல்படுத்தும் கடமைப் பொறுப்பு ஊராட்சிகளின் அதிகாரத்துக்கும், கிராமசபை முடிவுக்கும் உட்பட்டதாகும். மாநில அளவில் இத்திட்டத்தை மேலாண்மை செய்யும் கடமைப் பொறுப்பு மாநில அரசிடம் வழங்கப்பட்டுள்ளது.**

ஆனால், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம், கழக அரசின் நலத் திட்டங்களில் ஒன்றாகும். இதில் ஆண்டுக்கு இவ்வளவு நாள் வேலை தர வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. தொழிலாளர்களின் கேட்புக்கு (demand) குறிப்பிட்ட கால எல்லைக்குள் வேலை தர வேண்டும் என்பது அரசின் கட்டாயக் கடமைப் பொறுப்பாகவும் குறிப்பிடப்படவில்லை. ஒப்பந்தகார்கள் அனுமதிக்கக் கூடாது என்ற நிபந்தனையும் இல்லை.

இவை போன்ற பல வேறுபாடுகள் இருப்பதை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தை. அணுக வேண்டும். அல்லவெனில் தொழிலாளர்களுக்கும், நகராட்சி அலுவலர்களுக்கும் இடையில் முரண்பாடுகளும், மோதலும் ஏற்படும் சூழல் உருவாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசின் நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் இரண்டும் வெவ்வேறானது. என்றாலும் உடல் உழைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவக் கூடியது.

திட்டத்தின் பலனை தொழிலாளர்களுக்கு கிடைக்குச் செய்வது விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் முன்னுரிமைக் கடமையாகும்.

தொடர்புக்கு:


## ஆஷா பணியாளர்களுக்கு

# ஊக்கத் தொகையை உடனே வழங்கிடு!

### மாவட்ட ஆட்சியரிடம் ஏஐடியூசி கோரிக்கை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துறையூர், உப்பிலியபுரம் உள்ளிட்ட மலைவாழ் கிராம பகுதிகளில் கிராமப்புற செவி லியர்களாக நேரம் காலம் பார்க்காமல் மிகக் குறைந்த மாத ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர் ஆஷா பணியாளர்கள் 101 பேர். கடந்த நான்கு மாதங்களாக மாதம் ரூபாய் 2000 வீதம் வழங்க வேண்டிய ஊக்கத்தொகை வழங்கப்படாமல் உள்ளது. இதனால் ஆஷா பணியாளர்கள் அவர்களது குடும்பமும் பாதிக்கப்படும் சூழல் உள்ளது. திருச்சி மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு நான்கு மாத ஊக்கத்தொகை மற்றும் அலவன்ஸ்தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு திருச்சி மாவட்ட ஏஐடியுசி சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு திருச்சி மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் க.சுரேஷ் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.



டி.ராஜா



# உத்வேகமூட்டும் ரஷ்

**மனித சமுதாயத்தைப் பற்றிய நமது புரிதலை ரஷ்யப் புரட்சி அளவிற்கு மாற்றியமைத்த வரலாற்று நிகழ்வுகள் என்று சிலவற்றை மட்டுமே நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். புதிய நாள்காட்டியின் படி நவம்பர் 7ஆம் நாள் ரஷ்ய புரட்சி தினம் கொண்டாடப்படுகிறது. பழைய நாள்காட்டியின் படி ரஷ்ய புரட்சி தினம் அக்டோபர் 25 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.**

வெகுமக்களின் புரட்சிகர சிந்தனைகளைப் பிரெஞ்சுப் புரட்சி சுடர்விடச் செய்தது. ஆனால், அந்தப் புரட்சி பின்னர், போனபார்ட்டிசத்திற்குப் பலியானது. ‘தொழிலாளர்களின் அரசு’ ஒன்றை ஸ்தாபிப்பதில் ரஷ்யப் புரட்சி தான் முதல் முறையாக வெற்றி கண்டது. சுரண்டல், அநீதி மற்றும் சமத்துவமின்மை ஆகியவை இல்லாத ஒரு சமுதாயத்தைக் காண தொலைநோக்கு பார்வை கொண்ட சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும் விழைந்தார்கள்.

ஆனால், மாமேதை லெனின் தலைமையில், மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் சித்தாந்தத்தைப் பின்பற்றி, ரஷ்ய உழைக்கும் மக்கள் சோவியத்துகளை ஆட்சி பீடத்தில் அமர்த்தியதை உலகமே கண்டு வியந்தது.

முக்கியத்துவம் வாய்ந்த அந்த வரலாற்று நிகழ்வை நேரில் அனுபவப்பட்ட அமெரிக்க பத்திரிக்கையாளர் ஜான் ரீட், ‘உலகை குலுக்கிய பத்து நாட்கள்’ என்ற அவரின் நூலில் அந்த காலகட்டத்தின் வரலாற்று மாற்றத்தைப் பற்றி விவரித்துள்ளார். மார்க்சிய கருத்துகளின் வீரமார்ந்த நடைமுறை மற்றும் ஆழமான சித்தாந்த விவாதங்கள் மீது ரஷ்ய புரட்சி கட்டமைக்கப்பட்டது. ஜார் மன்னனின் சர்வாதிகாரம் மற்றும் முதலாளித்துவ சுரண்டல் ஆகியவற்றின் பிடியில் இருந்து ரஷ்ய வெகுமக்களை அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புரட்சி விடுதலை செய்தது.

மார்க்சியம் என்ற புரட்சிகர சித்தாந்தம் தான் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோஷலிசம், சர்வதேசியம் ஆகிய லட்சியங்களை ரஷ்யப் புரட்சிக்குள் விதைத்தது. இந்தச் சித்தாந்த அடித்தளம்தான் ரஷ்ய புரட்சியை உலக வரலாற்றில் சகாப்தம் ஒன்றை நிறுவிய நிகழ்வாகவும், உலகம் முழுவதும் எழுச்சியுற்ற விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதர்ச மாகவும் முகிழ்க்கச் செய்தது.

புதியதொரு சமுதாயத்தைக் கட்டி அமைப்பதில் மார்க்சியத்தின் பங்கு பற்றிய தீவிர விவாதங்கள் ஐரோப்பா முழுவதும் நடைபெற்று வந்தது. ஆனால், மாமேதை லெனின் ரஷ்ய சூழலுக்கு இணங்க மார்க்சியத்தை நடைமுறைப்படுத்தினார். ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற அப்போதைய தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் தான் புரட்சிக்கான சூழல் அமைந்துள்ளது என்று மார்க்சிய சிந்தனையாளர்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவியது.

ஆனால், அதற்கு மாறாக, பின்தங்கிய நாடான ரஷ்யாவில் உலகின் முதல் சோசலிச புரட்சி எழுந்தது. எதேச்சதிகாரத்தைத் தூக்கியெறிவதில் ஒன்றுபட்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் சங்கமத்திற்கு மாமேதை லெனின் வழங்கிய தனித்துவமிக்க தலைமையும், ஒத்திசைவான தத்துவார்த்த வழிகாட்டுதலும் தான் அந்தப் புரட்சியைச் சாத்தியப்படுத்தியது.

அனைத்து வகையான, வடிவிலான சுரண்டல், படிநிலை மற்றும் அநீதி ஆகியவற்றை திறம்பட எதிர்த்து முறியடித்திட ஒரு தேர்ந்த சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு, அதனை சூழலுக்கு உகந்த முறையில் நடைமுறைப் படுத்துவது அவசியமாகும். இதுவே ரஷ்ய புரட்சி மற்றும் இதர விடுதலைப் போராட்டங்களின் அனுபவத்தில் இருந்து நாம் பெறவேண்டிய படிப்பினை ஆகும்.

மார்க்சியவாதிகளுக்கும், சமூக ஜனநாயகவாதிகளுக்கும் இடையேயான விவாதம் உச்சகட்டத்தை அடைந்தபோது லெனின் 1902 ஆம் ஆண்டு கூறியது பின்வருமாறு:

**“புரட்சிகர தத்துவமின்றி புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. ஆனால், சூழலுக்கு ஏற்றவாறு செயல்படுவது என்ற எழிலார்ந்த போதனையும், நடைமுறை செயல்பாட்டின் மிகக் குறுகிய வடிவங்கள் மீதான கண்மூடித்தனமான ஈர்ப்பும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்லும் போது இந்தக் கருத்தை மிக அழுத்தமாக வலியுறுத்தி சொல்ல இயலாது.”**

புரட்சியின் தத்துவம், நடைமுறை, சுரண்டலை ஒழித்து கட்டிய போராட்டம் என்று இவை அனைத்தும் ரஷ்யப் புரட்சியை காலத்துக்கு ஏற்புடைய ஒன்றாகவும், வருங்கால தலைமுறைகளுக்கு உத்வேகம் ஊட்டக்கூடிய ஒன்றாகவும் உருப்பெறச் செய்து விட்டது. புரட்சியின் செய்தி மிகத் தெளிவானது: தீர்க்கமான, குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப தத்துவத்தை நடைமுறைப்படுத்துவது.

இந்தியாவில் ரஷ்யப் புரட்சி பேரார்வத்துடன் வாழ்த்தி வரவேற்கப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு புதிய நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சியது; புதிய செயல் திட்டங்களை உருவாக்கிட வித்திட்டது. வர்க்கம், சாதி, மதம் மற்றும் பாலினம் என்று சமத்துவமின்மையால் பீடிக்கப்பட்டு, அந்நியர் ஆட்சியில் கட்டுண்டு கிடந்த நமது தேசத்தில், அனைத்துவித சுரண்டலையும் ஒழிப்போம் என்ற செங்கொடி இயக்கத்தின் முழக்கம் மக்களை வெகுவிரைவில் தன்னகத்தே ஈர்த்தது. சோஷலிச இந்தியாவை உருவாக்குவோம் என்ற லட்சியத்துடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தங்களை இணைத்துக் கொண்டார்கள்; விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு முற்போக்கான பங்களிப்பை உறுதிப்பாட்டுடன் ஈந்தார்கள்.

அரசியல் நிர்ணய சபை, பூரண சுதந்திரம், தொழிலாளர் உரிமைகள், ஜமீன்தார் முறை ஒழிப்பு, அடிப்படை உரிமைகள் போன்ற கோரிக்கைகள், தன்னலமற்ற களப்பணிகள், தோன்றிய காலத்தின் போதே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செய்த மாபெரும் தியாகங்கள், ரஷ்ய புரட்சியின் லட்சியங்களால் உத்வேகம் பெற்ற பகத்சிங் உள்ளிட்ட இளைஞர்கள் என்று இவை அனைத்திற்கும் அந்த புரட்சி கருவியாகப் பயன்பட்டது உண்மையானது.

இந்தியாவின் சிக்கலான எதார்த்த நிலையை நன்கு உணர்ந்த நமது தலைவர்கள் 1925ஆம் ஆண்டில் நடைபெற்ற கட்சியின் முதல் மாநாட்டிலேயே தீண்டாமை ஒழிப்பு பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்கள். புரட்சிகர தத்துவத்தின் வழிகாட்டுதல்படி, தொழிலாளர்களை அமைப்பு ரீதியாகத் திரட்ட, ஏஐடியுசி (1920), மாணவர்களுக்காக ஏ.ஐ.எஸ்.எஃப் (1936), விவசாயிகளுக்காக ஏ.ஐ.கே.எஸ் (1936), எழுத்தாளர்களுக்காக பி.டபிள்யூ.ஏ. (1936) மற்றும் கலைஞர்களுக்காக இப்டா (1943) ஆகிய அமைப்புகளை இடதுசாரிகள் உருவாக்கினார்கள்.

இந்த அமைப்புகள் சோதனையான காலகட்டங்களை வெற்றிகரமாகச் சமாளித்து சமுதாயத்தின் முற்போக்கான பிரிவுகளின் பிரதிநிதிகளாகத் திகழ்கின்றன.

இப்போது இடதுசாரிகளின் முன் இருக்கும் கடமை, சுதந்திரப் போராட்டத்தின் போது நாம் எதிர்கொண்ட சிக்கலான கடமையைப் போன்றதாகும். ஆர்எஸ்எஸ் – பாஜக ஆட்சியில் சாதிய பாகுபாடுகள், வகுப்புவாத மையப்படுத்துதல் மற்றும் பாலின பாகுபாடுகள் ஆகியவை புது வீரியத்துடன் நம்மோடு மூர்க்கத்தனமாக மோதிக் கொண்டிருக்கும் ஒரு நெருக்கடியான காலத்தில் நாம் வாழ்கிறோம்.

இந்தப் போக்கு நாம் போராடிப் பெற்ற சுதந்திரத்தையும், விடுதலைப் போராட்டத்தின் ‘அனைவரையும் உள்ளடக்கிய’ பெருமைமிகு மரபையும் விழுங்கி வருகிறது. பணவீக்கம், பசி, சமத்துவமின்மை ஆகியவற்றால் மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். புதிய தாராளமய முதலாளித்துவ தாக்குதல் நமது தேசத்தின் சொத்துக்களையும் சூறையாடி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் ஆர்எஸ்எஸ்–சின் பிரிவினைவாத



# ப.மாணிக்கம் ஒரு தீர்க்கதரிசி

**தோழர் இரா.நல்லகண்ணுவிடம்**
**தோழர் எஸ்.காசி விஸ்வநாதன் நேர்காணல்**



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்ல கண்ணு நெல்லை சதி வழக்கில் கைதுசெய்யப்பட்டு சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்தவர். மாணிக்கத்தின் நெருங்கிய நண்பர்.. ப.மாணிக்கம் கடந்து வந்த பாதையை நினைவு கூர்வதற்காகவும், ப.மாணிக்கம் அவர்களுடைய நினைவுகளை பகிர்ந்து கொள்ளவும் அவரை நேரில் சந்தித்தோம்.**

தங்களோடு சிறையிலிருந்த வாத்தியார் ஜாக்கப் அவர்களைப் பற்றியும்... சிறை வாழ்வில் அவர் சந்தித்த ,அனுபவித்த துன்பங்களை பேசத் தொடங்கினார்.



கடந்தகாலநினைவுகள் ஆர்என்கே அவர்களை 75 ஆண்டுகளுக்கு பின்னோக்கி இழுத்துச் சென்றன. மிகுந்த கூச்சத்துடன் தன்னைப் பற்றி சொல்லத் தொடங்கினார்.

“என்னுடைய பெற்றோருக்கு 10 குழந்தைகள். மூன்றாவது மகன் நான்... அப்பா ராமசாமி வைணவ மதத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஸ்ரீவைகுண்டம் காரனேசன் உயர்நிலைப் பள்ளியில் படித்த நான்... உயர் கல்விக்காக திருநெல்வேலி எம்டிடி இந்து கல்லூரியில் சேர்ந்தேன். இன்டர்மீடியட்க்கு மேல் படிக்க இயலவில்லை. அப்பொழுது பொதுவுடைமைக் கொள்கையின் மீது ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. 1943இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைத்துக் கொண்டேன்.

கட்சி என்னைக் களக்காடு பகுதியில் விவசாயிகளுக்ளுக்காக வேலை செய்ய அனுப்பியது. எனக்கும் தேச விடுதலைப் போராட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது. இந்தக் காலகட்டம் தமிழக அரசியலிலும், இந்திய அரசியலிலும் மிகவும் கொந்தளிப்பான காலகட்டம் ஆகும் தேச விடுதலைப் போராட்டம் தீவிரமாக இடம் பெற்ற காலமும் ஆகும். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தேசிய இயக்கம் தவிர பொதுவு டமை இயக்கமும், சுயமரியாதை இயக்கமும் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்த நேரம்.

அக்காலத்திய படித்த இளைஞர்களில் பெரும்பாலானோர் தேச விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் காட்டினர். அதேசமயத்தில் காங்கிரஸின் கருத்துக்களுடன் மாறுபட்டவர்கள் பொதுவுடமை இயக்கத்தையும் சுயமரியாதை இயக்கத்தையும் ஆதரித்தனர். இந்தச் சூழ்நிலையில் தீவிரமான அரசியல் விவாதங்கள் பல பகுதிகளிலும் நடைபெற்றது. இந்நிலையில் நான் தேச விடுதலைப் போராட்ட உணர்வு உள்ளவனாகவும் மாறி, பின்னர் இடதுசாரி கருத் துக்களால் ஈர்க்கப்பட்டு பொதுவுடமை இயக்கத்தில் இணைத்துக் கொண்டேன். அக்காலத்தில் பொதுவுடைமை இயக்கம் தடை செய்யப்பட்டிருந்ததால் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருந்தது.

இதன் சார்பாக பல இளைஞர் மன்றங்கள் செயல்பட்டு வந்தன. இவையெல்லாம் என்னுடைய சமூகப் பார்வையை விரிவுபடுத்த துணையாக நின்றன. இவையெல்லாம் ஒன்று சேரஞ் 1947 ஆம் ஆண்டு மே தினத்தன்று விவசாய சங்கத்தின் சார்பில் ஒரு ஊர்வலம் நாங்குநேரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேராசிரியர் நா.வானமாமலை வழக்கறிஞர் என்.டி. வானமாமலை, வி.எஸ். காந்தி ஆகியோருடன் நானும் இருந் தேன். ஊர்வலத்தினர் நாங்குநேரியில் பிரதான தெருக்கள் வழியாகச் சென்று, பின்னர் தெற்கு மாட வீதி வழியாக வந்து கோவில் முன்னால் உள்ள கல் மண்டபத்தை வந்தடைந்தனர்..

எங்கே கோவிலுக்குள் நாங்கள் போவோமோ என்று பயந்த ஜீயர் சுவாமிகளின் அடியாட்கள் வேல்கம்பு ஆயுதங்களுடன் எங் களை மறிக்க காத்திருந்தனர். ஊர்வலம் நடத்திய எங்களுக்கு கோவி லுக்குள் செல்ல வேண்டும் என்ற திட்டம் எதுவுமில்லை.

அவர்கள் வேல் கம்பு முதலியவற்றுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

மடத்தின் ஆட்கள் எங்களை தடுத்தார்கள் ஆனாலும் பேராசிரியர் வானமாமலையும், நானும் மிகுந்த துணிச்சலுடன் ஊர்வலத்தின் நியாயத் தன்மையை எடுத்துரைத்தோம்.

ஊர்வலத்தைத் தடுக்க வந்தவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி என்னவென்றால் நாங்குநேரி கிராம முன்சீப் மகன் ஊர்வலத்தை தலைமை தாங்கி நடத்தியது தான். அவர்கள் செயலற்று நின்றனர். இது மடத்தின் தலைமைக்கும் கோவில் நிர்வாகிகளுக்கும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. பேராசிரியர் படிப்பாளி மட்டுமல்ல போராளியும்தான். அவரோடு நானும் நின்றது நம்ம வீட்டு பிள்ளை அப்படிங்கிற பார்வையும் கூட இருந்துச்சு...

> கட்சி உறுப்பினர்களின் அரசியல் தகுதியை ஆய்வு செய்து, அவர்களின் திறமைக்கு ஏற்ப முக்கியத்துவம் தர வேண்டும். அரசியல் தரத்தை உயர்த்த, மேலும், மேலும் உயர்த்த பாடுபட வேண்டும்
>
> **– லெனின்**



# புரட்சி

கட்டுக்கதைகள் விண்ணை முட்டும் அளவிற்கு அதிகரித்து வருகிறது. அதன் பிரச்சார சாதனங்கள் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் இருந்து நமது கவனத்தை திசை திருப்பிடவும், மாற்றுக் கருத்துடையவர்களை தேச விரோதிகள் என்று முத்திரை குத்துவதற்கும் முயன்று வருகின்றன.

நெருக்கடியால் சூழப்பட்டுள்ள நிலையில், சித்தாந்தம் மற்றும் சித்தாந்த போராட்டத்தின் முக்கியத்துவம் மிகத் துல்லியமாகத் தெளிவாகி இருக்கிறது. மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் முற்போக்கு எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு பாஜகவை முறியடிக்க வேண்டும் என்பதே நமது திட்டத்தின் முக்கியமான அங்கமாகும்.

மனுஸ்மிருதியை உயர்த்திப்பிடிக்கும் ஆர்எஸ்எஸ், பிரிவினைவாத மற்றும் வன்முறையைத் தூண்டும் கருத்துகளையும், அரசியலையும் வேராகக் கொண்டிருக்கிறது. அவர்கள் நமது அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதோடு சாதி, மதம், பாலினம் மற்றும் ஆணாதிக்க அடிப்படையில் ஒரு மதவாத படிநிலைகள் கொண்ட சமுதாயத்தைப் பற்றிய தீவிரமான நோக்குநிலை உடையவர்கள் ஆவர்.

**தேசத்தின் இன்றைய சூழல் பாஜக ஆர்எஸ்எஸ்க்கு எதிரான ஒரு சமரசமற்ற சித்தாந்த போராட்டத்தை முன்வைக்கிறது. இந்தப் போராட்டத்தில் இடதுசாரிகள் ஒரு தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்க வேண்டும். அதுவே மக்களோடு நம்மை இணைக்கும்; அரசியல் மற்றும் தேர்தல் போராட்டங்களில் அதன் மூலமே நாம் வெற்றி பெற முடியும். இதர மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள், சித்தாந்த பிரச்சனைகள் குறித்த தெளிவைப் பெறுவதில் இடதுசாரிகளின் பாத்திரம் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தும்.**

உழைக்கும் வர்க்கத்தின் மீதும், நமது மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசின் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்படும் இந்தக் காலச் சூழலில் ரஷ்யப் புரட்சியை நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுவதும், அதன் நீட்சியாக உழைக்கும் வர்க்கத்தினர் ஓரணியாக திரளுவதற்கு ரஷ்யப் புரட்சியின் அறைகூவலும் முக்கியத்துவம் பெறுகிறது.

வரலாற்றின் ஒப்பற்ற நிகழ்வான ரஷ்ய புரட்சியின் தினத்தை நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுவதும், அதற்கென நாம் ஒன்றிணைவதும் ஒட்டுமொத்த நவீன தாராளமய, முதலாளித்துவ அமைப்பையே நடுக்கமுறச் செய்கிறது.

சோவியத் யூனியன் தகர்ந்து போய் இருந்தாலும், நூற்றாண்டு கடந்த நிலையிலும் ரஷ்ய புரட்சி உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு உத்வேகம் அளிக்கிறது. இனிவரும் காலங்களிலும் நீதிக்காக களம் காணும் புரட்சியாளர்களுக்கும், போராளிகளுக்கும் ரஷ்ய புரட்சி தொடர்ந்து உத்வேகமூட்டும்.

தமிழில்: **அருண் அசோகன்**



மடத்து நிலங்களில் விவசாயிகள் குடியிருக்க இட மில்லை. வீடு கட்டுறதுக்கு நிலை வைக்க கூடாது. முத்திரை மரக்கா (அளவிடும் படி) பயன்படுத்தமாட்டாங்கஞ் செருப் பணிந்து ரோட்டில் போக கூடாது. இதையெல்லாம் எதிர்த்து போராடினோம்.

1948 ல் கட்சியோடு நெல்லை மாவட்ட முதல் மாநாடு வண்ணாரப்பேட்ட பேராசிரியர் வானமாமலை டுட்டோரியல் காலேஜில் தான் நடந்தது. அப்ப அதுக்கு பேரு ஸ்டூடன்ஸ் டுட்டோரியல்ஸ் பாலன் தான் அறிக்கையெல்லாம் எழுத்துப் பூர்வமா வைச்சாரு.. உறுதிமொழி ஏத்துக்கிட்டோம். சொந்த நலனவிட, கட்சியோட, மக்களோட நலன பாதுகாப்போம்னு. மாணிக்கம் உறுதிமொழியை சொல்லச் சொல்ல நாங்கள் ஏத்திக்கிட்டுடோம்.

கட்சி கார்ட கொடுத்தாங்க. ப.மாணிக்கத்தை நெல்லை மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுத்தோம். கல்கத்தாவுல அகில இந்திய மாநாடு. கட்சி காங்கிரஸ் நடந்துச்சு. கட்சியை தடை செஞ்சுட்டாங்க. மாநாட்டில் எடுத்த முடிவு தவறுன்னு ப.மாணிக்கம் சொன்னாருஞ் அவரு ரொம்ப படிச்சவரு. விவரம் தெரிஞ்சவரு. ஆனாலும் கட்சி முடிவை ஏத்துகிட்டாரு. எல்லாரும் தலமறைவா போயிட்டோம். என்னை போலீஸ்காரரங்க தேடுறாங்க. பாலனை ஏர்வாடியில் இருக்கிற பெண்கள் காப்பாத்தினாங்க. அவரை பிடிக்க முடியல. களக்காடு பக்கத்துல ஒரு சின்ன கிராமத்தில கட்சிக் கூட்டத்தை போட்டோம்.

அந்த ஊர்ல நல்லசிவத்தோட சொந்தக்காரங்க எல்லாம் இருந் தாங்க. ராத்திரி கூட்டம். ஊருக்கு இரண்டு பக்கத்திலும் தோழர்கள் பாதுகாப்பா இருந்தாங்க. எந்த நேரத்துலயும் போலீஸ்காரங்க வந்தாங்கன்னா தகவல் சொல்வதற்காக. சாப்பிட ஒண்ணுமே இல்லா ததினால பாலனும், மாணிக்கமும் புண்ணாக்கையும், கருப்பட்டியையும் இடிச்சு உருண்ட பிடிச்சு சாப்பிட்டாங்க. ப.மாணிக்கத்துக்கு ஒத் துக்கல. ரொம்ப அவதிப்பட்டார்...

தேடறாங்ன்னு தெரிஞ்சு. குறுக்கால நடந்தே போய் விட்டோம். நல்ல மழை நேரம். இரவோடு இரவாக வரப்பு வழியாக நடந்து போய் விட்டோம். பார்க்கிறவங்க தெக்கேந்து வேலை தேடி ஊருக்குள்ள வந்திருக்கிறதா.. சொல்லியிருக்கோம்..

காடு, மேடு, மலை எல்லா பக்கத்திலயும் அலஞ்சோம். அதுக்குள்ள ஒருத்தன் என்னய காட்டிக் கொடுத்துட்டான் ..ஆனால் தப்பிச்சுட்டேன் ஒரு நாள் கூட்டம் போட்டுகிட்டு இருக்கும்போதுஞ் மாட்டிகிட்டேன்... நடு ராத்திரி ரெண்டு மணி இருக்கும். பிடிச்சுட்டாங்க. டோனாவூர் பக்கத்த சேர்ந்த ஒரு ஆள் உளவு சொல்லிட்டான்.

ஏர்வாடி கிட்ட கட்டளை கிராமத்துப் பக்கம் என்னை கைது பண்ணிணாங்க.

1949 டிசம்பர் 29 ம் தேதி ராத்திரி ரெண்டு மணி இருக்கும். கைது பண்ணிட்டாங்க. அங்க பக்கத்துல இருந்த ஆட்டுரல்ல 4 நாட்டு வெடி குண்டு இருந்துச்சு. அதையும் நான்தான் வச்சிருக்கேன்னு. பிடிச்சு கிட்டாங்க. அடி, உதை சித்ரவதை எல்லா செஞ்சாங்கஞ் கையிரண்டையும் பின்னால இறுக்கி கட்டிட்டாங்க. களக்காடு டிராவலர்ஸ் பங்களாவுல வைச்சு அடி பின்னி எடுத்தாங்கஞ் மீசை முடிய ஒவ்வொன்னா இழுத்து புடுங்கிறாங்க. ரத்தம் கொட்டு கொட்டுன்னு கொட்டுது. கைய வேற பின்னால இழுத்து கட்டிட்டாங்க. காலையும் கட்டிட்டாங்க. நான் என்ன செய்ய முடியும்...

மறுநாள் சாயந்திரம் முடிக்க கையை கட்டி இருந்தாங்க.. அப்புறம் கோர்ட்டில ஆஜர்படுத்தி, கொக்கிரகுளம் ஜெயிலில கொண்டுபோய் அடச்சாங்க.. ஜெயிலுக்குள்ள ஒவ்வொருத்தரயா கூட்டிட்டு வந்தாங்க.. 96, 97 பேரை ஒரே நேரத்துல அட்ச்சாங்க.. “15, 20 நாள் கழிச்சு ப.மாணிக்கத்தையும் பிடிச்சிட்டாங்க...” தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நா தழுதழுத்தது.. உணர்ச்சியின் கொந்தளிப்பில் இருந்த அவரை மெதுவாக ஆசுவாசப்படுத்தி பேசத் தூண்டினோம்.

“ஜெயில்ல பல தோழர்கள் இருந்தாங்க... குறிப்பா சொல்லனும்னா... வேலாயுதம்... அவருக்கு தூக்குன்னு... நம்ம வக்கீல்கள் என்.டி. வானமாமலையும், பாளை சண்முகமும் சொல்லிட்டாங்க...

இத அவங்க குடும்பத்துக்கு சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கும், மாணிக்கத்துக்கும் கொடுத்துட்டாங்க... எங்களுக்கு தர்மசங்கடமான நிலைமை வேலாயுதத்தோட மனைவி பாப்பம்மா கையால எத்தனை தடவை சாப்பிட்டு இருக்கோம்...

அவங்க கிட்ட மெதுவா சொல்ல ஆரம்பித்தோம்...

அந்த அம்மா ரொம்ப துணிச்சலானவங்க... நாங்க தயங்குவதைப் பார்த்துட்டு... ‘கவலைப்படாதீங்க தோழர் எங்க வீட்டுக்காரரு கட்சிக்காகதானே வேலை பார்த்தார்... என் பிள்ளைகள பீடி சுத்தி காப்பாற்றி விடுவேன்... கட்சி காப்பாத்தும் என்று எங்களைவிட தைரியமாக அந்த அம்மா சொன்னாங்க...

எங்களுக்குன்னா ஆச்சரியம்... ஆறுதல் சொல்ல போன எங்கள ஆறுதல் படுத்துனதுதான்...”

அந்த அம்மாட்ட இருந்த, மன துணிச்சல்.. இதப்பாத்த

மாணிக்கமும், நானும் திகச்சு போயிட்டோம். ஜெயிலுக்குள்ள எத்தனையோ சம்பவங்கள்.. அதையெல்லாம் நான் ஏற்கனவே எழுதிட்டேன்... வேலாயுதத்துக்கு காச நோய் வந்து துடிச்சாரு..


நானும் மாணிக்கமும் ஜெயிலில் இருந்து வந்த பிறகு வாத்தியார் ஜாக்கப் கிட்ட சொல்லி வேலாயுதம் வரலாற்ற சின்னப் புத்தகமாக கொண்டு வந்தோம்.. அந்த குடும்பத்திற்கு உதவினோம் . திருநெல்வேலி மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி கட்டப்பட்டது மாணிக்கம் காலத்தில்தான்..

என்று மலரும் நினைவுகளை தோழர் இரா.நல்லகண்ணு அவர்கள் நம்மோடு பகிர்ந்து கொண்டார்..

தொடர்புக்கு: 94434 68710

முதலாளித்துவத்தில் உற்பத்தி சமூக ரீதியாக இருக்கிறது. ஆனால், உற்பத்தியில் உழைப்புச் சுரண்டல் தனிவுரிமையாக இருக்கிறது. இதுதான் முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு

**- மார்க்ஸ்**





பேராசிரியர் மு.நாகநாதன்

# Modiflation




**பணவீக்கம் என்றால் என்ன? விலைவாசி உயர்வையும் பணமதிப்பு குறைந்து வருவதையும் விளக்கும் ஒரு சொல்.உடலின் எப்பகுதியிலும் வீக்கம் ஏற்பட்டாலும் நோயின் அறிகுறி என்று தானே நாம் அச்சப்படுகிறோம். மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெறுகிறோம்.**

அன்றாட வாழ்வில் தொடர்ந்து விலைகள் உயரும் போது, இதுவும் பொருளாதார நோயின் அறிகுறி என உணர வேண்டும்.. எனவே தான் பணவீக்கம் என்ற சொல் விலைவாசி உயர்வு, பணமதிப்பு சரிவு இரண்டையும் அடையாளப்படுத்துகிறது.

இந்தப் பணவீக்கம் தாக்குதல் ஏழைகளையும், நடுத்தரப் பிரிவினரையும் வாட்டி வதைக்கிறது. ''ஒவ்வொரு பொருளின் விலை ஏற்றமும் இறக்கமும் நேரத்திற்கு நேரம் மாறிக் கொண்டே இருக்கிறது.

அத்தகைய ஒவ்வொரு மாற்றத்தின் போது பணத்தின் வாங்கும் திறனும் அந்தப் பொருட்களின் திசையிலேயே சென்று கொண்டிருக்கிறது.'' என்று பணவீக்கம் தொடர்பான விளக்கத்தை அளித்தார் பொருளாதார அறிஞர் ஆல்பிரட் மார்ஷல் .

மார்ஷல் காலம் போய் மோடி காலம் வந்துவிட்டது. மார்ஷல் ஏற்றம் இறக்கம் எனக் கூறினார்.

ஆனால் எந்த முதன்மையான மக்கள் நுகரும் பொருளும் ஏற்றம் கண்டதே ஒழிய இறக்கத்தை இந்தியாவில் காண முடியவில்லையே!

வாழ்வின் இறக்கத்தை மட்டுமே மக்கள் கண்டு வருகின்றனர். மற்ற நாடுகளை ஒப்பிடும்போது போது இந்தியாவில் மோடி ஆட்சியில் பெட்ரோலிய பொருட்கள் விலை 300 விழுக்காடு உயர்ந்துள்ளது. இது சந்தை விலையும் அல்ல.

**ஒன்றிய அரசின் வரிச் சுமை ஏற்றத்தால் ஏற்பட்ட விளைவு.**

சந்தைப் பொருளாதாரத்திற்குச் சப்பைக் கட்டும் மற்றொரு பொருளாதாரப் பேராசிரியர் மில்டன் பிரீட்மேன், ''பணவீக்கம் என்பது சட்டத்தின் வழியே அறிவிக்கப்படாத வரிச் சுமை'' என்றார்.


ஆனால், ''வரிச் சுமை வழியாகப் பணவீக்கத்தை வானுயர உயர்த்திவர் மோடி'' என பாஜக சங்கிகள் அறிவார்களா? எனவே தான் இந்தக் கொடிய விலை உயர்வை 'மோடி வீக்கம்' என அழைப்பதே சரியாக இருக்கும்.

எரிபொருள் விலை உயர்வு போக்குவரத்து உட்படப் பல பொருளாதாரக் காரணிகளின் விலை ஏற்றத்திற்குப் பல்வேறு நிலைகளில் வழிவகுக்கிறது.

இதைத்தான் பணவீக்கத்தின் பல பரிமாணங்களைப் பல ஆய்வாளர்கள் பல கால கட்டங்களில் சுட்டியுள்ளனர்.

நடை வேகத்தில் செயல்படும் பணவீக்கம் **(Walking inflation)** தவழ்ந்து செல்லும் பணவீக்கம் **(Creeping inflation)** ஓடும் பணவீக்கம் **(Running inflation)** பாய்ந்து செல்லும் பணவீக்கம் **(Galloping inflation)** தேவை ஆர்வப் பெருக்கத்தால் ஏற்படும் தேவை இழுப்பு பணவீக்கம் **(Demand pull inflation)** செலவு உந்து பணவீக்கம் **(Cost push inflation)** என எல்லா வகையான பணவீக்கங்களும் இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரழித்து வருகின்றன.

**முதலாளித்துவப் பொருளாதார முறையைத் தீவிரமாக ஆதரித்த இங்கிலாந்து நாட்டின் பொருளாதார அறிஞர் கெயின்ஸ் ''வரி உயர்வு, விலை உயர்வு என்ற இரு அரைவைக் கற்களுக்கு நடுவில் முதலாளித்துவத்தைப் போட்டுவிட்டால் அது தானாகவே அழிந்துவிடும்'' எனப் புரட்சியாளர் லெனின் கூறிய கருத்தைச் சரியே என ஒப்புக்கொண்டார்.**



மேலும் கெயின்ஸ் ''தொடர்ந்து பணவீக்கம் கட்டுப்படுத்தாமலிருந்தால் எல்லாக் குடிமக்களுடைய செல்வத்தின் பெரும் பகுதியை அவர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக அரசாங்கம் கைப்பற்றும் செயலே விலைவாசி உயர்வு'' என்றும் குறிப்பிட்டார்.

இந்த விளக்கங்களையும் தாண்டி பெருகி வரும் வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வறுமை, போதிய ஊட்டச்சத்து இல்லாமல் பெரும்பாலான மக்கள் படும் துயரம் ஆகியவற்றைக் கணக்கீட்டால், பணவீக்கமும் விலைவாசி உயர்வும் மக்கள் மீது பல்முனை தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்பதைக் காணலாம். இன்றைய ஒன்றிய அரசு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய காரணத்தால்தான் பாஜக வைப் பல மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் மக்கள் மண்ணைக் கவ்வ வைத்துள்ளார்கள்.

இதை ஓர் எச்சரிக்கையாக ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். அம்பானி, அதானி பெரும் முதலாளிகளின் நலன்தான் தன் நலம் என்றும், பாஜகவின் பலம் என்றும் எண்ணிச் செயல்படுவதை நிறுத்த வேண்டும்.

இல்லையெனில் மோடி வீக்கம் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் சீரழித்து விடும்.

தொடர்புக்கு: **94442 83338**

---



பி.எஸ்.மாசிலாமணி

# இந்திய ஏற்றுமதியில் பி.டி.அரிசி வெளிநாட்டில் கண்டுபிடித்து முடக்கம்

**2021 ஜூன் மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி மூட்டைகளில் 500 டன்கள் மரபணு மாற்றப்பட்ட அரிசி கண்டறியப்பட்டு அங்கு முடக்கி வைக்கப்பட்டுள்ளது என செய்தி வந்துள்ளது. இதுபோல் 2012ஆம் ஆண்டிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட பாசுமதி அரிசியில் பி.டி. கண்டறியப்பட்டுள்ளது.**

இதனால் உணவுப் பொருட்கள் உலக ஏற்றுமதிக்கு முடக் கத்தை ஏற்படுத்தும் ஆபத்து உள்ளது. ஏற்றுமதிக்கு மட்டுமல்ல, இந்தியாவிலும் விற்பனை செய்யப்படும் அரிசியை ஆய்வு செய்ய வேண்டிய அவசியமும். ஆபத்தும் உள்ளது என்பதை மத்திய அரசு உணர வேண்டும்.

மரபணு விதைகள் பருத்திக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டு பி.டி.. பருத்தி என விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. மற்ற வேளாண் உணவு உற்பத்தி பொருட்கள் மரபணு ஆய்விற்கு மட் டுமே மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் கூறியுள்ளது.

மரபணு செய்யப்பட்ட உணவுப் பொருட்களை ஆய்வு செய்திட இந்தியாவிலேயே ஆராய்ச்சிகூடம் இல்லை என மத்திய அரசால் அப்போது கூறப்பட்டது. இந்த நிலையில் கத்தரி. சோயா எப்படி மரபணு மாற்றப்பட்ட விதைகளாக வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மகாராஷ்டிரா விவசாயிகள் களைக் கொல்லிகளை தாங்கும் பி.டி. பருத்தியை எப்படி லட்சக்கணக்கான ஏக்கரில் பயிரிடுகிறார்கள். இந்தியாவில் சிக்கிம் மாநிலத்தில் மட்டும் மரபணு விதைகள் பயிரிடுவது கிடையாது.




இந்தியாவில் மான்சான்டோ மற்றும் சின்ஜென்டா கம்பெனிகள்தான் பி.டி. விதைகளை விற்பனை செய்து வருகிறது. அதுவும் கடந்த 8 ஆண்டுகளுக்கு மட்டும் பி.டி.பருத்தி விதைகளுக்காக 1500 கோடி ரூபாய் அளவில் இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பி.டி சம்மந்தமான கட்டுபடுத்தலுக்கு மூன்று துறைகள் மத்திய அரசு வைத்துள்ளது. மத்திய அரசு மரபணு மாற்றப்பட்ட பயிர்களை ஆராய்ச்சிக்கு மட்டுமே கோவை வேளாண் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுமதி வழங்கிய நிலையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இதை எதிர்த்தது.

ஆய்வுக்காக பயிரிடப்படும் பி.டி. சாகுபடியில் காற்றின் மூலம், தண்ணீரின் மூலம், பணியாளர்கள் மூலம் மரபணு பரவல் ஆவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். இந்த சூழலில் கண்டுபிடிக்கப்படுகிற விதைகளில் ஆபத்து மற்றும் ஆய்வை புரிந்து கொள்ளாத நிலையில் இது கூடாது என போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் எப்படி பி.டி அரிசி வந்தது. நமது ஏற்றுமதி உலகச் சந்தையில் ஒரு பக்கம் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது.

இதைவிட ஆபத்து... இந்தியாவிலும் இதுபோன்ற அரிசி உள்ளிட்ட வேளாண்மை உணவு பொருட்கள் விற்பனை ஆகி இருக்குமோ என்ற அச்சம் இயற்கையாகவே நமக்கு ஏற்படுகிறது. சுற்றுச்சூழலுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது.

எனவே மத்திய அரசு இது சம்பந்தமான ஒரு சிறப்பு நிபுணர் குழுவை விரைவாக அமைத்து இந்திய அளவில் ஆய்வு நடத்த வேண்டும். பி.டி.உணவுப் பொருட்களை முற்றாக தடை செய்திட வேண்டும்.

மேலும் ஆய்வுக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிற பி.டி சோதனைகளை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

---

# கூட்டு பாலியல் வன்புணர்வு செய்து கொலை

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்


இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் பாபநாசம் அருகே அம்மாபேட்டை அடுத்த சூழியக்கோட்டையைச் சேர்ந்த கனகவல்லியை கூட்டு பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்த கொடுமையை கண்டித்தும், அவர்களது குடும்பத்திற்கு தமிழக அரசு ரூ 25 லட்சம் இழப்பீடு வழங்க கோரியும் கண்டன ஆர்ப்பாட்டமானது அம்மாபேட்டை பேருந்து நிலையத்தில் நடைப்பெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அம்மாப் பேட்டை ஒன்றிய செயலாளர் பி.தாமரைச்செல்வி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் டி.கண்ணகி, மாவட்ட தலைவர் வசந்தி உள்பட பங்கேற்றனர். இதில் பங்கேற்றவர்கள் நூதன முறையில் பிரேதத்தை கையிலேந்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# தோழர் பி.வி.ரெத்தினசாமி படத்திறப்பு

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆதிரெங்கம் ஊராட்சியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினராக இருந்து செயல்பட்ட பி.வி.ரெத்தினசாமி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி அக்.26 அன்று அவரது இல்லத்தில் அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. அவர்கள் மறைந்த பி.வி.ஆர் அவர்களின் படத்தினை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தோழர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர், கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., பி.வி.சந்திரராமன் உள்ளிட்ட தோழர்கள் பி.வி.ஆருக்கு வீரவணக்கம் செலுத்தினர்.



ஆர்.பாலச்சந்திரன்

# இயக்கம் வளர்த்த தலைவன் பி.சி.ஜோஷி



**பி.சி.ஜோசி என்று அன்புடன் அழைக்கப்படும் தோழர் பூரணச்சந்திர ஜோஷி அவர்கள் உத்திரப் பிரதேசத்தில் அல்மோரா என்னுமிடத்தில் 1907ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் நாள் பிறந்தார். பல்கலைக் கழகத்தில் வழக்கறிஞர் கல்விக்கான எல்.எல்.பி வகுப்பில் சேர்ந்து பயின்றார். பின்னர் பொதுவுடமை இயக்கத் தொடர்பு காரணமாகக் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்தே தேர்வு எழுதி வெற்றிபெற்றார்.**

ருஷ்யப் புரட்சியின் தாக்கம் பி.சி.ஜோஷியையும் ஆட்கொண்டது..மார்க்ஸீயம் மற்றும் கம்யூனிஸக் கொள்கைகள் மேல் ஆர்வம் கொண்டார். கம்யூனிஸ்ட் ஊழியராக மலர்ந்தார். கம்யூனிஸ இயக்கம் வேகமாக வளர்வதைக் கண்ட ஆங்கிலேய அரசு அதை முலையிலேயே கிள்ளிஎறிய முற்பட்டது. முஸாபர் அஹமது, எஸ்.ஏ. டாங்கே, எஸ்.வி.காட்டே, எஸ்.எஸ்.மிராஜ்கர், பி.சி.ஜோஷி ஆகியோர் உள்ளிட்ட 31 கம்யூனிஸ்ட்களைக் கைது செய்து ஒரு சதி வழக்கு தொடங்கியது.. இந்த சதிவழக்கின் பெயரே மீரட் சதி வழக்கு ஆகும்.

மீரட் சிறைச்சாலையில் இருந்தபோது மார்க்ஸீய நூல்கள் அனைத்தையும் படிக்கும் வாய்ப்பு ஜோஷிக்குக் கிடைத்தது. 1934ஆம் ஆண்டு கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டுஜோஷி விடுதலை செய்யப்பட்டு பணிகளைத்தொடர்ந்தார். தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட்கட்சி 1936ஆம் ஆண்டு பி.சி ஜோஷியை பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. அப்போது அவருக்கு வயது 28. பி.சி.ஜோஷி கட்சியைக் கட்டுவதில் தனது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்தினார்.

**1937ஆம் ஆண்டுமுதல்1939 வரைப்பட்ட குறுகிய மூன்றாண்டு காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் சக்தியாகத் தோன்றியது.**

**1943ஆம் ஆண்டு.பம்பாயில் நடைபெற்ற மகா நாட்டில் ஜோஷி மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பம்பாய் மகாநாட்டின் சமயம் அவரது திருமணம் நடந்தது. சிட்டகாங் வீராங்கனை தோழியர் 'கல்பனாதத்'தை திருமணம் செய்து கொண்டார்.**

**1943ஆம் ஆண்டு வங்காளத்தில் வரலாறு காணாத பஞ்சம் ஏற்பட்டு லட்சக்கணக்கானோர் அனாதைகளாக மடிந்தனர். இச்செய்தி அறிந்ததும் ஜோஷி அங்கேசென்று நிவாரணப் பணிகள் மேற்கொண்டார்.**

**1946இல் நடைபெற்ற கடற்படை எழுச்சிக்கு ஆதரவாக மக்களைத்திரட்டிப் போராடியது கம்யூனிஸ்ட் கட்சி. பம்பாயில் கடற்படை வீரர்களுடன் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சேர்ந்து அணிவகுப்பு நடத்தினர். பிரிட்டீஷார் கடும் அடக்கு முறையை ஏவினர். சுமார் 600பேர் கொல்லப்பட்டனர்.**

கடற்படை வீரர்கள் தங்கள் கப்பல்களில் செங்கொடி மற்றும் காங்கிரஸ், முஸ்லீம் லீக் கொடிகளை ஏற்றிப் போராடியது ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு பெரும் திகிலை அளித்தது. இது இந்திய விடுதலையை விரைவுபடுத்தியது. 1945க்குப்பின் சுதந்திரம் அடைந்த காலம் வரை கட்சியின் செயல்பாடுகள் எழுச்சிமிக்கதாய் இருந்தது. தெபாகா விவசாயிகள் போராட்டம், புன்னப்புரா வயலாறு போராட்டம், கப்பற்படை எழுச்சி. தெலுங்கானாப் போராட்டம் ஆகியவை அனைத்தும் இக் காலகட்டத்தில் நிகழ்ந்தவை.

இந்தியா விடுதலை அடைந்தபின் 1948 மார்ச் மாதம் கல்கத்தாவில் கம்யுனிஸ்ட் கட்சியின் 2வது மகாநாடு நடைபெற்றது. அதில் பி.சி. ஜோஷி பொதுச்செயலாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

பி.டி.ரணதிவே பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்கத்தா கட்சிக் காங்கிரஸ் மக்கள் ஆயுதப் புரட்சிக்குத் தயாராகி விட்டனர் என்ற தவறான நிர்ணயிப்பை மேற்கொண்டது.

இதைக் காரணமாகக் கொண்டு அரசாங்கம் கம்யுனிஸ்ட் கட்சியையும் அதன் வெகு ஜன இயக்கங்களையும் தடை செய்தது. ஏராளமானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கட்சியின் அதிதிவீரத் தலைமை. ஜோஷியை கட்சியைவிட்டு நீக்கியது.

ஜோஷி ஒரு கம்யுனிஸ்ட்டுக்கே உரிய கட்டுப்பாடுடன் பொறுமைகாத்தார். தலைமையின் அதிதிவீரப்போக்கு கட்சியையும் அதன் வெகுஜன இயக்கங்களையும் வெகுவாகப் பாதித்தது. இரண்டாண்டுகளுக்குப் பின் பி.டி.ரணதிவே பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1951ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்பு மகாநாட்டில் தோழர் அஜாய் கோஷ் பொதுச்செயலாளர் ஆனார். ஜோஷி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டன.

1955 பாலக்காடு 4வது மகாநாட்டில் மீண்டும் மத்தியக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மத்தியக் கட்சிப் பத்திரிக்கையின் ஆசிரியராகப் பணியாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சியில் பத்திரிக்கைத்துறையை உருவாக்கியவர் இவரே சிறந்த ஆய்வாளராக விளங்கினார்.

மிகச்சிறப்பான முறையில் இயக்கத்தைக் கட்டிக்காத்த மாபெரும் தோழர் பி.சி.ஜோஷி இதய நோயால் 1980ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் நாள் தனது 78ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

*அவரது நினைவு நாளான நவ.9 அவரை நினைவு கூர்வோம்.*

## பாலன் இல்லத்தில் நவம்பர் புரட்சி தினம்



## கொடியேற்று விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு அலுவலகமாக பாலன் இல்லத்தில் நவ.7 அன்று நவம்பர் புரட்சி தினக் கொடியேற்று விழா நடைபெறுகிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. கொடியேற்றினார்.

இந்நிகழ்வில் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., மாநில செயற்குழு உறுப்பினர்கள் டி.எம். மூர்த்தி, நா.பெரியசாமி, பி.பத்மாவதி எக்ஸ்.எம்எல்.ஏ., கே.சந்தானம், தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை, காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் எல்.மேகநாதன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், அலுவலகச் செயலாளர் எம்.ஆர். இரகுநாதன் மற்றும் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 46. இனப்பெருக்கு

**இனப்பெருக் கெல்லாம் இனப்பெருக்குக் கில்மற்**
**றினப்பெருக்குக் காகும் அது**

ஒரு இனம் பெருகுவது, தன் இனம் பெருகுவதற்காக மட்டுமல்ல. பிற இனங்களுக்கு பயன்பட்டு உதவுவதற்காகத்தான்.

**காய்ந்த கனிந்துதித்தால் காணுமோ பூஉதான்**
**ஆய்ந்துமே தேடினு மாங்கு**

காய்ந்து முற்றியவை மீண்டும் விதையாகி அனைத் தும் நிலத்தில் விழுந்து முளைத்தால், இவ்வுலகம் தாங்காது. ஆய்ந்து பார்த்தால் விளங்கும்.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும்! மாநிலச் செயலாளரின் 7ஆவது தொடர் "லக்கிம்பூர் விவசாயிகள் படுகொலை சம்பவத்தை கண்டித்து நாடே கொதித்து எழுகிறது. நமது பிரதமர் இதுவரை வாய் திறக்காமல் மௌனம் காப்பது ஏன்?" என்று உச்சிமண்டையில் அடித்தாற் போன்று கேள்வி எழுப்பியுள்ளது.

– **பிச்சமுத்து** புளியங்குடி

**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் முகமது ஷமி யோடு மக்கள் இருக்கிறார்கள். தலையங்கம் அருமை. "நூறு கோடி தடுப்பூசிக்குப் பின்னால்" நியூ ஏஜ் தலை யங்கள் உண்மையை தோலுரித்து காட்டுகிறது. பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்துகிறது. ஜூலை 21 சைலேந் திரபாபு வெளியிட்ட அறிக்கை குறித்த வி.தொ.பொதுச் செயலாளர் நா.பெரியசாமியின் விமர்சனம் பொருத்தமான ஒன்று.

– **கார்த்திகேயன்** வெள்ளக்கோவில்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பிரபஞ்சத்திற்கு அடிப்படை பொருள். மனிதன் உள்ளிட்ட அனைத்துமே பொருள்தான். கண்ணுக்குத் தெரியாத துகள்களிலிருந்து மிகப் பெரிய கிரகங்கள் வரை எல்லாமே கோள்கள் தான் என்ற அடிப்படையை ஏற்பவர்கள் பொருள் முதல்வாதிகள் என்பதை தெளிவாக விளக்கியுள்ளார் தோதாத்ரி.

– **மாசானம்** மதுரை

**ஆசிரியர் ஜனசக்தி,**

ராமே ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் திரைப்பட விமர்சனம் மூ.ரா.ஆதவன் புதிய அறிமுக எழுத்தாளர் என்றாலும் பொருத்தமாக, சரியாக எழுதியுள்ளார். வாரம் தோறும் விடாமல் ஒரு சிலர் கட்டுரை எழுதுகிறார்களா? அல்லது ஒரு சிலரின் கட்டுரை வாரம் தோறும் பிரசுரிக்கப்படுகிறதா? இரு தரப்பும் இதை உணர வேண்டும்.

– **பி.பரமேஸ்வரன்**, மயிலை

## இராஜபாளையத்தில்

# ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா இரா.முத்தரசன் பங்கேற்பு




விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பிஎம்ஆர்.முத்துமகாலில் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா நடைபெற்றது. நகர செயலாளர் வி.இரவி தலைமை வகித்தார். துணை செயலாளர் விஜயன் முன்னிலை வகித்தார். இதில் கலந்து கொண்டு மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது:

தமிழக மாநில செயலாளர்களிலேயே மிக நெருக்கடியான கால கட்டங்களில் பணியாற்றி கட்சியை ஸ்தாபன முறைப்படி நடத்தியவர் ப.மாணிக்கம். கறாராக, கண்டிப்பாக நடந்து கொண்டாலும் யாரையும் பலி வாங்கும் எண்ணம் இல்லாதவர். மாற்று கருத்து உள்ளவர்களையும் பேசி பேசி கட்சி முடிவை ஏற்றுக்கொள்ள வைப்பார். தலைவர் நல்லகண்ணு அவர்களே "ப.மாணிக்கம் அவர்கள் என்னை செதுக்கி, செதுக்கி உருவாக்கினார்" என அடிக்கடி கூறுவார். ப.மாணிக்கம் அவர்களின் நேர்மை, எளிமை, மார்க்சிய அறிவு, ஸ்தாபன கட்டுப்பாடு ஆகியவைகளை நாம் பின்பற்றுவதன் மூலம் கட்சியை வளர்க்க உறுதியேற்போம்.இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார்.

மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம் எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் , ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு கூட்டம் நடைபெற்றது. ப.மாணிக்கம் நூற்றாண்டு துவக்க விழாவை முன்னிட்டு ப.மாணிக்கம் அவர்களுக்கு 2 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் கலந்து கொண்டார்.

**ஆவடி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆவடி மாநகரத்தில் ளிசிதிகீஹி பொன்விழா மண்டபத்தில் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இணை செயலாளர்கள் ஹரி, கபாலி முன்னிலை வகித்தனர். செயலாளர் எஸ்.மயில்வாகனன் தலைமை வகித்தார். பாதுகாப்பு துறை(ஏஐடிஇஎப்)பொதுச்செயலாளர் ஸ்ரீகுமார் சிறப்புரை யாற்றினார். வி.மதிவாணன் நன்றி கூறினார். கார்கி அம்பிகாபதி, பி.கலையரசு, ராஜீவ்காந்தி, ரவிக்குமார், அசோகன், முத்தழகன் மற்றும் கட்டிட சங்க தோழர்கள் கலந்துகொண்டனர்.

**திருநெல்வேலி:** திருநெல்வேலி மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளர் காசி. விஸ்வநாதன் தலைமையில் ப.மாணிக்கம் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இளைஞர் பெருமன்ற தலைவர் பொறி யாளர் கே.முத்துக்கிருஷ்ணன் கொடியேற்றினார். இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.சுரேஷ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து தோழர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

**வடசென்னை:** 46ஆவது வட்ட கிளை செயலாளர் பி.கருணாகரன் தலைமையில் ப.மாணிக்கம் நூற்றாண்டு துவக்க விழா நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் எம்.வசந்தகுமார், பகுதி செயலாளர் ஏ.சுப்பிரமணி, பகுதி துணைச் செயலாளர் ஏ.அருள், பி.கிளை செயலாளர் எஸ்.நாகராஜன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறையில் ப.மாணிக்கம் நூற்றாண்டு பிறந்தநாள் விழா நடைபெற்றது. கும்பகோணம் போக்குவரத்து கழக மண்டல ஏ.ஐ.டி.யூ.சி செயலாளர் சுப்பிரமணியன் தலைமை வாகித்தார். சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய செயலாளர் தங்கராஜ் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், பெருமாள், சௌக்கத்அலி, நல்லுச்சாமி, போக்குவரத்து கழக கிளை செயலாளர் மாசிமலை கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ப.மாணிக்கம் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## மீனவர் தினத்தன்று

# அனைத்து மாவட்டங்களிலும் மீனவர் குறைதீர் நாள் கூட்டம்


### ஏஐடியூசி மீனவர் தொழிலாளர் சங்கம் கோரிக்கை

தமிழக மீனவர்கள் பல்வேறு இயற்கை சீற்றங்கள், இன்னல்கள், பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர். கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்/மீனவர் மகளிர் குறைகளையும் அரசு கேட்டறிய ஒருசில மாவட்டங்களை தவிர ஏனைய பல மாவட்டங்களில் மீனவர் குறைதீர் நாள் கூட்டம் நடத்தப்படுவதே இல்லை. மீனவர் குறைதீர்நாள் கூட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும் என பல ஆண்டு காலமாக தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கம் சார்பில் பல்வேறு வடிவங்களில் போராடியும் மீன்வர் குறைதீர் நாள் கூட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வரும் நவம்பர் மாதம் 21ந்தேதி உலக மீனவர் தினம் அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் மீனவர் குறைதீர் நாள் கூட்டம் நடத்திட தமிழக அரசு உறுதியான நடவடிக்கை எடுத்திட வேண்டும் என முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.சின்னதம்பி முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.

**அ**க்டோபர் 31 ம் நாள் அன்று சென்னை சிந்தாதாதிரிப்பேட்டை ஏஐடியுசி அலுவலகத்தில் ஏஐடியுசியின் 102 வது அமைப்பு தினமும், தொழிற்சங்கத் தலைவர் குருதாஸ் தாஸ்குப்தாவின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் நடைபெற்றது.

அதே நிகழ்ச்சியில், சமீபத்தில் மறைந்த, தமிழக அரசுப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற முதல் நிலை அலுவலரான ஜி.சுந்தரமூர்த்தி ஐஏஎஸ் அவர்களின் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.




# ஏஐடியுசி 102 வது அமைப்பு தினம்




**டி.எம்.மூர்த்தி:** "1982 ஆம் ஆண்டின் உடலுழைப்புத் தொழிலாளர் சட்டப்படி, தமிழ் நாட்டில் 27 ஆண்டுகளாக தொழி லாளர் நல வாரியங்கள் செயல் பட்டு வருகின்றன. இதுவரை 3000 கோடி ரூபாய்களுக்கு மேல் நல உதவித் திட்டங்கள் தொழிலாளர்களுக்கு வழங் கப்பட்டுள்ளன. கட்டுமானவாரியத் தில் 4000 கோடி ரூபாய் நிதி உள்ளது. ஒன்றிய அரசு இ ஷ்ரம் திட்டம் மூலம் அமைப்புச்சாரா தொழிலாளர்களை நேரடியாக பதிவு செய்யும் முறையை தொடங்கியுள்ளது. இது குறித்து மாநில அரசோடு விவாதிக்கப்படவில்லை. அப்படியானால் ஏற்கனவே தமிழ்நாட்டில் பல்வேறு அமைப்புச் சாரா வாரியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் நிலமை என்ன ஆவது ? இந்த இஷ்ரம் திட்டத்திற்கு எதிராக தமிழக அரசு நிலையெடுக்க வேண்டுமென தமிழக முதலமைச்சரைச் சந்தித்து மனு கொடுத் துள்ளோம் " என்று தனது தலை மையுரையில் குறிப்பிட்டார் தமிழ்நாடு ஏஐடியுசியின் பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி.

**கே.ரவி :** "தமிழகத்தில் கட்டுமான தொழி லாளர் நல வாரியம் போன்ற அமைப்புச்சாரா வாரியங்களின் உருவாக் கத்தில் முக்கியப் பங்காற்றியவர் தொழி லாளர் நல ஆணயராக இருந்த ஜி. சுந்தரமூர்த்தி. வாரியத்தின் செயல் பாட்டை செம்மைப்படுத்தவும், அதற் கான நிதியாதாரத்தை திரட்டும் வழி வகையிலும் செயலூக்கத்துடன் அவர் பணியாற்றினார்.

பிறகு ஐஏஎஸ் அதிகாரியாகவும் உயர்வு பெற்றார். சேலத்தில் நடந்த ஏஐ டியுசி கட்டட தொழிலாளர் சங்க மாநாட் டில் நடந்த கருத்தரங்கிலும் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். சமீபத்தில் ஒரு விபத்தில் மரணமடைந்தார்.

தொழிலாளர் நலனைப் பேணுவதில் அக்கறையோடு செயல்பட்டதால் இன்று அவரை ஏஐடியுசி நினைவு கூறுகிறது" என்று தனது உரையில் குறிப்பிட்டார் தமிழ்நாடு ஏஐடியுசியின் துணைப் பொதுச் செயலாளர் கே.இரவி.

தோழர் குருதாஸ் தாஸ் குப்தா அவர்களின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி, அகில இந்திய வங்கி ஊழி யர்கள் சங்கப் பொதுச்செயலாளர் சி. எச். வெங்கடாசலம் உரையாற்றுகையில்

"டெக்ஸ்டைல்ஸ் போன்ற பாரம்பரிய தொழில்கள் நம்மிடையே இல்லை. பழைய உறுப்பினர்கள் இல்லை. ஆனால் ஒப்பந்த தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்கள், உதிரி தொழிலாளர்கள் என பெருமளவில் நம்மைத் தேடி வருகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. இதோடு தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளுக்காகவும், மக்களின் பிரச்சினைகளுக்காகவும் நாம் போராட வேண்டும். இதுதான் நமக்கு குருதாஸ் தாஸ்குப்தா காட்டிய வழி " என்றார் .

ஏஐடியுசியின் நூற்றாண்டை கொண்டாடும் நாளில்தான் குருதாஸ் தாஸ்குப்தா மறைந்தார். மும்பை பந்தை வெற்றிகரமாக மாற்றும் வகையில் சிவசேனை அலுவலகத்திற்கு சென்றும் ஆதரவு திரட்டினார். பிஎம்எஸ் சங்கம் உள்ளிட்ட மத்திய தொழிற்சங்கங்களை ஒன்றுபட்ட போராட்டத்திற்கும் குருதாஸ் தாஸ்குப்தா வழிவகை செய்தார். ரயில்வே, விமானநிலையம் போன்ற பொதுச் சொத்துகளை மோடி அரசு விற்று வருகிறது. இதனை முழுமூச்சாக எதிர்க்க வேண்டிய பொறுப்பு தொழிலாளி வர்க்கத்திற்கு உண்டு" என்று அகில இந்திய பாதுகாப்பு தொழிலாளர் சம்மேள னப் பொதுச்செயலாளர் ஸ்ரீ.குமார் பேசினார். ஏஐடியுசி மாநில செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**பரமக்குடி:** எமனேஸ்வரத்தில் நான்கு மையங்களிலும், பரமக்குடியில் இரண்டு மையங்களிலும் ஏஐடியூசி கொடியேற்றப்பட்டன. ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் என். கே.ராஜன், சிபிஐ நகர் செயலாளர் என்.எஸ். பெருமாள்,ஏஐடியூசி கைத்தறி சம்மேளன மாநில பொதுச் செயலாளர் எஸ்.பி.ராதா, கே.கே.கோவிந்தன் ஏஐடியுசி போக்குவரத்து தொழிற்சங்கத்தின் பொறுப்பாளர் சி.செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகரில் குருதாஸ் தாஸ்குப்தா அவர்களின் திருவுருவப் படத்திற்கு சிபிஐ திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் திராவிட மணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழக மலைக்கோட்டை பேருந்து பணி மனையில் திருச்சி மாவட்ட தலைவர் நேரு, துரை தலைமையில் ஏஐடியுசி அமைப்பு தின கொடியினை மாவட்ட பொதுச்செயலாளர் க.சுரேஷ் ஏற்றி வைத்தார். தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் மதுரை ரோடு குப்பாங்குளம்கிளையில் கதிர்வடிவேல் தலைமையில், செல்வகுமார் ஏஐடியுசி கொடியேற்றினார். மணிகண்டம் ஒன்றியம் சோமரசம்பேட்டையில் மரு தாம்பாள் தலைமையில் முருகன் ஏஐடியுசி கொடியேற்றினார்.

திருவரம்பூர் பாரத மிகுமின் தொழிற் சங்க ஏஐடியுசி அலுவலகத்தில் சங்கர் கணேஷ் தலைமையில், லோகநாதன் கொடியேற்றினார். கிழக்கு சட்டமன்ற தொகுதியில் சிவா தலைமையில் அன் சர்தீன் கொடியேற்றினார். திருச்சி சமயபுரம் சுங்கச்சாவடியில் ராஜமாணிக் கம் ஏஐடியுசி கொடியேற்றினார்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை விராலி மலை சாலையில் உள்ள அமைப்புச்சார சங்க அலுவலகம் அருகில் ஏஐடியுசி கொடி ஏற்று விழா நடைபெற்றது. பொதுச் செயலாளர் நல்லுச்சாமி தலைமை வகித்தார். சௌக்கத்அலி, ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். அமைப்புசாரா சங்க ஏஐடியுசி கொடியை அரசுபோக்குவரத்து பொதுச் செயலாளர் சுப்பிரமணியன் ஏற்றிவைத்தார், ஜனசக்தி உசேன் சிறப்புரையாற்றினார்.

வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம், பம்ப் ஆப்ரேட்டர் சங்க பொறுப்பாளர்கள் நாகராஜ், அருள் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவ கிரியில் நகரம் முழுவதும் பேரணியாக சென்று ஏஐடியூசி கொடியேற்றப்பட்டது. பின்னர் தென்மலை கிராமத்தில் புதிய ஆட்டோ ஓட்டுனர்கள் சங்கம் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர் ஜி.வேல்முருகன், சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.சிங்காரவேலு உள்ளிட்ட ஏராளமா னோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டக்குழு சார்பில் பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு கொடியேற்றி கொண்டாடப்பட்டது. ஏஐடி யூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். முனிசிபல் பொது பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி சங்க கொடியை ஏற்றி வைத்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.தேவராசன், ஏஐடியுசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, கட்டுமான தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.சுதர்சனன், கந்தசாமி, மனோகரன் ஜெ.பிரதாபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.பின்னர் குருதாஸ்தாஸ்குப்தாவின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

**நெல்லை:** திருநெல்வேலி பாலன் இல்லத்தில் சிறப்பாக கொண்டாடப் பட்டது. ஏஐடியுசி கொடியினை மாவட்ட பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன் ஏற்றி வைத்தார். ஏஐடி யுசி மாநில செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமை தாங்கினார். பீடி தொழிலாளர் சங்கத் தலைவர் கே.எஸ்.பாலு, தச்சை மண்டல சிபிஐ பொறுப்பாளர் பி.பரமசிவம், கிருஷ்ணன், கே.முத்துகிருஷ்ணன், அலுவலகச் செயலாளர் முத்துக் கிருஷ்ணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** ஏஐடியூசி அமைப்பு தினம், குருதாஸ்தாஸ்குப்தா நினைவுநாள் நிகழ்ச்சி சேலம் மாவட்ட கட்சி அலு வலகத்தில் நடைபெற்றது. ஏஐடி யூசி மாவட்ட பொது செயலாளர் எம்.முனுசாமி தலைமை வகித்தார். சிபிஐ மாவட்டசெயலாளர் ஏ.மோகன் மாலை அணிவித்தார். மாநில குழு உறுப்பினர் பி.பரமசிவன், சிபிஐ மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ், ஏஐடியுசி மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் மாண்டல செயலாளர், ஆர்.எல்.செல்வராஜ் உட் பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம் – செங்கல்பட்டு:** காஞ் சிபுரம் – செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏஐடியுசி அமைப்பு தினம் மற்றும் குரு தாஸ் தாஸ்குப்தா இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நடை பெற்றது. கண்டோன்மென்ட போர்டு தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பரங்கிமலை அலுவலகம் முன்பு சங்க பொதுசெயலாளர் பி.பாலகிருஷ்ணன் தலைமையில் மாநில துணை பொது செயலாளர் கே. இரவி ஏஐடியுசி கொடி யேற்றி வைத்தும், குருதாஸ் தாஸ் குப்தா நினைவுகளை போற்றி சிறப்பு ரையாற்றினார்.மறைமலைநகர் பகுதியில் மாவட்ட பொதுசெயலாளர் பல்வேறு தொழிற்சங்கங்கள் சார்பில் நடைபெற்ற அமைப்பு தின விழாவில் பங்கேற்று பேசினார். மறைமலைநகர் விர்கோ ஆலை வாயில் முன்பு சங்க செயலாளர் வி.குமரவேல் தலைமையிலும், ஊரி ஆலை வாயில் முன்பு சங்க செயலாளர் எம்.ராமு தலைமையிலும், ஐபெக்ஸ் எல்.எம் ஆலைகள் வாயில் முன்பு சங்க செயலாளர் எம். காண்டீபன் தலை மையிலும் அமைப்பு தினவிழா கொடி யேற்றி, குருதாஸ் தாஸ்குப்தாவின் தியா கங்களை போற்றி நினைவு கூரப்பட்டது.

முகவை பூபேஷ்

# மாநிலங்களில்...



## நடிகர் அக்ஷய்குமாருக்கு விவசாயிகள் எதிர்ப்பு

### பஞ்சாப்

பிரபல வடஇந்திய நடிகர் அக்ஷய் குமார் அண்மையில் நடித்த ‘‘சூர்ய வன்சி’’ என்ற திரைப்படத்தை பஞ் சாபில் திரையிட, அந்த மாநில விவசா யிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, திரையரங்குகளில் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். இந்திய விவசா யிகளின் வாழ்வாதாரத்தையே பாதிக் கும் வகையில் மோடி தலைமையி லான ஒன்றிய அரசு கொண்டு வந்த 3 வேளாண் சட்டங்களுக்கு தனது எதிர்ப்பை தெரிவிக்காமல் இருக்கும் நடிகர் அக்ஷய்குமார் போக்கை வன் மையாகக் கண்டிப்பதாகவும், அவ ரின் திரைப்படங்களை தாங்கள் புறக் கணிப்பதாகவும் பஞ்சாபில் திரையிட நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று பஞ்சாப் மாநில விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அக்ஷய்குமாரருக்குக் கண்டனம் தெரிவித்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் மாவீரன் தியாகி உத்தம் சிங் நினைவுப்பூங்காவிலிருந்து திரை யிடப்படும் அரங்கம் வரை பேரணியாக திரண்டுவந்தனர். வேளாண் சட் டங்கள் ரத்துசெய்யப்பட்டு விவசா யிகளின் உற்பத்திப்பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்யும் புதிய சட்டம் கொண்டு வரப்படும் வரையில் போராட்டங்கள் தொடரும்என்றும் அதுவரையில்நடிகர் அக்ஷய்குமார திரைப்படங்களைத் திரை யிட அனுமதிக்க மாட்டோம் என்று விவசாயிகள் சூளுரைத்தனர். நடிகர் அக்ஷய்குமார், பிரதமர் மோடிக்கு நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திரிபுரா

பத்திரிக்கையாளர்கள்- சமுக நல ஆர்வலர்களை

## உபா வில் கைது செய்வதா ?

**எதிர்க்கட்சிகள்- பத்திரிக்கையாளர் கூட்டமைப்பு கடும் கண்டனம்**

பாஜக ஆளும் திரிபுரா மாநிலங்கள் கடந்த இரு வாரங்களாக கடும் வன்முறைச்சம்பவங்கள் பாசிசசக்திகளால் திட்டமிட்.டுநடந்தேறிவருகின்றன. உண்மையைக் கண்டறியச் சென்ற வழக்குரைஞர்கள்,பத்திரிக்கையாளர்கள் சமூக ஆர்வலர்கள் என 102 பேர்களை ஒன்றிய அரசின் உபா (ஹிறிகிறி) என்ற கொடுஞ் சட்டத்தின்கீழ் கைது செய்துள்ளது திரிபுராவின் பாஜக அரசு.

உபா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் நிகழ்வில் 180 நாட்கள் வரை விசாரணை என்ற பேரில சிறைக்குள்ளே இருக்க வேண்டிய கொடுமையான சரத்து உள்ளது. மேலும் வழமையான நடைமுறைபோல் அவ்வளவு எளிதாக கைதானவர் ஜாமீனில் வெளிவர இயலாது.

சயாம் மீரா சிங் என்ற பத்திரிக்கையாளரை இந்த உபா சட்டத்தின்கீழ் கைது செய்துள்ளது. அவர்செய்த குற்றம் என்ன தெரியுமா ’’திரிபுரா பற்றி எரிகிறது‘‘ என்ற ஒரு பதிவு டுவிட்டரில் போட்டமைக்காக.

திரிபுராவில் நடந்தேறி வரும் வன்முறை சம்பவங்களிலிருந்தும், மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளிலிருந்தும்திசை திருப்பும் முயற்சியாக திரிபுரா அரசு இத்தகைய கொடிய அடக்குமுறைச் சட்டங்களை பத்திரிக்கையாளர்கள்மீதும்இதர சமூக ஆர்வலர்கள் மீதும் ஏவி விட்டுள்ளது.

### சண்டீகார்

கண்ணைத் தோண்டுவேன்... கையை வெட்டுவேன்.

## பாஜக எம்பி யின் வன்முறை மிரட்டல்

உத்தரகாண்ட் மாநிலம் கேதார்நாத்தில் ஆதிசங்கர் சிலை திறப்பு நேரடி ஒளிபரப்பை காண்பதாகச் சொல்லி அரியானா மாநிலம் ரோடக் மாவட்டத்தில் உள்ள கோவிலுக்கு சென்றுள்ளனர் மோடி கட்சியின் முன்னாள் அமைச்சர் மணீஷ்குரோவரும் அவரது கைத்தடிக் கும்பலும். ஒன்றிய அரசின் 3 வேளாண்மை சட்டங்களை ரத்து செய்யப்படும் வரை சமூக நிகழ்ச்சிகளை புறக்கணிப்பு செய்துள்ள விவசாயிகள் சங்கத்தினர், இந்த மோடி கட்சியினரது கொண்டாட்டத்தைக் கண்டித்து, மோடிகட்சி யினர் குழுமியிருந்த கோவிலைச்சுற்றி நூற்றுக்கணக்கான விவசாயிகள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

இதனால் 7 மணி நேரம் வெளியே வரமுடியாத நிலையில், மோடி கட்சி உள்ளூர் தலைவர் மணீஷ்குரோவர் மன்னிப்பு கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களை வெளியே வர விவசாயிகள் அனுமதித்தனர்.

இந்த சம்பவத்தில் கடுப்பாகிப் போன அந்தப் பகுதி மோடி கட்சி எம்பி அரவிந்த்சர்மா என்பவன்,‘‘நான்இந்த தொகுதியில்வெற்றி பெற்றதற்கு மணீஷ் குரோவர் தான் காரணம். அவரை எதிர்த்து யாராவது கண்ணை உயர்த்தினால் அந்தக்கண்களைத் தோண்டி விடுவேன். கையை உயர்த் தினால் கைகளை வெட்டி விடுவேன்’’ என கூச்சலிட்டுள்ளான். வன்முறை யைத் தூண்டும் இந்த எம்பி மீது மோடி கட்சியின் மாநில அரசு எந்த நடவ டிக்கையும் எடுக்கவில்லை. மாற்றுக்கட்சியினர் என்றால்இந்த நேரம் உபா உள்பட அனைத்துச் சட்டங்களும் பாய்ந்திருக்கும்.

### காஷ்மீர் - ஸ்ரீநகர்

உள்ளூர் திருமண

சமுதாயக் கூடங்களை

## திடீரென ஆக்ரமித்த மத்திய ரிசர்வ் போலீஸ்


ஸ்ரீநகர் நகர மக்கள் தங்கள் குடும்பத் திருமணம், குழந்தை களின் சிறப்பு விழாக்கள் மற்றும் உள்ளூர் பண்டிகைகளைக் கொண்டாடும் இடங்களாக சமுத ாய நலக் கூடங்கள் உள்ளன.

இவ்விடங்களை நிர்வகித்து வரும் ஸ்ரீநகர் நகராட்சி நிர்வா கத்துடன் கலந்து ஆலோசிக் காமலும் அனுமதி பெறாமலும் அந்தந்த சமுதாயக் கூடங்களை சிபிஆர்எப் எனப்படும் ஒன்றிய அரசின் மத்திய ரிசர்வ் காவல் படையினர் திடீரென ஆக்ரமித் துள்ளனர்.

இதனால் எங்களது குடும்பத் திருமண நிகழ்வுகளை சமுதாயக் கூடங்களில் நடத்த இயல வில்லை என்றும் இதற்கு மாற்று இடங்களைத் தராமல் திடீரென மத்திய ரிசர்வ் படையினர் எங் களது சுதந்திரங்களில் அடிப்படை உரிமைகளில் தலையீடு செய் வதாகும். உள்துறை அமைச் சர் அமித்ஷா காஷ்மீர் வரு கைக்குப்பின் இந்த மக்களின் உரிமைகளைப் பறிக்கும் நடவ டிக்கைகள் தொடருகின்றன என உள்ளூர்மக்கள் தங்களது எதிர்ப்பை காட்டிவருவது குறிப் பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் இந்த மக்கள் விரோத நடவடிக்கை களை காஷ்மீரில் இயங்கும் எதிர்க் கட்சிகள் தேசிய மாநாட்டு கட்சி, பிடிபி கட்சி, இடதுசாரிகட்சிகள், கண்டித்துள்ளன.

### ராஜஸ்தான்



## ஒன்றிய அரசை காட்டமாகத் தாக்கும் பாஜக ஆளுநர்

மேகலாயா ஆளுநராக இருப்பவர் சத்யபால் மாலிக். இதற்கு முன்னர் ஜம்மு–காஷ்மீர் ஆளுநராக இருந்தவர். இவர் அண்மைக் காலமாக குறிப்பாக டெல்லியில் விவசா யிகள் மாதக் கணக்கில் நடத்தி வரும் போராட்டங்களுக்கு தீர்வு காணமால் இருக்கும் ஒன்றிய மோடி அரசை காட் டமாக விமர்சித்து வருகிறார்.

கடந்த நவம்பர் 7ந் தேதி ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் நடந்த ‘‘உலக ஜாட் (இனத்த வர்களின்) மாநாட்டில் மேகலாயா ஆளுநர் சத்யபால் மாலிக் பங்கேற்ற பேசியதாவது:

‘‘600 க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களது இன்னு யிர் ஈர்த்த தற்போதைய டெல்லியில் அனைத்து சங்க விவசாயிகளால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் நம் நாடு முன் எப்போதும் காணாதது. ஒரு நாய் இறந்தால் கூட உடனே இரங்கற் அறிக்கை விடும் டெல்லியில் உள்ள தலைவர்கள். 600 விவசாயிகள் தங்கள் இன்னுயிர் தந்து தியாகம் செய்துள்ள சம்பவத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப்பேசாமல் மௌனம் சாதிக்கின்றனர். கார்ப்ப ரேட்டுகளுக்கு ஆதரவான அந்த 3 வேளாண்மைச் சட்டங்களை ரத்து செய்து, நியாயமான குறைந்தபட்ட கொள் முதல் ஆதார விலைச் சட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டும்.

கார்கில் போர் நடந்தபோது ராணுவ முனையில் எல்லையைப் பாதுகாப்பதற்காக யார் அனுப்பப்பட்டார்கள். இன்று டெல்லியில் போராடும் விவசாயிகளின் பிள்ளைகள் தானே?

பதவியில் இருக் கும் காரணத்தினாலே அகந்தையாக நடந்து கொள்ளக் கூடாது’’ இவ்வாறு பதவியில் உள்ள ஒரு ஆளுநர் அதுவும் மோடி கட்சியைச் சேர்ந்தவர் பேசி யிருப்பது அரசியல் வட்டாரத்தில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

# தமிழகம் முழுவதும் நவம்பர் 7 புரட்சி தின கொடியேற்று விழா





ரஷ்யாவில் 1917 நவம்பர் 7 ல் தொழிலாளர்கள், விவசாயிகள் தலைமையில் புரட்சி நடத்தப்பட்டு சோசலிச சமுதாயத்திற்கான ஆட்சி அமைக்கப்பட்டது. உலகத்தில் முதன் முதலாக முதலாளித்துவ அதிகாரத்திற்கு மாற்றாக சோசலிச ஆட்சி அமைக்கப்பட்டது. இதனை கொண்டாடும் விதமாக தமிழகம் முழுவதும் நவம்பர் 7 அன்று புரட்சி கொடியேற்று விழா நடத்தப்பட்டன.

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமையா தலைமையில் செம்படை அணிவகுப்பு நடத்தி செங்கொடி ஏற்றப்பட்டது. இதில் மாவட்ட, நகர நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தேன்கனிக் கோட்டை, சூளகிரி மற்றும் பல இடங்களில் புரட்சி தினத்தை முன் னிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களில் செங்கொடி ஏற்றப்பட்டன.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு மேலபாளை யத்தில் பெரியசாமி தலைமையில் சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ கொடியை ஏற்றி வத்தார். வட்ட செயலாளர் கோவிந்தன், துணை செயலாளர் மகாலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர். சேத்தூரில் நகர செயலாளர் எஸ்.ராஜா தலைமையில், மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி கொடியை ஏற்றினார். ஒன்றிய துணை செயலாளர் கணேசமூர்த்தி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங், விதொச வரதராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சாத்தூரில் வட்ட செயலாளர் சாமிநாதன் தலைமையில், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் கொடியை ஏற்றி வைத்தார், நகர செயலாளர் எஸ்.எஸ்.முத்து, தவிச சண்முகையா உள்பட பலர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் விஜயன் தலைமையில் நகர செயலாளர் வி.இரவி கொடியை ஏற்றி வைத்தார்.

இராஜபாளையம் கிழக்கு ஒன்றியத்தில் சத்திரப்பட்டி, இராமலிங்க புரம், சங்கரபாண்டியபுரம், மொட்டமலை ஆகிய ஊர்களில் நடைபெற்ற கொடிஏற்று நிகழ்வில் ஒன்றிய செயலாளர் முத்துமாரி, ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் நடராஜன், துணை செயலாளர் இராமச்சந்திரன், மாரிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோவை:** கோவை ஜீவா இல்லத்தில் கொடி ஏற்றி வைத்து லெனின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் தலைமை தாங்கினார். ஆர்.ஏ. கோவிந் தராஜன் நவம்பர் புரட்சியை விளக்கி பேசினார். மாவட்ட பொருளாளர் யூ.கே. சுப்பரமணியன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.தங்கவேல், ஏ.அஸ்ரப்அலி, என்.கணேசன், ஏ.பி.மணிபாரதி, பா.விஜயகுமார், என்.ஜீவானந்தன், சி.ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை:** தஞ்சை ரயிலடியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நவம்பர் புரட்சி தின விழா நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கோ.நீலமேகம் துவக்கி வைத்து சிறப்பு ரையாற்றினார். மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளி யப்பன் நிறைவுரையாற்றினார். சிபிஐ மாவட்ட பொருளாளர் என்.பால சுப்ரமணியன், ஏஐடியூசி தொழிற்சங்க நிர்வாகிகள் சி.சந்திரகுமார், ஆர்.தில்லைவனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். துரை.மதிவாணன் நன்றி கூறினார்.


**தேனி :** ஆண்டிபட்டி ஒன்றிய குழு சார்பில் ஆண்டிப்பட்டி நகரில் கொடி ஏற்று விழா நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பா.பிச்சை மணி தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் ஆகியோர் கொடியேற்றினர்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல் மாநகரம் சார்பாக ராஜாங்கம் தலைமையில் கொடியேற்றப்பட்டது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே.ஜெயமணி, சாலையோர வியாபாரிகள் மாவட்ட செயலாளர் வி.பாலகணேசன், மாநகரக்குழு உறுப்பினர் எம்.சுப்பையா, தொத்தன், சுப்பிரமணி, ஆரோக்யதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். வடமதுரை ஒன்றியத்தில் ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பையா தலைமையில் ஊராளிப்பட்டியில் கொடியேற்றப்பட்டது. மாவட்டக்குழு உறுப்பினர் எம்.கே.ராசு, ஒன்றிய குழு உறுப்பினர் செல்வராஜு கலந்து கொண்டனர். மூக்கரைப்பிள்ளையார் கோவில் அருகே எம்.என்.சாமிநாதன் தலைமையில் கொடியேற்றப்பட்டது.

**திருச்சி மாநகர்:** சோமரசம்பேட்டையில் இந்தியக் கம்யூனிஸ்ட கட்சியின் முன்னாள் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் கொடியினை ஏற்றினார்.

திருச்சி மாநகர் உறையூரில் 58வது வார்டில் மேற்குப் பகுதி பொருளாளர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் க.சுரேஷ் கொடி ஏற்றி உரையாற்றினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா, மாவட்ட குழு உறுப்பினர்கள் இபுராஹிம், ஆயிஷா, பகுதி குழு உறுப்பினர்கள் முருகன், ஆனந்தன், சரண்சிங், ராமமூர்த்தி, நாகராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சென்னை வியாசர்பாடி 46ஆவது வட்ட அலுவலகத்தில் நவம்பர் புரட்சி தினம் கொண்டாடப்பட்டது.



# குடும்ப தியாகமும் – கும்பல் துரோகமும்

06.02.1931ல் ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு மறைந்தார். நேருவோ வெஞ்சிறைக்குள் வீழ்ந்து கிடந்தார். மோதிலால் நேரு தலைமை ஏற்று நடத்த வேண்டிய போராட்டத்தை அவர் மனைவியும், நேருவின் தாயாருமான சொரூபாராணி 06.04.1931ல் அலகாபத்தில் தொடங்கினார். அப்பொழுது நடந்த நிகழ்வுகளை நேரு தன்னுடைய சுயசரிதையில் எழுதுகிறார்.

‘அலகாபாத் காங்கிரஸ்காரர்கள் 6ம் தேதி அன்று தடையை மீறி ஊர்வலம் நடத்தினர். சிறைக்குச் செல்வது என்ற முடிவுடன் திரு.மோதிலால் நேருவின் மனைவி திருமதி சொரூபாராணி இந்த ஊர்வலத்திற்குத் தலைமை வகித்துச் சென்றார்.

அலகாபாத்தில் என் தாயார் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். அந்த ஊர்வலத்தைப் போலீசார் தடுத்தனர். பின்னர் கூட்டத்தவரைத் தடியாலடித்தனர். ஊர்வலம் தடுக்கப்பட்டதும் யாரோ ஒருவர் நாற்காலி ஒன்றைக் கொண்டு வந்து போட்டார். அணிவகுப்பின் முன்னால் அந்த நாற்காலியில் என் தாயார் உட்கார்ந்து கொண்டார். அவருக்குத் துணையாக இருந்த சிலர் என் செயலாளர் உட்பட கைது செய்யப்பட்டு அகற்றப்பட்டனர். பிறகுதான் தடியடி தொடங்கியது.

என்னுடைய தாயாரை நாங்காலியிருந்து கீழே தள்ளி தலையில் தடியால் பலமுறை அடித்தனர். மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டு வந்தது. அவர் மூர்ச்சித்துத் தெருவில் வீழ்ந்துவிட்டார். அதற்குள் அணிவகுப்பும் கலைக்கப்பட்டது. தெருவில் நடமாட்டமே இல்லை. கொஞ்ச நேரம் கழித்துப் போலீஸ் அதிகாரி ஒருவர் என் தாயாரைத் தூக்கித் தம் காரில் போட்டு ஆனந்த பவனத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார். அன்றிரவு என் தாயார் இறந்து போனதாகப் பொய் வதந்தி ஊரில் பரவியது. ஆத்திரத்தால் அமைதியிழந்த மக்கள் ஒன்று திரண்டு சாத்விகத்தை மறந்து போலீசைத் தாக்கினார்கள். போலீசார் துப்பாக்கியினால் சுட்டார்கள். சிலர் இறந்தனர்.

இது நடந்த நில நாட்களுக்குப் பின்னர்தான் ஒரு வார இதழ் மூலம் எனக்கு செய்தி எட்டியது. அப்போது என் மனக்கண் முன் வயது முதிர்ந்த மெல்லிய என் தயார் தூசு படிந்த தெருவில் இரத்தம் வழியக் கிடந்த காட்சி தோன்றியது. என்மனம் பதை பதைத்தது. நான் அங்கு இருந்திருந்தால் எவ்வாறு நடத்திருப்பேன் என்று எண்ணிப்பார்த்தேன்.

சாத்விகம் என்னை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்திருக்கும்? சிறிதுகூட கட்டுப்படுத்தியிருக்க முடியாது. கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாகப் பயில முயன்று வந்த பாடத்தை அக்காட்சி மறக்கச் செய்திருக்கும். அதனால் எனக்கோ, நாட்டிற்கோ நேரக்கூடிய தீங்கைப் பற்றிய எண்ணமே தோன்றியிருக்காது.

*(நேருவின் சுயசரிதை பக்கம்.487–88)*

இதைப் படித்துவிட்டு விடுதலைப் போரில் தமிழகம் என்ற புகழ்பெற்ற 3ம் பாகம் கொண்ட புத்தகத்தில் ம.பொ.சி பின்வருமாறு கூறுகிறார்.

‘இறைவா ! அந்தத் தியாகிகளையெல்லாம் மறவாமல் நினைவில் வைத்துப் போற்றும் நன்றியுணர்வை எனது நாட்டு மக்களுக்குத் தருவாயாக !”

*(2ம் பாகம் பக்கம் 811)*

ஆனால், சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு அறியாத நரேந்திர மோடியோ அயோத்தியில் ராமன் கோவில் கட்ட வேண்டுகிறார். மக்களுக்கு எதிராக கார்ப்பரேட் நலன்களுக்காக செயல்படுகிறார்.

‘அட ராமா ! அந்த தியாகிகளையெல்லாம் மறவாமல் நினைவில் வைத்து தூற்றும் உணர்வை எனது ஆர்.எஸ்.எஸ் கும்பலுக்கு தருவாயாக. விடுதலைப்போரில் பங்கு பெறாது காட்டிக்கொடுத்து, மன்னிப்பு கேட்டது ஆர்.எஸ்.எஸ் கும்பல். மதச்சார்பற்ற சக்திகள் இந்த மண்ணில் இருக்கும் வரை போராடுவோம்.

**வீ.தர்மதாஸ்,** திருவாரூர்

# வனப்பாதுகாப்பு சட்டத் திருத்தத்தை கைவிடுக!

## தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

வனப்பாதுகாப்பு சட்டத் திருத்தத்தை கைவிடக் கோரி தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் ஈரோடு மாவட்டத்தில் 11 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜீரஹள்ளி வனச்சரக அலுவலகம் முன்பு எம்.மோகன், தாளவாடி வனச்சரக அலுவலகம் முன்பு சாந்தப்பா, தலமலை வனச்சரக அலுவலகம் முன்பு டி.சண்முகம், ஆசனூர் வனச்சரக அலுவலகம் முன்பு ஆர்.அருள்சாமி, கேர்மேளம் வனச்சரக அலுவலகம் முன்பு எஸ்.எம். ஜடையப்பன், கடம்பூர் வனச்சரக அலுவலகம் முன்பு, கே.ராமசாமி, பவானிசாகர் வனச்சரக அலுவலகம் முன்பு பி.ஏ.வேலுமணி, சத்தியமங்கலம் வனச்சரக அலுவலகம் முன்பு ஜே.லட்சுமி, டி.என்.பாளையம் வனச்சரக அலுவலகம் முன்பு ஜி.மோகன்ராஜ், தாமரைக்கரை வனச்சரக அலுவலகம் முன்பு ஈரண்ணன், அந்தியூர் வனச்சரக அலுவலகம் முன்பு அப்புச்சாமி ஆகியோர் தலைமையில் 11 வனச்சரக அலுவலகங்கள் முன்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சக்க தலைவர் வி.பி.குணசேகரன், மாவட்ட தலைவர் பி.வி.பாலதண்டாயுதம், மாவட்ட செயலாளர் ஜீவபாரதி, மாவட்ட செயலாளர் சு.மோகன் குமார், வழக்கறிஞர்கள் ஜெயராஜ், கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்




# வெற்றி அடையும் வரை போராடுவோம்!

## சூடான் கம்யூனிஸ்ட் கட்சி வீரமுழக்கம்

**சூடானில் ராணுவம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு, மக்கள் தொடர்ந்து அதற்கு எதிராகப் போராடி வருகிறார்கள்.**

ராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட தொடங்கியதில் இருந்து தற்போது வரை சூடான் பாதுகாப்பு படையினரால் குறைந்தது ஏழு நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், 140க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளார்கள்.


தலைநகர் கர்த்தூம் மற்றும் உன்துர்மன் நகரில் ராணுவ ஆட்சிக்கு எதிரான கண்டனப் பேரணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2019ஆம் ஆண்டு அதிபர் ஓமர் அல் பஷிர் ஆட்சிக்கு முடிவு கட்டிய வெகுமக்கள் இயக்கத்தில் சூடான் கம்யூனிஸ்ட் கட்சி மகத்தான பங்காற்றியது. தற்போது சூடானில் நடைபெற்றுவரும் ராணுவத்திற்கு எதிரான போராட்டத்தை ‘மக்கள் புரட்சி’ என்றும், ராணுவ ஆட்சியை சூடான் மக்கள் முற்றாகப் புறக்கணிக்கிறார்கள் என்றும், சூடான் கம்யூனிஸ்ட் கட்சி அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது; பிரதமர் அப்தல்லா ஹம்துக் உள்பட இழுத்துச் செல்லப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. அவசரகால நெருக்கடிநிலையை எதிர்க்கும் வகையில் மக்கள் தொடர்ந்து வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள சூடான் கம்யூனிஸ்ட் கட்சி, வெற்றி அடையும் வரை போராடுவோம் என்று பிரகடனம் செய்துள்ளது. சர்வதேச சமுதாயம் சூடான் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்றும் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சூடான் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற பிரதமர் ஹம்துக், “அமைதி வழி நின்று போராடுங்கள்” என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். ராணுவ ஆட்சி வீழ்த்தப்படும் வரை சட்ட மறுப்பு இயக்கம் உள்ளிட்ட அரசியல் போராட்டங்கள் நடத்தப்படும் என்று கட்சி அறிவித்துள்ளது. பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கான சூடான் நாட்டுத் தூதுவர்கள் சூடான் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் ஆதரவைக் கோரும் பாலஸ்தீனம்




அனைத்து தரப்பினருடனும் நல்லிணக்கத்தை பராமரித்து வருவதால் மேற்கு ஆசியா பிரச்சனையில் ஒரு மகத்தான பங்களிப்பை, ஓர் அரசியல் ஸ்திரத் தன்மையை இந்தியா உருவாக்க முடியும் என்று சுற்றுச்சூழல் மாநாட்டில் (COP 26) பங்கேற்ற பாலஸ் தீன பிரதமர் முஹம்மது இப்ராஹிம் நம் பிக்கை தெரிவித்துள்ளார். இந்திய பிரத மரை சந்தித்த அவர், இந்தியாவின் வெளி யுறவுக் கொள்கை பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை யும், ஜெருசலத்தைத் தலைநகரமாகக் கொண்ட சுதந்திர பாலஸ்தீனத்தையும் ஆதரித்தது மேலும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற் காலிக உறுப்பினராக இருக்கும் இந்தியாவுடன் அனைத்துவித ஒத்துழைப்புக்கும் தயார் என்று பாலஸ்தீன பிரதமர் அறிவித்துள் ளார். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாத, சுதந்திரமான மற்றும் நியாய மான வெளியுறவுக் கொள்கை மட்டுமே சர் வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயர்த்த கூடியதாகும்.




# ஏழை நாடுகளின் மருத்துவ சேவைகளுக்கு எதிரான உலக வர்த்தக அமைப்பின் அறிவுசார் சொத்துரிமை

**உலக வர்த்தக அமைப்பின் 12வது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு (MC 12) நவம்பர் 30 முதல் டிசம்பர் 3 வரை சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில் நடைபெற இருக்கிறது.**

மின்னணு வர்த்தகம் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவது மற்றும் மீன் வள மானியம் தொடர்பான உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகள் இம்மாநாட்டில் உருவாக்கப்பட்டு ஏற்கப்பட உள்ளன.

உலக வர்த்தக அமைப்பின் அறிவுசார் சொத்துரிமையின் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் TRIPS(ட்ரிப்ஸ்) விதிக்கும் கட்டுப்பாடுகள் இன்றி கோவிட் 19 மருத்துவ சிகிச்சைக்கு தேவையான மருந்துகள், தடுப்பு ஊசிகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பங்கள் அனைத்து நாடுகளுக்கும் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்த கோரிக்கைக்கான உலக வர்த்தக அமைப்பின் பதிலை அனைத்து நாடுகளும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளன.

அனைவருக்கும் தடுப்பூசி என்ற நிலையை உறுதிப்படுத்துவதற்கு பெரும் முட்டுக்கட்டைகளாக அறிவுசார் சொத்துரிமையின் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தத்தின் ஷரத்துகள் உள்ளன. அறிவுசார் சொத்துரிமை ஏற்பாட்டின் மூலமாக மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மருந்து பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில் நுட் பங்கள் மீது ஏகபோக உரிமைகளைப் பெற்று விடுகின்றன. இந்த உரிமைகளைப் பயன்படுத்தி மருந்து உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு கிடைத்து விடாமல் தடுக்கப்படுகிறது. இதன் விளைவாக கோவிட் 19 உள்ளிட்ட பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கான தடுப்பூசி தயாரிப்பு பணிகள் அனைத்தும் முடக்கப்படுகின்றன. இத்தகைய சூழலில் ஏழை நாடுகள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றன. அண்மையில் கிடைத்த புள்ளிவிவரங்களின்படி ஏழை நாடுகளில் வெறும் 4.1% மக்களுக்கு மட்டுமே முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

இந்த பிரச்சனைக்கு தீர்வு காண, இந்தியாவும் தென் ஆப்பிரிக்காவும் இணைந்து கடந்த அக்டோபர் மாதம் உலக வர்த்தக அமைப்பில் ஒரு முன்மொழிவை (proposal) சமர்ப்பித்துள்ளன. கோவிட் 19 மருத்துவ சிகிச்சை தொடர்பான மருத்துவ சாதனங்கள், மருந்துப் பொருள்கள், தடுப்பூசிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு தேவையான வழிமுறைகள், தொழில்நுட்பங்கள் மீதான பல்வேறு அறிவுசார் சொத்துரிமைகள் நடைமுறைப் படுத்தப்படுவது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று இந்த முன்மொழிவில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு தள்ளுபடி செய்வதன் மூலம் அறிவுசார் சொத்துரிமை உருவாக்கியுள்ள தடைகள் தகர்க்கப்படும்; மருந்துப் பொருள்கள் உரிய நேரத்தில் அனைவருக்கும் கிடைக்கும் சூழல் உருவாகும்.

சுமார் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பு நாடுகளின் ஆதரவை இந்த முன்மொழிவு பெற்றது. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சேவை செய்யும் வளர்ந்த நாடுகள், இதற்கு எதிராக நின்றன. சர்வதேச நெருக்கடி காரணமாக அமெரிக்காவின் ஜோ ஃபிடன் நிர்வாகம் வெளிப்படையாக எதிர்க்க முடியாமல், இந்த முன்மொழிவை ஓரளவுக்கு ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது.

உலக வர்த்தக அமைப்பில் நடந்துவரும் விவாதங்கள் கோவிட்19 தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் அனைவருக்கும் கிடைத்திட வழிவகை செய்யுமா? என்ற கேள்வி உலக மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.



வி.பி.குணசேகரன்

ஜெய்பீம் என்பது அன்பு
ஜெய்பீம் என்பது மாற்றம்
ஜெய்பீம் என்பது உண்மை
ஜெய்பீம் என்பது வெற்றி
ஜெய்பீம் என்பது வெளிச்சம்

டாக்டர் அம்பேத்கரின் சட்ட போராட்ட வாழ்க்கையே ஜெய்பீம்.

75. ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பும் கையெழுத்து கேட்டால் கட்டை விரலைக் காட்டும் குடிமக்கள்,

குடிமக்கள் என்பதற்கான எந்த அடையாள ஆவணங்களும் இல்லாத பல கோடி மக்களைக் கொண்ட இந்தியக் குடியாட்சி,

சட்டமன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தல் பற்றி எந்த புரிதலும் இல்லாமல் வாக்களிக்கும் வாக்காளர்கள்.

இவர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த ஆட்சியாளர்கள்,

உயர்ந்த சாதி, பிற்படுத்தப்பட்ட சாதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதி, அட்டவணைப்படுத்தப்பட்ட சாதி, அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடிகள், என எத்தனை வகையான மக்கள். இது போக கிருத்துவம், இஸ்லாம், சீக்கியர், இந்து என பல மதங்கள். இந்த பட்டியல் எதிலுமே வராத நாடோடிகள்.

எத்தனை வேற்றுமைகள் இந்த மக்களைப் பிளக்க விதைக்கப்பட்டுள்ளன.

பல லட்சம் மக்கள் விசாரணை கைதிகளாக பல ஆண்டுகளாக சிறையில், இவர்களில் அடித்தட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட சாதி ஏழை உழைக்கும் மக்களே அதிகம் இருக்கிறார்கள். இவர்களுக்கு வழக்கு நடத்த வக்கீலுக்கு காசு கொடுக்க வசதியில்லாத நிலையில் அவர்களது குடும்பத்தினர். வருடத்திற்கு ஒரு முறை கூட இவர்களைப் பார்க்க சிறைக்கு செல்ல இயலாத நிலையில் வற்றிப்போன உறவினர்கள்.

சிறையிலும் சாதி, வர்க்கத்திற்கு ஏற்ற வசதிகள்.

இலவச சட்ட உதவியைப் பெற்று வழக்கிலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்தாலும், ஏற்கனவே நிலுவையில் உள்ள பல்வேறு திருட்டு வழக்குகளுக்கு குற்றவாளிகளை கண்டு பிடிக்க முடியாதபோது, சிறைச்சாலை முன்பே தயார்நிலையில் நிற்கும் காவல்துறை, இவர்களது சாதியை மட்டும் விசாரித்து, அவ்வழக்கில் இவர்களை இணைத்து, பொய் வழக்கு போட்டு, இதை பற்றி எதையும் விசாரிக்காமலேயே கையெழுத்திடும் நீதிபதிகள். இவற்றையெல்லாம் உள்ளடக்கிய உண்மைக் கதையே ஜெய்பீம்.

திருட்டுக்கு கூட சாதி உண்டா என்ற கேள்வியோடு தொடங்குகிறது ஜெய்பீம்.

இந்த கள எதார்த்தத்தை அறியாத படித்த கூட்டத்திற்கு இந்தப் படம் பாடம் எடுக்கிறது.

எலி பிடிக்கும்போது குட்டி’எலி அகப்பட்டுவிட்டால் அவற்றை ஓடவிட்டு மகிழும் பழங்குடி பெண் செங்கனி.

வீட்டில் புகுந்த பாம்பைபிடித்து காட்டில் விட்டு மகிழும் பழங்குடி ராசாக் கண்ணு. பழங்குடிகளின் உயர்ந்த பண்பாட்டை விளக்கும் அற்புத காட்சி. சாதி, மதங்கள் இல்லாத சமூகம் பழங்குடிச்சமூகம். ஆனால் அவர்களுக்கு வழங்கும் பழங்குடிச் சான்றில் திட்டமிட்டு அரசு அலுவலர்கள், இந்து இருளர், இந்து சோளகர், இந்து ஊராளி, இந்து மலசர் என்று மதச் சிமிலுக்குள் சேர்ப்பது சட்டத்திற்கு புறம்பான செயல்.

சவரம் செய்ய, துணி துவைக்க, பிணம் புதைக்க, செருப் புதைக்க என தனிச் சாதியை உருவாக்கி வைத்திருக்கும் சமவெளி மனிதப் பிண்டங்களிலிருந்து வேறுபட்டவர்கள் பழங்குடிகள்.

சோளகர் தொட்டி என்ற நாவலில் வழக்கறிஞர் பாலமுருகன், சோளகர் பழங்குடிகள் கேழ்வரகு விதைக்கும்போது, கண்டவர் தின்னது போக, கள்வர் தின்னது போக, காத்தவர் தின்னது போக விளைய வேண்டும் சாமி என்று பாடிக்கொண்டே விதைப்பார்களாம். இதை விட உயர்ந்த பண்பாட்டை எந்த மக்களிடம் பார்க்க முடியும்.

சொத்தின் மீது ஆசைப்படாத, இயற்கையை தெய்வமாக வணங்கி, எந்த உதவியையும் அரசிடமிருந்து எதிர்பார்க்காமல் எளிய வாழ்க்கைமுறையை கொண்ட பழங்குடிகளை சித்திர வதை செய்யும் அரசின் கருவிகளை சித்திரப்படுத்தியது சோளகர் தொட்டி நாவல்.

குரலற்ற பழங்குடிகளை அமைப்பாக்கி அவர்களின் துயரங்களை போக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழி காட்டுதலில் தோழர் நஞ்சப்பன் தலைமையில் உருவாக்கப்பட்டு செயல்படும் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம்தான் வீரப்பனை பிடிக்க நியமிக்கப்பட்ட அதிரடிப்படையின் அத்துமீறலை, பழங்குடிகள் பட்ட வேதனையை, சித்திரவதையை தேசிய மனித உரிமை ஆணையத்தின் மூலம் அம்பலப்படுத்தி தடுத்து நிறுத்தியது.

இதில் நீதிபதி சதாசிவா, **CBI** இயக்குனர் நரசிம்மன் இணைந்து நடத்திய விசாரணையில்தான், அதிரடிப்படையினரால், சட்டவிரோத முகாம்களில் வருடக்கணக்கில் குழந்தைகள், பெண்கள் பெற்ற சித்திரவதைகளை, சுட்டுகொல்லப்பட்டவர்களின் பட்டியலை, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களை, மனநிலை பாதிக்கப்பட்டவர்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது.

நீதித்துறையிலும், காவல்துறையிலும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற சிறு நம்பிக்கையை துளிர் விடச் செய்தது.

ஜெய்பீமில் வரும் சந்துருவைப்போல, வீரப்பன் வழக்கில் மோகன், பாலமுருகன், ஹென்றி, பாட்சா, வின்செண்ட் போன்ற வழக்கறிஞர்களின் பங்கு பாராட்டுக்குரியது.

ஜெய்பீம் பட இயக்குனர் ஞானவேல், நீதிபதி சந்துருவிடம் பல நாட்கள் கலந்துரையாடி, இருளர் பழங்குடிகளின் பண்பாட்டையும், காவலர்களுக்கு வழங்கப்படும் 80 வகையான சித்திரவதை பயிற்சிகளை ஏழைகள் மீது செயல்படுத்தி காட்டும், ஏழை காவலர்களின் பரிதாப நிலையையும் காட்டியுள்ளார்.

இவர்கள் மீது குற்றம் இல்லை, இவர்களை தனது சக மனித உறவுகள் மீதே சித்திரவதையை செய்யவைக்கும் முதலாளித்துவ சமூகத்தைதான் குற்றம் சொல்கிறது ஜெய்பீம்.

மனித சமூகத்தில் நிலவும் பொருள் உற்பத்தி முறைக்கு ஏற்பத்தான் மனிதனின் சிந்தனைகள், சட்டம், நீதி, நிர்வாகம், சிறைகொடுமைகள், அரசு இருக்கும் என்ற காரல்மார்க்சின் வரலாற்று ஆய்வினை எடுத்துச் சொல்கிறது ஜெய்பீம்.




**ஒடுக்கப்பட்ட மக்கள் அமைப்பாகாமல் சந்திக்கும் சிக்கலை தீர்க்க முடியாது என அவர்களுக்காகவே போராடும் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடி தோழர்களின் தியாகத்தை, நேர்மையை, துணிச்சலை எடுத்துக்காட்டுகிறது ஜெய்பீம்.**

இந்த வழக்கு ஒட்டுமொத்த அதிகார அமைப்பை அம்பலப் படுத்தவே என்று, சொல்லும் வழக்கறிஞர் சந்துரு, மற்ற வழக்கறிஞர்களையும் கேள்விக் குள்ளாக்குகிறார். வேடிக்கை பார்க் காதீர்கள் வினையாற்றுங்கள் சட்டத்தின் ஆட்சி என்பது உண்மையா என்கிறார் சந்துரு.

எப்போதும் உண்மையே வெல் லும், எத்தனை முறை கேட்டாலும் உண்மையைத் தான் பேசவேண்டும் என்று செங்கனியிடம் சொல்லும் சந்துரு.

நீதிமன்றத்தின் மவு னம் ஆபத்தானது என்று நீதிபதிகளின் மனசாட்சியை கேள் விக்குள்ளாக்குகிறார் சந்துரு.

வழக்கு நடத்த தங் களுக்கு கொடுக்க என் னிடம் காசு இல்லையே என்ற செங்கனியிடம், பிறக்கும்போதே வக்கீலாக நான் பிறக்க வில்லை, மனிதனாகத்தான் பிறந்தேன். சமூகம் தான் என்னை வாழ வைக்கிறது. நீங்கள் எப்படி பாம்பு கடிக்கு சிகிச்சைக்கு வருபவர்களிடம் காசு கேட்காமல் சிகிச்சை அளிக்கிறீர்களோ, அது போல் எனக்கும் சமூக கடமையுண்டு என்று சொல்கிறார் சந்துரு.

மனிதர்கள் அனைவரும் சமூகம் சார்ந்தவர்கள் , தனி மனிதர்கள் அல்ல, சமூகத்தால் தான் வளர்க்கப்படுகிறோம், பாதுகாக்கப்படுகிறோம் என்ற மார்க்சின் கூற்றை நினைவு படுத்துகிறார் சந்துரு.

ஆதரவற்றவனுக்கு இறைவன் தான் புகலிடம் என்று சென்றால், நீ கல்லாய் நிற்கறாயே இறைவா என்ற பாடல்வரிகள், அமைப்பின் அவசியத்தை பாடுகிறது

உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள் என்று தொடர் சித்திரவதைக்குள்ளாக்கும் காவலர்களிடம், செய்யாத குற்றத்தை எப்படி ஏற்பது, எத்தனை முறை அடித்தாலும் ஏற்க முடியாது,,அடிபட்ட காயங்கள் ஆறிவிடும், அடிக்கு பயந்து ஏற்றுக்கொண்டால் காலம் முழுதும் திருடன் என்ற பட்டம் நிலைத்துவிடும் என்ற ராஜாக்கண்ணுவின் சொற்றொடர் உழைத்து வாழ்பவர்களின் உள்ளக்கிடக்கையை உணர்த்துகிறது.

காவல்துறை உயர் அதிகாரிகள் செங்கனியை அழைத்து பல இலட்சம் இழப்பீடு கிடைக்க ஏற்பாடு செய்கிறோம், வழக்கை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்றபோது,

அப்பனை கொன்ற காசை வைத்து பிள்ளைகளை வளர்ப்பதா என்ற செங்கனியின் கேள்வி, ஏழைகள் காசுக்காக பீ தின்பவர்கள் அல்ல என்ற உண்மையை உணர்த்துகிறது.

வசதி படைத்தவர்கள், சாதி செல்வாக்கை பயன்படுத்தி தங்கள் திருட்டை மறைத்து எப்படியும் தப்பித்து விடுகிறார்கள்.

வசதி படைத்த திருடர்கள் பல்லாயிரம் கோடி மக்கள் பணத்தை திருடியவர்கள் எத்தனை பேர் இப்படிப்பட்ட சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர் என்ற கேள்வியை எழுப்புகிறது ஜெய்பீம். ஒரு துயரத்தை சொல்கிறது ஜெய்பீம். வெளிச்சத்திற்கு வராத பல துயரங்கள் மண்ணில் புதையுண்டு கிடக்கிறது.

தொடர்புக்கு : **94427 55120**















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
Day of Publication: Every Thursday WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 13.11.2021 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



# பூவுலகையும் – மனித குலத்தையும் பாதுகாத்திடுவீர்!

**பூவுலகையும் – மனித குலத்தையும் பாதுகாத்திட அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று ஐ.நா.சபை பொது செயலாளர் கூறியுள்ள கருத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வரவேற்கிறது.**

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அறைகூவல்

ஸ்காட்லாந்து நாட்டு ஃகிளாஸ்கவ் நகரில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மாநாட்டில், “நாம் செயல்படத் தவறும் பட்சத்தில் நமக்கான சவக்குழியை நாம் தோண்டுகிறோம்“ என்று 190 நாடுகளின் தலைவர்களையும், ஐ.நா.சபை பொது செயலாளர் எச்சரித்துள்ளார்.

புவி வெப்பமயமாதலை 1.5 டிகிரி சென்டிகிரேட் அளவிற்கு குறைப்பதற்காக 2015 இல் நடைபெற்ற பாரிஸ் மாநாட்டில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன. அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் ஆட்சிக்காலத்தில் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியது. இப்போது அதிபர் ஜோ ஃபிடன் ஆட்சியில் அந்நாடு மீண்டும் இணைந்துள்ளது.

பாரிஸ் மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அமெரிக்கா மற்றும் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளும் உறுதிப்பாட்டுடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்று கட்சி சுட்டிக்காட்டுகிறது. அந்த மாநாட்டில் முடிவு செய்தபடி 2030ஆம் ஆண்டுக்குள் பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தை 45 சதவீதம் வரையிலும், 2050ஆம் ஆண்டில் பூஜ்ஜியம் அளவிற்கு குறைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வளர்ந்த நாடுகளே மிகப்பெரிய அளவிற்கு பூமண்டல மாசுபாட்டிற்கு காரணமாக இருக்கின்றன. எனவே, இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதிலும், வளர்ந்த நாடுகள் பொறுப்பேற்க வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது.

சீனா 2060ஆம் ஆண்டுவாக்கிலும், இந்தியா 2070ஆம் ஆண்டுவாக்கிலும் பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தை பூஜ்யம் அளவிற்கு குறைத்திட ஒப்புக் கொண்டுள்ளன.

வளரும் நாடுகளும், வளர்ச்சியுறாத நாடுகளும் மிகப் பெரிய அளவிற்கு பூவுலகிற்கு மாசுபாடு ஏற்படுத்துவதில்லை. அத்தகைய நாடுகளுக்கு அவற்றின் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட நிதியும், தொழில்நுட்பமும் தேவைப் படுகிறது. வளர்ந்த நாடுகள் வெற்று முழக்கங்களை முழங்குவதற்குப் பதிலாக, வளரும் மற்றும் ஏழை நாடுகளுக்கு உதவிட முன்வரவேண்டும். வாக்குறுதி அளித்தபடி 100 பில்லியன் அமெரிக்க டாலரை வளர்ந்த நாடுகள் வழங்கவில்லை. அண்மையில் நடைபெற்ற ஜி20 நாடுகள் கூட்டத்திலும் இது தொடர்பாக கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்திற்காக சுற்றுச்சூழலைச் சீரழிக்கும் வகையில் உள்நாட்டு கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. இதன் காரணமாக, சுற்றுச்சூழல் தொடர்பான இலக்குகளை நீர்த்துப் போகச்செய்யும் போக்கும் உருவாகி இருக்கிறது. இது போன்ற உள்நாட்டு கொள் கைகள் தொடரும் வரையில், அளிக்கப்படும் வாக்குறுதிகள் அனைத்தும் அர்த்தமற்றவை ஆகும். நமது நாட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்திற்காக சுற்றுச்சூழலைச் பாதுகாப்பதில் சமரசம் செய்து கொள்ளும் போக்கு தொடர்கிறது.

வளர்ந்த நாடுகள், வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், மனித குலத்தையும், பூமண்டலத்தையும் பாதுகாத்திட வேண்டும் என்றும் கட்சியின் தேசிய செயற்குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வளரும் நாடுகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அவற்றின் நீடித்த மேம்பாட்டுக்கான உள்நாட்டு கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

### காலதாமதமாக செய்யப்பட்ட


# பெட்ரோல், டீசல் விலை குறைப்பு போதுமானதல்ல

## சிபிஐயின் தேசிய செயற்குழு கண்டனம்

பெட்ரோல் மற்றும் டீசல் விலை குறைப்பு காலதாமதமாக செய்யப்பட்டுள்ளது என்றும், விலை குறைப்பும் போதுமானதல்ல என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

பெட்ரோல் மீதான மத்திய அரசின் கலால் வரி லிட்டருக்கு ரூபாய் 5 மற்றும் டீசலுக்கு ரூபாய் 10 குறைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்திருப்பது மிகவும் காலதாமதமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். விலை குறைப்பும் போதுமானதாக இல்லை. அண்மையில் நடைபெற்ற மக்களவை மற்றும் மாநில சட்டமன்ற தொகுதிகள் இடைத் தேர்தலில் பாஜகவுக்கு ஏற்பட்ட பின்னடைவு தான் மோடி அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு காரணம் என்று கட்சி கருதுகிறது.




மத்திய அரசாங்கம் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மத்திய வரிகள் அனைத்தையும் ரத்துசெய்தால் மட்டுமே அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் பொதுமக்களுக்கு உண்மையான பயனைத்தரும் என்றும் கட்சி வலியுறுத்துகிறது.

## கார்ட்டூன்




# டாக்டர் வே.துரைமாணிக்கத்திற்கு தமிழகம் முழுவதும் அஞ்சலி









தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினருமான டாக்டர் வே.துரைமாணிக்கம் நவ.2 அன்று மறைந்தார். அவரது மறைவுக்கு தமிழகம் முழுவதும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**கிருஷ்ணகிரி:** தேன்கனிக்கோட்டை தாலுகாவில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் டாக்டர்ட வே.துரைமாணிக்கம் திருவுருவப்படத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் டி.ராமச்சந்திரன் அஞ்சலி செலுத்தினார். ஒசூர் மாநகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் விவசாய சங்க மாநில செயலாளர் வே.துரைமாணிக்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. கிருஷ்ணகிரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் ஜி.சிவராஜ் தலைமையில் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. நகரத் துணைச் செயலாளர் சி.முனியன், இளைஞர் பெருமன்ற செயலாளர் பி.உபேத்,மாவட்ட கட்டுமான சங்க பொருளாளர் பி.பெருமாள், நகர பொருளாளர் இக்பால், கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி கிளை தலைவர் எஸ்.பாண்டியன் பி.எஸ்.என்.எல். முருகேசன், ஒன்றிய குழு வி.முருகன், கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி துணைத்தலைவர் வி.கருணாகரன், கே.பாலசுப்பிரமணி, வெங்கடசாமி, பி.ஜோதி ஆகாஷ்பி.ஹரிஹரசுதன் உள்ளிட்ட தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

**திருச்சி புறநகர் :** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு டாக்டர் வே.துரைமாணிக்கம் திருவுருவப் படத்திற்கு வி.ச. மணப்பாறை ஒன்றிய தலைவர் சி.தங்கராசு, ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, வி. தொ.ச.மாவட்ட தலைவர் சண்முகானந்தம், சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், உட்பட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க தோழர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்

**தருமபுரி:** டாக்டர் வே.துரைமாணிக்கம் மறைவுக்கு தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சின்னசாமி, ஏஐடியுசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட பொது செயலாளர் கே.மணி, விதொச மாவட்டச் செயலாளர் பிரதாபன், கட்டட சங்க மாவட்டச் செயலாளர் சுதர்சனன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன், நிர்வாகிகள் பிரசாத், மாதையன், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.விசுவநாதன் ஆகியோர் பங்கேற்று டாக்டர் வே.துரைமாணிக்கம் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து இரங்கல் தெரிவித்தனர். அரூரில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், ஒன்றிய செயலாளர் அல்லிமுத்து, வி.ச. வட்டார செயலாளர் கே.டி.ராஜி, சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் இரா.சிசுபாலன், ஒன்றிய செயலாளர் குமார், வி.சி.க. கிழக்கு மாவட்டச் செயலாளர் ஜானகிராமன், ஒன்றிய செயலாளர் மூவேந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தேனி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேனி மாவட்டக்குழு அலுவலகத்தில் டாக்டர் வே.துரைமாணிக்கம் அவர்களுக்கு, மூத்த பெ.தங்கம் தலைமையில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.திருமலைக்கொழுந்து, வே.பெத்தாட்சி ஆசாத், மாவட்ட பொருளாளர் ப.செல்லன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா. தமிழ் பெருமாள், மாவட்ட தலைவர் க.அய்யனார், மாவட்ட துணைத் தலைவர் த.வீரையா, சிபிஐ நகர துணைச் செயலாளர் ஆர்.வெங்கடேசன், வி.வெள்ளைப் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.